வசந்தம்

விலை
8
அணா

சுபானு - ஐப்பசி

1943 - அக்டோபர்

சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங் களுக்கும்
P.A.ராஜுசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"

தந்திவிலாசம்: **FLOWER.** டெலிபோன் நெ. 175.

சௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்.

இரும்பு, எலக்ட்ரிக், மில் ஸ்டோர்ஸ் வியாபாரிகள்,
அவனாசி ரோடு, கோயமுத்தூர்.

சேர்மன் போர்டு ஆப் டைரக்டர்ஸ்

டாக்டர். ராஜா. சர் அண்ணாமலை செட்டியார், KT. LL. D.

ஆப் செட்டிநாடு.

தலைமை ஆபீஸ் செட்டிநாடு.

எங்களிடம், எல்லாவிதமான டாட்டா இரும்புச் சாமான்களும், கலாய் குழாய்களும், நீலகிரி மார்க் சிமிண்டும், குட்லஸ் வால்வர்ணம் வகையறாக்களும், சானிபட்டரிச் சாமான்களும், எலக்ட்ரிக் பல்புகள், வயர்கள், பங்காக்கள், மோட்டார், சுவிட்சுகள், முதலியவைகளும், மில் ஸ்டோர்ஸ், பாபின்ஸ், தோல் பெல்ட்டுகள், கிராப்ட் பேப்பர், ஊப் தகடுகள், கித்தான்கள் கிடைக்கும்.

பிராடியூஸ் டிபார்ட்மெண்டு,

21/138, 139, ரெங்கய்ய கவுடர் தெரு

நெல், அரிசி, கோதுமை, ரவை, மாவு தினுசுகள், சர்க்கரை நவதானியங்கள், மற்றுமுள்ள மளிகை சாமான்கள் எங்களிடம் மொத்தமாகக் கிடைக்கும்.

பீஸ் கூட்ஸ் டிபார்ட்மெண்டு ("கமர்ஷியல் எம்போரியம்")

21/138, 139 ரெங்கய்ய கவுடர் தெரு

பல மில்களில் தயாராகும் ஷர்ட்டிங், கோட்டிங், மல், லாங்க்ளாத், வாயில்ஸ், சீட்டி தினுசுகள், டிரில், டுவில், வேஷ்டிகள், துண்டுகள், இன்னும் பலவிதமான மில் ஜவுளி தினுசுகளும், எங்களிடம், மொத்தமாகவும், சில்லரையாகவும், சகாயமாகவும் கிடைக்கும்.

8-MAY 1944
MADRAS

LEASE - LEND RADIOS

ORDERS BOOKED NOW

FOR

ARRIVING Models of

★ R. C. A.

★ PHILIPS

★ WESTING HOUSE

AT

GOVNT. CONTROLLED PRICES.

MARCONI VALVES

AND

SPARES IN STOCK

SRI RAMA VILAS SERVICE Ltd.,

202-203, MOUNT ROAD, MADRAS.

(Sole distributors for MARCONIPHONE radios for the MADRAS PRESIDENCY including states.)

ஆட்டமும்
பாட்டமும்
சிரிப்பும்
சிங்காரமுமாக
ஒரே
அமர்க்களம்
ஜெமினி
மங்கம்மா
சபதம்
சென்னை
ஸாகர்.. கிரௌன்.
..இரு தியேட்டர்களிலும்....
மற்றும் பல முக்கிய
நகரங்களிலும்
நடைபெறுகிறது

டெலிபோன் : 100. தந்தி: "தாஸ்கௌட்"

N. தாசேகவுண்டர் & கோ.

ஏஜண்டுகள்: அண்டர்வுட் டைப்ரைட்டர், பேவர் லூபா, மெரிடினு, ஒமெகா, டிஸ்ஸாட் வாட்சுகளுக்கும் மற்ற வகை கடியாரங்களுக்கும்.

மருந்து வகைகள், வைத்தியக் கருவிகள், நூதன சாமான்கள், எனமல் கண்ணாடி சாமான் தினுசுகள் முதலியவைகளுக்கும் சிறந்த இடம்.

இன்னும்,

உங்கள் தேவைகளுக்கு எங்களை விசாரியுங்கள்.

N. Dasai Gownder & Co.,

CHEMISTS & DRUGGISTS,

Avanashi Road, Coimbatore

தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங், எஸ்பிளனேட், மதராஸ்.

பிராஞ்சுகள்:

ஆலப்புழை, பம்பாய், கண்ணனூர், கோயமுத்தூர், தேவக்கோட்டை, காரைக்குடி, மதுரை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சேலம், சிவகெங்கை.

வெளியிடப்பட்டு வசூலான மூலதனம்	ரூ. 50,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 22,27,000
ரிஸர்வ் நிதி	ரூ. 7,00,000

கனம் எம். ஸிடி. எம். சிதம்பரம் செட்டியார், சேர்மன்.

பிக்ஸட் டிபாசிட்டுகளும் கீழ்க்கண்ட விதத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்

6–மாதத்துக்கு	2%
12 ,, ...	2¼%
24 ,, ...	2½%

எல்லாவித பாங் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்படும்

எஸ். டி. சதாசிவம், ஜெனரல் மேனேஜர்.

தீபாவளிப்பண்டிகை என்றைக்குமே!

தீபாவளி பெரும் கொண்டாட்ட நாள்

தீபமகோற்சவம் — பாரத நாடு பூராவுமே லக்ஷக்கணக்கான ஜனங்கள் உவந்து கொண்டாடும் பண்டிகை! இந்த சந்தோஷ சமயத்தில் டாடா ஆயில் மில்ஸ் கம்பெனியார் தங்கள் நேயர்களுக்கு மங்கள வாழ்த்து கூறுவதுடன் தேச சேவையே எப்பொழுதும் கம்பெனியின் நோக்கமென்பதையும் திரும்பவும் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிருர்கள்.

தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்



பொருளடக்கம்

மலர் 2] [இதழ் 7

ஒப்பிலாநி
டி. கே. சி ...

அமைதியும் ஆவலும்
ரா. நா ... 9

கலியாணக்கதை
கே. விஜயராகவன் ... 12

கலைக் கோயில்
சுத்தானந்த பாரதி ... 17

புத்தக ஆராய்ச்சி
... ... 25

ஹாஸ்ய நடிகன்
கே. பி. கணபதி ... 27

தீபாவளி
கே. வி ராகவன் ... 36

சிலப்பதிகாரம்
சண்முகம் செட்டியார் ... 39

கிராமியக்காட்சி
"ரதி" ... 46

தாபம்
"சுகி" ... 48

முரசுக் கட்டில்
கு. விசுவநாதன் ... 52

சாவித்திரி
ஆர். ஷண்முகசுந்தரம் ... 54

படித்த பெண்கள்
பி. கோதண்டராமன் ... 63

வீணுகானம்
திருஞானம் ... 75

மலர் மணம்
... ... 81

ஸ்தாபகர்.

A. P. ராமசாமி
செட்டியார்.

உத்திரவாத நல்லெண்ணெய்
ஸ்டோர்ஸ் (Redg.)

புதுமார்க்கட்,

கோயமுத்தூர்.

எமது உத்தரவாத நல்லெண்ணெய் மில்லில் தயாராகும் உத்திரவாத நல்லெண்ணெய் 30, வருஷங்களாக கனதனவான்களாலும், டாக்டர்களாலும், வைத்தியர்களாலும் உபயோகப் படுத்தி நற்சாக்ஷி பத்திரங்களும் நன் மதிப்பும் வாய்ந்தது.

எமது நல்லெண்ணெயின் குணங்கள்

கலப்பற்றது, கசப்பற்றது, கமுறற்றது, மணமுற்றது, நோயற்றது என உத்திரவாதத்துடன் சப்ளை செய்கிறோம்.

உங்களது குடும்ப உபயோகத்திற்கு எமது நல்லெண்ணெய் மிக்க மேலானது. ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள். உண்மை விளங்கும்.

R. L. சுப்பிரமணிய செட்டி
ஜெனரல் செகரெட்டரி.

A. P. R. Oil Mills, Fort,
COIMBATORE.

நீண்ட தமி ழால்உ லகை
நேமி யன்அ ளந் தான்
—கம்பர்

ஒப்பிலாதி

(டி. கே. சி)

திருச்சினப் பள்ளி ஜில்லாவைச் சேர்ந்த அரியலூருக்கு, கிருஷ்ணைய மழவராயர் தலைவராய் இருந்தார். தமிழில் ரொம்பவும் ஈடுபட்டவர். அன்னதானம் செய்வதிலும் இணையற்றவராய் இருந்தார். அதுகாரணமாக ஒப்பிலாத மழவராயர் என்ற பேருக்கும் உரியவராய் இருந்தார். அவரது வள்ளன்மையை ஒரு நாள் பார்த்தால்ப் போதும், நாம் சும்மா இருக்க முடியாது: பாடலாகவே பாடத் தூண்டும். அப்படித் தூண்டிய புலவர் ஒருவரது பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

மழவராயர் பிறந்த இடம் குன்றை என்பதாகத் தெரிகிறது.

சேயசெங் குன்றை
வரும் ஒப்பி லாதிக்குச்
செங்கம லத்
தூய செங் கண்ணன்
இணை ஒப்ப னே?

செங்கண்மால் ஒப்பாகான் என்கிருர் புலவர். ஏனே.

இணை ஒப்ப னே? தண்
துழாய்அணிந் த
மாயன் அளக்கும்
படிமூன்று: கிட்ணைய
மாமழ வ
ராயன் அளக்கும்
படியோ ஒ (கு)
இலக்கம் உ டே!*

* (தமிழ் நாவலர் சரிதை; பெருந்தொகை)

மாயன் அளந்ததெல்லாம் மூன்றுபடிதான் (மூன்று உலகம்) மழவராயன் அளக்கும் நித்தியப் படித்தரமோ லக்ஷம் படி அரிசி [சேய — வானத்தை அளாவிய] பாட்டின் முழு உருவத்தைப் பார்க்கலாம்.

(கட்டளைக் கலித்துறை)

சேயசெங் குன்றை
வரும் ஒப்பி லாதிக்குச்
செங்கம லத்
தூய செங் கண்ணன்
இணைஒப்ப னோ? தண்
துழாய்அணிந் த
மாயன் அளக்கும்
படிமூன்று: கிட்டணைய
மாமழ வ
ராயன் அளக்கும்
படியோ ஒருநாட்(கு)
இலக்கம் உண் டே!

கட்டளைக் கலித்துறையில் விஷயமானது முந்தடி பிந்தடி எல்லாம் நடந்து எத்தகைய லாகவத்தோடு வலசாரி சுற்றுகிறது என்பதைப் பாருங்கள். பாடிப்பாடி அனுபவித்துக் கொண்டே இருக்கலாம். லாகவமெல்லாம் இதயத்திலிருந்து பிறப்பதுதான்.

★

அட்டைச் சித்திரம்:

மனத்தாகம்

சங்கு வளைக்கரத்தாள் — இளநீர்
தாங்கிக் குடிக்கையிலே,
கொங்கை துடி துடிக்க — ஆசை
கொண்ட கனவுடனே

பொங்கு மனத்தாகந் — தணியப்
பூ விழிக் கோணத்தினுல்
அங்கொரு பொன் முகத்தை — அவள்
அள்ளிப் பருகுகின்ருள்!

— கதிரவன்

அமைதியும் ஆவலும்

[ரா. நா.]

ஒரு ஆங்கிலேயன் கிணற்றுக்குள் விழுந்து விட்டான்; ஆனால் நீந்தத் தெரியாது. மற்றொரு ஆங்கிலேயன் மேலேயிருக்கிறான்; அவனுக்கு நீந்தத் தெரியும். கிணற்றை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டு நிற்கிறான். விழுந்தவனைக் காப்பாற்ற முயற்சிக்கவில்லை. இந்த சமயம் அந்தவழியாக ஆங்கில ஜாதியைச் சேராத வெள்ளையன் ஒருவன் போய்க் கொண்டிருந்தான். கிணற்றருகில் நின்று கொண்டு எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவனைப் பார்த்தான். ஏன் அவன் அப்படி நிற்கிறான்! கிணற்றில் விழுந்துவிட உத்தேசமோ என்கிற சந்தேகம். அருகில் சென்று, "ஏனப்பா இங்கு நின்று கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். "உள்ளே ஒருவன் விழுந்து விட்டான். அவனை விடுவிக்க வேண்டும். ஆனால் அவன் எனக்கு அறிமுகமில்லை. ஆகையால் எப்படி உதவி புரிவது என்று தோன்றவில்லை" என விடையளித்தான். "பாழாய்ப் போன சம்பிரதாயம்! ஆள் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கையில் பேஷாயிருக்கிறது உன் மனவேதனை" என்று சொல்லி விட்டு வழியே சென்ற வெள்ளையன் கிணற்றிலிறங்கி உள்ளேயிருந்த ஆங்கிலேயனை விடுவித்தான். ஆங்கிலேயருடைய இருதய பாவத்தைப் பற்றி இம்மாதிரி ஒரு கதை உண்டு.

* * *

ஆனால் நம் நாட்டு விஷயம் இதற்கு நேர் மாறானது என்று நான் சொல்லத் தேவையில்லை. அயலாருடைய அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி பூரணமாகத் தெரிந்து கொள்ளாவிட்டால் நமக்குத் தூக்கம் வருவதில்லை.

எதிர் வீட்டில் ஒரு வயதான தாய் இருக்கிறாள். அவளுக்கு ஒரே பிள்ளை. அவன் எங்கேயோ உத்தியோகமாயிருக்கிறான். விவாகமாகவில்லை. இருபத்தைந்து வயதுக்கு மேலாகியும் ஏன் விவாகமாகவில்லை. தாய் மகன் வரவை எதிர் பார்த்தே நிற்கிறாள். ஆனால் அவன் வாய் வார்த்தையில்லை. ஒரு இளம் புன்முறுவல் கூட இல்லை. நேராக உள்ளே செல்கிறான். பேச்சு சந்தடியேயில்லை. சில நிமிஷங்களுக்கெல்லாம் மறுபடியும் வெளியே செல்லுகிறான். ஏக்கம் நிறைந்த முக பாவத்துடன் தாய் மகன் வெளியே செல்வதைப் பார்க்கிறாள். ஏன்? அவன் எதற்காக இப்படியிருக்கிறான். யார் சொல்ல முடியும்?

* * *

நாலு வீடு தள்ளி இருபது வயசில் ஒரு பெண் இருக்கிறாள். இருபத்தைந்து வயதிருக்கும் ஒரு இளைஞன் இருக்கிறான். பெண் பி. ஏ பாஸ் பண்ணியவளாம். பையன் டாக்டர் பரிட்சை தேறி விட்டான். அவர்கள் உடன் பிறந்தவர்களல்ல என்பது முக சாயலிலும், அவர்கள் கைகோர்த்துக் கொண்டு உலாவச் செல்வதிலிருந்தும் தெரிகிறது. அவர்களுக்கு விவாகமானதாகத் தெரியவில்லை. இப்படியே நான்கு வருஷங்களாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் ஏன் விவாகம் செய்து கொள்ளவில்லை. ஒருவேளை

பெற்ருேர் சம்மதிக்கவில்லையோ? ஊர் மலையாளத்துக் கருகிலாம். அவர்கள், பிறந்த ஊர் செல்வதைக் காணேம். உற்ருர் உறவினரும் அவர்கள் இடத்திற்கு வருவதைக் காணேம். ஏன்?

* * *

ரம்பை என்ருல் அவளைத்தான் சொல்ல வேண்டும். அண்டை வீட்டுக்குச் சென்று வம்பளப்பதில்லை. தன் வேலையுண்டு தானுண்டு என்று இருக்கிருள். ஆனல் முகத்தில் சந்தோஷ சின்னம் எதையும் காணவில்லை. அவள், புருஷன் வீடு புகுந்த நாளிலிருந்து சிரித்து யாரும் பார்த்ததில்லை. புருஷனும் ராஜாமாதிரியிருக்கிருன். இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போலிருக்கும். ஆனல் இந்த தம்பதிகளை சேர்ந்தாப்போல் யாரும் பார்த்ததில்லை. இளம் தம்பதிகளென்ருல் ஒன்ருக ஒரு சினிமாவுக்கோ, கோவில் குளத்திற்கோ, தேர் திருவிழாவிற்கோ போக மாட்டார்களோ? கிளம்பியதே கிடையாது. ஒரே யந்திர வாழ்க்கை. இவர்கள் இல்லற இன்பத்திற்குத் தடையாயிருப்பது என்ன?

* * *

அவனுக்கு கலியாணமாகி நாலு ஐந்து வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. கலியாணமாகி சீரும் செனத்தையுமாய் அவன் தன் பந்துமித்திரர்களுடன் வந்திறங்கியதை எல்லாரும் பார்த்தார்கள். மணப் பெண் ஏன் இன்னும் கணவன் வீட்டிற்கு வரவில்லை. பெண் வீட்டார் ஏதாவது ஏமாற்றி விட்டனரா? அதற்கு அந்தப் பெண் என்ன செய்யும்? அல்லது அந்தப் பெண்ணே பெரும் ஏமாற்றமாகப் போய்விட்டதா? என்னமோ உண்மை தெரியவில்லை. அவன் வீட்டார் இரண்டாம் விவாகத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த விபரீதம் ஏன்?

* * *

அப்ஸரஸ்மாதிரி மனைவியிருக்கிருள். சுவர்ண விக்ரகம் என்று சொல்ல வேண்டும் அம்மாதிரி குழந்தைகள் துள்ளி விளையாடுகின்றன. கணவன் வீட்டில் தங்குவதில்லை. குழந்தைகளின் கொஞ்சும் மொழிகள் அவன் உள்ளத்தைத் தொடவில்லை. மனைவியின் மங்கா ஒளியும் அவனை மயக்க முடியவில்லை. அவனை எந்த காந்தம் இழுக்கிறது? என்னென்னவோ சொல்லிக் கொள்கிருர்கள், அவனுக்கு சினிமாக் கம்பெனியில் வேலையாம். அங்கு ஒரு நடிகை.........என்ஊர் வம்பு நமக்கெதற்கு என்ருலும் மனம் கேட்கவில்லை. அந்தப் பெண்ணும், இந்தக் குழந்தைகளும் ஏன் நிராதரவாய் இருக்க வேண்டும்?

* * *

அந்தக் கோடி வீட்டு கோவிந்தன், ஏதோ கையெழுத்துப் போடத் தெரியும். படிப்பு என்கிற வாசனையே கிடையாது. எங்கும் அவனுக்கு உத்தியோகம் இருப்பதாகத் தெரியவில்லை. டிராம், பஸ் பீச் எங்கு வேண்டுமானுலும் பார்க்கலாம். அவன் வாசாலகம் எங்கும் வியாபகம். அவன் சம்பாத்தியத்திற்கு அளவே இல்லை. பணத்தில் புரளுகிருன் என்று சொல்ல வேண்டும். இவ்வளவு பணத்தையும் எப்படி சம்பாதிக்கிருன். யார் தலையில் கை வைக்கிருன்? நமக்கென்ன என்ருலும் சும்மா இருக்க முடியவில்லை.

என்ன செய்வது? நம்முடைய வாழ்க்கை இப்படி அமைந்து

விட்டது. ஆங்கிலேயர் மாதிரி உறைந்த ஹிருதயம் உள்ளவர்களாயிருப்பது மனிதப் பிறவிக்கே ஒத்ததல்ல. ஆனால் இப்படி ஊர் விசாரத்தை யெல்லாம் தலையில் போட்டுக் கொண்டு வாழ்வதும் சரி யென்று தோன்ற வில்லை.

ஆனால் சமூகம் என்றால் சுற்றிலு முள்ளவர்கள் வாழ்க்கையில், அவர்கள் வளர்ச்சியில், அவர்கள் இன்பம் பெறுவதில் ஓரளவுக்கு அக்கரை காட்டா விட்டால் மனிதராய்ப் பிறந்து என்ன பயன்? ஆனால் இந்த அக்கரை, அயலாருக்கு ஆபத்தாக முடியலாகாது. இதை மாத்திரம் மனதில் வைத்துக் கொண்டால் நாமும் நம்மவரும் உயர்ந்து கொண்டே உயரப் பறக்கலாம்.

கலியாணக் கதை

[கே. விஜயராகவன்]

என்னுடைய நண்பர் இந்தக் கதையைப் படித்து விட்டு ஒரு முகவுரை இதற்கு எழுதி விடும்படி என்னிடம் சொன்னர். சாதாரணமாக நாவல்களுக்கும் நவீனங்களுக்கும் முகவுரை எழுதுவதை நானும் பார்த்திருக்கிறேன். கதைக் கொத்துகளுக்கு முகவுரை எழுதுகிருர்கள். இந்தச் சிறு கதைக்கும் ஒரு சின்ன முகவுரை வேண்டுமா அதுவும் நானே எழுதிக் கொள்ளவும் வேண்டுமா என்பதை யோசிக்கையில் பெர்னுட் ஷாவின் ஞாபகம் வந்தது. அவருடைய நாடகங்களை விட அவர் அந்த நாடகங்களுக்கு எழுதும் முகவுரை சிலாக்கியமாயிருக்கிறது என்று சிலர் புகழ்வதைக் கேட்டிருக்கிறேன். அதனுல்தான் நாடகத்தை விட முகவுரை பெரிதாக ஷா எழுதிவிடுகிருராம். ஒரு வேளை என் கதைகளை விட என் முகவுரை நன்ருயிருந்து, அதன் மூலம் என் பேரும் புகழும் பெருகட்டும் என்ற நோக்கத்தோடு என் நண்பர் ஒரு வேளை சொல்லியிருக்கக் கூடுமல்லவா? அது ஒரு காரணமாக வைத்துக் கொண்டாலும், பாலுக்குப் பாத்திரம் போல் கதைக்கு இந்த முகவுரை இன்னெரு விதத்தில் உதவியாயிக்க வேணும் என்பது என் அந்தரங்க ஆசை.

எத்தனையோ கலியாணங்களை பார்த்திருக்கிறேன். ஏன்? எனக்கும் ஒரு தடவை கலியாணமானதாக ஞாபகம். (ரொம்ப நாளாகி விட்டதால் இப்படிச் சொல்கிறேன்) இது தவிர காதல்க் கலியாண வைபவங்களை பல நாவல்களிலும் நான் படித்திருக்கிறேன். அவைகள் எல்லாம் கீழே நடந்த கலியாணத் தம்பதிகளின் மன நிலைக்கு ஒத்துக் கொள்ள வில்லை. அப்படி என்ன. புதுமை இதில் இருக்கிறது என்ருல், ஓகோ! நான் சொல்லப் போவதைக் கண்டு கொண்டீர்கள் அல்லவா? இனி என் முகவுரை தேவை யில்லை. ஊம், தைரியமாகப் படியுங்கள்.

செல்வச் சிரஞ்சீவி சென்னியப்பனுக்கும் செளபாக்யவதி சிவகாமிக்கும் சுபயோக சுப லக்கினத்தில் கலியாணம் நிச்சயிக்கப் பட்டு சிறப்பாக நடந்தேறியது. இந்தக் கலியாணத்தில் சென்னியப்பனுக்காவது, சிவகாமிக்காவது துளி கூட விருப்பமில்லை. 'நான் அத்தை மகளைக் கட்டிக் கொள்ள மாட்டேன்' என்று ஒரே பிடிவாதம் செய்து பார்த்தான் சென்னியப்பன். 'நான் மச்சானைக் கட்டிக் கொள்ள மாட்டேன்' என்று சிவகாமியும் மூன்று நாள் பட்டினி கிடந்தாள். இவர்கள் பேச்சை யாராவது கேட்டால் தானே? கலியாணம் என்னவோ வலுக் கட்டாயமாக நடந்து விட்டது.

சந்திராபுரம் பெரிய பண்ணடி செல்லப்ப கவுண்டர் பிடிவாதத்தில் பேர் போனவர். நினைத்த காரியத்தை முடித்து விட்டுத்தான் மறு வேலை. அவருக்குப் படிப்பு அவ்வளவாகக் கிடையாது. இருந்தாலும் நியாய அநியாயம் தெரிந்து பேசுவதில் அவருக்கு இணை அந்தப் பக்கத்தில் யாருமே கிடையாது. "எனக்கு இவ்வளவு வயசு ஆச்சு துண்ணு பேறு இன்னும் கையெழுத்துப் போட்டது கிடையாது" என்று

தன்னைப் பற்றி அவர் பெருமை யாகச் சொல்லிக் கொள்வார். கையெழுத்துப் போட்டவன் கடன்காரன் என்பது அவருடைய எண்ணம்.

சென்னியப்பன் அவருடைய மகன். சிவகாமி அவருடைய தங்கையின் பெண். அவள் சிறு குழந்தையிலிருந்து மாமன் வீட்டில் தான் வளர்ந்து வந்தாள். சிறு வயதில் இருவரும் கொஞ்சங்கூட ஒற்றுமையாக இருந்ததில்லை. சேர்ந்திருந்தால் சண்டை தான். எப்பொழுதும் கீரியும் பாம்புமாக இருப்பார்கள், அவளால் அவன் பட்ட அடிகள் எண்ணி முடியாது. அவனிடம் அவள் பெற்ற உதைகள் கொஞ்ச நஞ்சமல்ல. சென்னியப்பன் கிராமப் பள்ளிக்கூடத்தில் மூன்றும் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது அவள் இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். பள்ளிக்கூடத்திற்கே ஒழுங்காகப் போக மாட்டான். அப்படிப் போனாலும் மற்ற பிள்ளைகளிடம் கலகம் செய்து கொண்டுதான் வருவான். சிவகாமி இதைப் பற்றி மாமாவிடம் புகார் சொல்லுவாள். அவ்வளவு தான் அவனுக்கு அன்று இரவு பட்டினி. அதோடு உடம்பெல்லாம் வீங்கிப் போகும். ஒரு நாள், சிவகாமி விளக்கடியில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தாள். அவள் படிப்பது குருட்டுப் பாடமாக இருந்தாலும் நாலு வீடு கேட்கும்படி சத்தம் போடுவாள்.

'கூடை தலை மேலே குடி வாழ்க்கை கானகத்தில்' என்று உரக்கச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

வீதித் திண்ணைத் திண்டிலே சாய்ந்து கொண்டிருந்த செல்லப்ப கவுண்டர், "சிவகாமி அந்தக் கடன்காரப் பயல் எங்கே?" என்று கேட்டார். "அப்போது நல்லதங்கா...... ஏனுங்க மாமா, மச்சானு இண்ணைக்கி பள்ளிக்கூடத்துக்கே வல்லே"

"அந்தப் பயலுக்கு ஒதைக்கிற ஒதையெல்லா எங்கே போவுது. அவன் சோறுண்டாச்சா?"

"இல்லீங்கோ"

செல்லப்ப கவுண்டர் துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு கிளம்பினர். ஊரைச் சுற்றி வலம் வந்தார். ஊருக்கு மேல்புரம் பிள்ளையார் கோவில் மைதானம். அந்த மைதானத்தில் ஏழெட்டுப் பிள்ளைகள் கிளித்தட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். நல்ல நிலவு; பகல் போல காய்ந்து கொண்டிருந்தது. விளையாட்டும் மும்முரமாக இருந்தது. செல்லப்ப கவுண்டரைக் கூட யாரும் கவனிக்க வில்லை. கிளிக்குத் தப்பிக் கொண்டு வந்த சென்னியப்பன் செல்லப்ப கவுண்டர் மேல் மோதிக் கொண்டான். அவர் அவனைக் கையில் பிடித்த போது தான் சுய ஞாபகம் வந்தது. இனி இந்தப் புலிக்குத் தப்ப முடியாதென்று கண்டு கொண்டான். மற்ற பிள்ளைகள் இருந்த இடம் தெரிய வில்லை. அன்று அவனுக்குப் பூஜை பலமாகத் தான் நடந்தது. அதோடு ராத்திரி ரொம்ப நேரம் வரையிலும் ஒரே காலில் நிற்க வேண்டி இருந்தது. இந்த விஷயங்களில் எப்போதுமே அவனுடைய தாயார் தலையிடுவது கிடையாது. அவள் தலையிட்டால் பூஜை இரண்டு பங்கு அதிகமாகி விடும் என்பது அவளுக்குத் தெரியும்.

சென்னியப்பனுக்கு இதெல்லாம் பிரமாதமாக இல்லை. அவன் தலைகீழாக வேண்டுமானுலும் நிற்கத் தயார். ஆனல் அவள் பார்த்துக் கொண்டு போனளே அந்தப் பார்வை, பரிகாசம் கலந்த பார்வை

அதுதான் அவனுக்கு சகிக்க வில்லை. செல்லப்ப கவுண்டர் அந்த இடத்தில் அப்போது இல்லா மலிருந்தால் அவனை ஒரே வெட் டாக வெட்டித் தள்ளியிருப்பான். அவ்வளவு கோபம் அவனுக்கு.

கிழக்கு வெளுக்கு முன்னமே கவுண்டர் தோட்டத்திற்குப் போய் விட்டார். சென்னியப்ப னும் அதிகாலையில் விழித்துக் கொண்டு அதைத்தான் எதிர் பார்த்திருந்தான். சிவகாமி இன் னும் எழுந்திருக்க வில்லை. மெது வாகப் போய் அவளை அப்படியே மயிரைப் பிடித்து இழுத்து உட் கார வைத்து இரண்டு கன்னத்தி லும் இரண்டு அறைகள் பளீர் பளீரெனக் கொடுத்து விட்டு நடையைக் கட்டினன். அதிகாலை யில் அவளுடைய ஒப்பாரியைக் கேட்டு அவனுடைய தாயார் ஓடி வந்தாள். அவள் தன் மருமகளை அதிக நேரம் சமாதானப் படுத்த வேண்டிய தாயிற்று.

இவர்களுடைய இளம் பருவம் பூராவும் இப்படித்தான் சண்டை யாகவே கழிந்தது. வயது வந்த பின் சிவகாமி தன்னுடைய ஊரா கிய புதூருக்குப் போய் விட்டாள். அப்போது தான் சென்னியப்ப னுக்கும் தலையிலிருந்த பாராங் கல்லை இறக்கி வைத்த மாதிரி இருந்தது. அவனுடைய தாயார் தான் அடிக்கடி சொல்லுவாள். "இவங்க ரெண்டு பேருக்கும் கண்ணலம் சேஞ்சு வச்சா எப் படிப் பொளப்பாங்க. இவங்க சண்டையைத் தீக்கரதுக்கு நாலு பேர் வேணுமே!" என்று. 'இந்தக் கருமியைக் கட்டிக்க மாட்டேன்'' என்பான் அவன்.

"இந்தச் சிடு மூஞ்சியை நான் நல்லாக் கட்டிக்குவனு" என்று அவள் அழகு காண்பிப்பாள்.

வாய்ப் பேச்சு எப்பொழுதும் வாயோடு நிற்பதில்லை. கை கலந்த பிறகு தான் முடியும். இது பழைய கதை.

செல்லப்ப கவுண்டர் சிவகாமி யைத் தன் மகனுக்குக் கட்டிக் கொள்ள வேண்டுமென்று தீர்மா னம் பண்ணுவதற்கு ஒரே கார ணந்தான் உண்டு. தன் தங்கை யின் சொத்துப் பூராவும் தன் மக னுக்குக் கிடைக்கும் என்பது தான். அவர் நினைத்தால் தான் முடிக்காமல் விடுவாரா. தங்கையையும் மைத்துனரை யும் வரவழைத்து நாலு பேர் பெரியவர்களையும் வைத் துக் கொண்டு கலியாணப் பேச்சை ஆரம்பித்தார். சோசிய மெல்லாம் பார்த்தார்கள். ரொம் பப் பொருத்தமாகத் தான் இருந் தது.

"என்ன சொல்றீங்க" என்று மைத்துனரைப் பார்த்துக் கேட்டார்.

"எல்லாம் உங்க தங்கச்சியைக் கேளுங்க. அவ சொன்னச் சரி."

"நீ என்ன சொல்றேம்மா?"

"சாதகம்...கீதகம் எல்லாம் பொருத்தமாகத் தான் இருக்குது. அவ மச்சானைக் கட்டிக்க மாட் டேங்கருளே!"

"அட, போ, பைத்தியமே. எங் கேயாச்சும் எருத்தெக் கேட்டு சலங்கை கட்டுவாங்களா? அந்தப் பயனுங் கூட அப்படித்தா சொல்ருன். அவுங்க சொல் ருங்கண்ணு முறமையை விட்டுக் கொடுக்கவா சொல்றே"

"என்னமோ அப்பா சின்னஞ் சிறுசுகள் ஒத்துமையாய்ப் பொளைக்க வேண்டாமா?"

"அதுக்கென்ன நாலு பேரைப் பாத்து அதுகளும் தெரிஞ்சுக்குது. நீ எம்மா அதைப் பத்தி கவலப் படறே. வீண எம் விரோதத்தை

தேடிக்காதே, சொல்லியிட்டேன்'' என்று சொல்லி தன் கடைசி ஆயுதத்தைப் பிரயோகித்தார் கவுண்டர். அவர்களும் கடைசியாக, "நாம்ப ஒண்ணுக்குள்ளே ஒண்ணு விரோதம் பண்ணிக்கிட்டா நல்லாவா இருக்கும்?'' என்று ஒப்புக் கொண்டார்கள்.

தங்களுக்குப் பிரிய மில்லாத காரியத்தில் கட்டாயப் படுத்துகிறார்களே என்று அவனோ அல்லது அவளோ தூக்குப் போட்டுக் கொண்டு சாக வில்லை. அவர்களுடைய பண்படையாத இளம் நெஞ்சில் தோன்றிய எண்ணத்தை வெளியிட்டார்கள். பெற்றோர்கள், அவர்களுடைய இன்ப துன்பங்களில் அக்கரையுடையவர்கள், அதற்குச் செவி சாய்க்க வில்லை. நடந்தபடி நடக்கட்டும் என்று கலியாணச் சடங்குகளில் கூட தங்கள் வெறுப்பு விருப்புகளைக் காட்டிக் கொள்ள வில்லை. ரொம்பவும் சாதாரணமாகத் தான் நடந்து கொண்டார்கள். பெற்றோர்களுக்கு அது எவ்வளவோ திருப்தி.

"நீங்கொ எண்ணுஞ் சிரஞ்சீவியா, பாக்கியம் பதினாறும் பெத்து குழந்தை குட்டிகளோடே சௌக்கியமா இருக்க வேணும். அண்ணக்கி எழுதின படிதா எல்லா நடக்கும். நீங்கொ சந்தோசமா பொளையுங்கோ'' என்று ஒரு பழுத்த வயோதிகர் அவர்களை ஆசீர்வதித்து அவர்கள் இரண்டு பேர்களுடைய கைகளையும் ஒன்று சேர்த்து வைத்தார். அவருடைய பேச்சும் செய்கையும் மண மக்களை நம்பிக்கை மிகுந்த ஒரு இன்பக் கேணியில் மிதக்கச் செய்தது. நுகத்தடியில் பூட்டிய மாடுகள் இழுத்துத்தானே ஆக வேண்டும்!

கலியாணம் ஆன புதுசில் அவனும் அவளும் ஒருவரோ டொருவர் பேச்சு வார்த்தை இல்லாமலிருந்தார்கள். அவளுக்கு மச்சானிடம் பேச ரொம்பவும் வெட்கம். தவிர சிறு வயசிலே மச்சான் தன்னால் பட்ட அடிகளை நினைத்துக் கொண்டு எங்கே கடுமையாக நடத்துவாரோ என்ற பயம். அந்த பயத்தினால் தான் மச்சானைக் கட்டிக் கொள்ள மறுத்தாள். மச்சானிடம் அவளுக் கில்லாத பிரியம் வேறு யாருக்கு இருக்கப் போகிறது?

சென்னியப்பனுக்கும் அந்த எண்ணந்தான். இவளாலல்லவா அவ்வளவு உதை பட்டோம். அவளையே கட்டிக் கொண்டால் எசிக் காட்டுவாளே என்பதுதான். அவளிடம் அவனுக்கு ஆழ்ந்த அன்பு உண்டு. அந்த அன்பானது மேலும் மேலும் வளர சந்தர்ப்பமே ஏற்படவில்லை. சிவகாமியை அவன் கலியாணத்திற்கு முன் மூன்று வருஷ காலம் பிரிந்திருந்தான். அப்போது அவன் அவளைப் பார்க்கவும் இல்லை. பார்க்கப் பிரியப்படவும் இல்லை. அப்போது அவன் பார்த்த சிவகாமிக்கும் இப்போது அவன் பார்க்கும் சிவகாமிக்கும் எவ்வளவோ வித்தியாச மிருந்தது. அவள் கருப்புத் தான். கருப்பிலும் அழகில்லையா? இப்போது அவனுக்கு அவள் அழகாகத்தான் தோற்ற மளித்தாள். இவளை ஏன் வேண்டாம் என்று சொன்னேன் என தன்னையே நொந்து கொண்டான். ஆனால் அவள் தன்னிடம் பேசாதபோது தான் ஏன் அவளிடம் வலுவில் பேச வேண்டும் என்று அவனும் சும்மா இருந்து விட்டான்.

அவள் அவனைக் காணாதபோது அவன் பக்கத்தில் இல்லையே என்ற ஆசை. அவனைக் காணும் போது பயமும் வெட்கமும் போட்டி போட்டுக் கொண்டு வீட்டுக்குள்ளேயே உட்கார வைத்துவிடும்.

சென்னியப்பனுக்கு தன் அத்தை வீட்டில் சர்வ சுதந்திரமும் உண்டு. அவன் எதையும் செய்யலாம்; எங்கும் போகலாம். அவனும் அதைக் காட்டிக் கொள்ளாமலே ரொம்ப பிகுவாய் நடந்து கொண்டான்,

அவளுடைய தாயாரும் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டாள். "கலியாணமாகி நாலு மாச மாச்சு இன்னும் வெக்கம் உக்காந்திட்டு இருக்குதா? இனி உம் புருசம் பாடு உம் பாடு" என்று சொல்லத் தொடங்கினுள்.

வேறு வழியின்றி அவளும் இப்போது தலையைக் குனிந்து கொண்டு, புருஷனுக்கு தண்ணீர் கொடுப்பது, சாதம் போடுவது, வெற்றிலைத்தட்டு எடுத்து வைப்பது முதலிய காரியங்களைச் செய்து வந்தாள்.

அன்று சென்னியப்பன் சாப்பிட்ட பின் வெற்றிலைத் தட்டை எதிர் பார்த்து ஆசாரத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அன்று அவள் தாயாரும் வீட்டில் இல்லை. அவள் தட்டை எடுத்துக் கொண்டு வந்தாள். அன்று ஏனே அவள் கைகள் நடுங்கின. அதிலிருந்தே அவள் மன எழுச்சிகள் வெளிப் பட்டன. அவன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். "மச்சானுக்கு எம்மேலே கோவமா" என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்து தாமாக வெளி வந்தன. அவளுடைய கண்களிலிருந்து நீர் ஊற்றுப் போல பொங்கி வந்தது. அதற்கு மேல் அவனல் பொறுக்க முடியவில்லை. அவனுடைய கைகள் அவளை அன்போடு அணைத்துக் கொண்டன.

அவளுக்கு இப்போது வெட்கமெல்லாம் பறந்து விட்டது. மச்சான் என்று அவனை அரித்துக் கொண்டே இருக்கிறுள். இவர்களைப் பார்த்தவர்கள் இப்போது அதிசயப்படுகிறுர்கள். பழைய சென்னியப்பனும் சிவகாமியும் இவர்கள் தான என்று சிலருக்கு சந்தேகம் வந்து விட்டது. அவ்வளவு ஒற்றுமை இந்த இளம் தம்பதிகளுக்குள். ரொம்ப சீக்கிரத்தில் வேர் ஊன்றி விட்டது. பழையதை யெல்லாம் மறந்தே விட்டார்கள்.

கலைக் கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

20. மனிதவியல்பு

மனிதவியல்பு ஒரு காடு; அதில் பூஞ்செடிகள் இடையிடையே காண்கின்றன; "எவ்வளவு அழகான பூ" என்று முத்த மிடுகிறோம்; சுருக்கென்று ஒரு விஷமுள் உதட்டில் தைத்து நமது இன்பத்தைத் துன்பமாக்கி விடுகிறது! அதோ! நல்லகனிகள் குலுங்குகின்றன; பறித்துண்ண ஆவலாகத்தாவுகிறோம்; கனிமரத்தைச் சுற்றி ஒரு பேராசைப் பூதம் காவல் காக்கிறது; கிட்டப் போனால் நம்மையும் அள்ளி விழுங்க வருகிறது; ஆ எவ்வளவு அழகு! என்று மலர்ப் பொதும்பரை நோக்குகிறோம்; அதன் பசுமையிலிருந்து ஒரு பச்சைப் பாம்பு நமது கண்ணைக் குறி வைக்கிறது. ஒரு விஷப் பாம்பு பதுங்கி மெல்ல நமது காலைச் சுற்ற வருகிறது; காற்றுட உலாவ ஒரு புல்வெளியை நோக்குகிறோம்; புல் மறைவில் ஒரு விஷப் பூச்சியிருந்து காலைக் கடித்து விடுகிறது. மனிதவியல்பு பண்படாத காடு; அதைப்பண் படுத்த எத்தனையோ மகான்கள் வந்தார்கள்; பேசினார்கள், எழுதினார்கள், உபதேசித்தார்கள், நடந்து காட்டினார்கள்! அவர்களுக்கு உயிரோடிருக்கும்போது கிடைத்த சன்மானம் என்ன? கல்லெறி, புல்லரின் வசவு, பொறாமைப் பேய்களின் கொடுமை, அகம்பாவப் புலிகளின் பாய்ச்சல், நஞ்சு, வாள், சிலுவை, தூக்குமேடை இவையே!! சோக்ரதர், ஏசுநாதர், சங்கரர், அப்பர், தயானந்தர் முதலிய எந்தப் பெரியார் வாழ்வையெடுத்தாலும், துயரில் முடிய அருள் விளக்காகவே காண்கிறது.

நேற்று வரையிலும் ஒருவனை நண்பன் என்று நம்புகிறோம்; கட்டியணைத்துக் கொஞ்சிக் குலாவுகிறோம்; அவனை நம்பி நம் மனத்தை விட்டுப் பேசுகிறோம்; அவன் முன்னால் "ஆஹா சபாஷ்" என்று கேட்கிறான்; பின்னால் பக்கத்திலிருப்பவரிடம் நம்மைப்பற்றி கோள் சொல்லி, பொய் கட்டி நையாண்டி செய்கிறான். சிண்டு முடித்து வேடிக்கை பார்க்கிறான். அந்தோனியோவுக்கு ஒரு அற்பத்தனமான ஷைலக் வந்து சேருகிறான்; மாசற்ற டெஸ்டெமோனியாவின் உயிருக்கு உலைவைக்க ஒரு அயோக்கிய அயாகோ வந்து, ஒதெல்லோ மனத்தைக் கெடுக்கிறான். நம்மிடம் தந்திரமாக ஒருவன் நூறு வாங்கிக் கொண்டு 'ஆயிரம் தரவில்லை; என்ன தந்திரப் பயல்' என்று தூற்றுகிறான்! ஒருவன் செல்வ நகைபுரிந்து, சிநேகிதன் என்று பாசாங்கு செய்கிறான்; நாமும் அவனுடன் ஒட்டுற

வாக விருக்கிறோம்; ஒரு அற்பக் காரணத்திற்காக அவன் நம்மேல் வெறி நாய் மாதிரி விழுகிறான். கோபம் குணத்தைக் கெடுத்து நட்பைச் சிதைக்கிறது. ஒருவன் தன் குற்றத்தைக் காண்பதில்லை; இன்னொருவனுக்கு ஒற்றனாகி, அவன் மேல் பொய்கட்டித் தூற்றுகிறான். மற்றொருவன் காசாசையால் நாச வேலை செய்கிறான்; அவன் சிரிப்பு, ஆயிரம் ஏழைகள் அழுகையின் எதிரொலியாகிறது.

மற்றொருவன் புன்னகையுடன் நன்மை செய்வதாக நம்மை அழைத்துச் செல்கிறான்; நேர் எதிரிடையான இடத்தில் நம்மை மடக்கி உள்ளதைப் பறித்துக் கொண்டு செல்லும் கள்ளனாகிறான் — அதிகம் சொல்வானேன். தன்னுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்ட ரஷ்யாவை, நாஜி ஹிட்லர் படையெடுத்து இரத்த வெள்ள மாக்குகிறான்— ஒரு பாவமும் செய்யாத பிரான்ஸை பாஸிஸ்டு முசோலினி பின்னால் குத்துகிறான்! அமைதியாயிருந்த அபிஸீனியாவை படோக்ளியோ விஷப் புகைவிட்டு மூச்சவிக்கிறான்— உலகம் கொடிய அசுரராஜ்யமாய் விட்டது. ஆனால் அசுரக் கொடுமை அழிநடம் புரிந்து அழிந்து மண்ணாவதைக் காண்கிறோம். அயோக்கியத்தனமும், துரோகமும் கள்ளுண்டவன் களியாட்டம் போல், சில காலம் துள்ளலாம். பிறகு அது ஆட்டம் அடங்கி அழியும். இந்த உண்மையறிந்தே ஏசுநாதர் "தீமையை எதிர்க்காதே" என்றார். தீமைக்குத் தீமையே தண்டனை; இயற்கையில் எதுவும் நியாய வரம்பை மீறி நடக்காது. ஆகாயத்தில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் யாத்திரை செல்கின்றன. ஒரு மௌன சக்திக்குக் கட்டுப் பட்டு எவ்வளவு ஒழுங்கு முறையாக அவை செல்லுகின்றன! அவற்றைப் போல் மனிதான்மாக்கள் அமைதியாக ஞானோதயத்தை நோக்கி யாத்திரை செய்தால், அருட்சுடரில் ஐக்கியமாகலாம். அமைதியாகலாம். ஆத்திரப் பொறுமையாலும், அகம்பாவத் திமிராலும் ஒருவனை ஒருவன் முட்டித் தள்ளிச் சுட்டுத் தள்ளி இரத்த வெள்ளத்தில் தன் பேராசைத் துறைக்கு நீந்திச் செல்லுகிறான் மானிட அரக்கன்! தன் வேலையில் கருத்தூன்றி எவருக்கும் தீமை செய்யாத சாதுக்களையும் அற்பத்தனமான பொறாமைப் புல்லர், வஞ்சனையாக ஏமாற்றியும், பக்கத்தில் தூற்றியும், கொடுமை செய்யும் சோக நாடகத்தை நினைத்தாலே ஏன் பிறந்தோம், இப்பிறவி ஒழிந்து போவதே நலம் எனத் தோன்றுகிறது! கடவுள் அழகான உலகை மனிதனுக்குத் தந்தார்; மனிதன் தன் தீமையால் அதை நரகமாக்கினான். கடவுள் மனிதனுள் தெய்வத் தன்மையை வைத்தார்; மனிதன் கோபதாபப் பேய்களை உள்ளே வரவேற்று, வாழ்வைப் பேய்க் கூத்தாக்கினான். அதிகஞ் சொல்வானேன்; சாது சிவநேசத்திற்கு நேர்ந்த ஆபத்தைப் பாருங்கள்.

21. மிஸ்டர் டை

சிவநேசம் பரம சாது; பழி பாவத்திற்கு அஞ்சி நடப்பவர்; தினம் திருவாசகம் படித்து, பஞ்சாட்சரி ஜபித்துச் சிவ தரிசனம் செய்தே உண்பார்; உணவிலும் தூய சைவம். நடக்கும் போது உயிர்களை மிதிக்காமல் மெதுவாக நடப்பார். சிவ புண்ணியம், தமிழ் வளர்ச்சி என்றால் தம்மாலான உதவியைப் பகட்டில்லாது செய்வார். யாருடனும் அவர் அதிகமாய்ப் பேசுவதில்லை; புறங்கூறும் புன்மை அவரிடம் இல்லை. பிறரைப் பற்றி யாராவது அவதூறு

பேசினுல், "சிவமயம் சிவமயம்" என்று காதை மூடிக்கொண்டு செல்வார். தொழிலுண்டு தாமுண்டு; வெறெந்த வம்புக்கும் அவர் போக மாட்டார்; தக்க புலவர் பெரிய புராணம் திருவிளையாடற் புராணம் படித்தால், அல்லது சிவகீதம், ஹரி கதை செய்தால் கேட்பார்; தம்மாலான காணிக்கையும் செலுத்துவார். அவர் ஏழைப் பங்காளர்; தினம் நூறு ஏழைகளுக்கு அவர் அரிசி அளந்து வந்தார். அவர் நிகர லாபத்தில் பதினைந்தில் ஒரு பங்கு சிவ கைங்கரியத்திற் கென்று எடுத்து வைப்பார். அவர் வரவர வட்டித் தொழிலைக் கூட விட்டு விட்டு விவசாயத்திலே கருத்தூன்றிப் பல ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் அளித்தார். சிவநேசன் நல்லார்க்கு நேசன்.

உலகில் நல்லார் எத்தனை பேர்? பிறர் வம்புக்குப் போகாமல், பிறரை உளவு பார்த்துத் தூற்றுமல், தமக்குரிய பணியைச் சாதுவாகச் செய்துமகிழும் அன்பர் எத்தனை பேர்?

எத்தனை பேரோ; நாம் தொகை எண்ணவில்லை; ஆனுல் சிவநேசனைச் சுற்றி மட்டும் சுமார் முப்பது வம்பர் வட்டமிட்டனர். அவர்களை யாரோ தூண்டி விடுவதாக மட்டும் சிவநேசம் அறிவார்; யார்? முத்தையாவா?முத்யைாவா?

பழைய முத்தையா மறைந்தே போனுன். காளை மாதிரியிருந்தவன் கழுதை மாதிரியானுன். குப்பையாவின் வம்புக் குப்பையெல்லாம் சுமந்தான். பிஜிலி தன் வலைப்பட்ட வாலிபர்களுக்குப் புதுப் பெயரளிப்பது வழக்கம். அவள் முத்தையாவை முதலில் பையா என்றழைத்தாள்; பிறகு டையா என்று, முடிவில் "டை" என்று நிலையான திருப்பெயர் சூட்டி விட்டாள். ஹாமில்டன் பாலம் அம்பட்டன் பாலம் ஆன கதைதான்! முத்தையா — மிஸ்டர் டை ஆனுன். நமக்கும் நல்லதுதான். முத்துஐயா என்பது அழகான தமிழ்ப் பெயர்; அப்பெயருள்ள பலர் பெரிய நிலையிலிருக்கிருர்கள்; அந்த அரிய பெயரை பிஜிலியின் அடிமை வகிக்கத் தகுதியில்லை. ஆதலால் இனி நாம் அவனை "டை" என்றே குறிப்போம். மிஸ்டர் டை இப்போது புதிய ஆளாய் விட்டான். அகம்பாவம் முன்னை விட மூன்று பங்கு அதிகம்; இடம்பம் நான்கு பங்கு; மோகம் ஐந்து பங்கு; நாத்திகம் ஆறு பங்கு; தீமை ஏழரைப் பங்கானது. அவனை எப்படியாவது கண்டு திருத்தவே சிவநேசம் முயன்று, ஆள் விட்டும் பார்த்தான்; பலிக்கவில்லை; ஒரு நாள் மிஸ்டர் டை முதல் தெருவில் மிடுக்காக வான்கோழி நடை போட்டான்; சிவநேசம் எதிர் பாராமல் அவனைச் சந்தித்தான். அழைத்தான்; மிஸ்டர் டை வெகு விறைப்பாகக் கண்ணுடி விரியன் போல் பார்த்துச் சென்ருன். சிவநேசம் அவனைப் பிடித்து நிறுத்தித் தன் கடைக்கு அழைத்துச் சென்று இதமாகப் பேசினுன்:—

சிவ: முத்தையா என்ன செய்கிருய்?

டை: சை; என்னை மிஸ்டர் டை என்று கூப்பிடு.

சிவ: அழகான தமிழ்ப் பெயரை விட்டு டை எதற்கு? கழுத்தில் சுருக்குப் போட்டுக் கொள்ளவா? சரி மிஸ்டர் டை, தொழில் எப்படி நடக்கிறது?

டை: நடக்கவேண்டிய தொழில், நடக்கிறபடி நடக்கிறது— உனக்கென்ன கவலை? போ

நெல் அள. என்னிடம் வாய ளக்காதே.

சிவ: கொஞ்சம் பணிந்து பேசு தம்பீ.

டை: நான் துணிந்தே பேசுகி றேன். நீ சுத்த மடையன்; உலகந் தெரியாத காட்டு மிராண்டி; முட்டாள்.

சிவ: அப்பனே நான் உனக்கு ஒரு தீங்கும் செய்ய வில்லையே; ஏன் என்னை வைகிறாய்?

டை: நீ ஒண்ணு நம்பர் போலி; விபூதிப் பட்டை போட்டு உலகை ஏமாற்றுகிறாய்; சிவ சிவவென்று ஆட்களை மயக்கு கிறாய். உனக்கு என்னை அடி மை யாக்கப் பார்த்தாய்; நாம் இப்போது வீர சுதந்திரம் பெற்றோம்.

சிவ: அப்பனே; நான் யாரையும் என் அடிமையாகவோ அடியா ராகவோ கருதியதில்லையே; எல்லாரும் இறைவனுக்கே அடியார்; அவனையே வணங்க வேண்டும் என்பதே என் கொள்கை. சிவஞான யோகி கள் "நான் வணங்கவே பிறந் தேன்; வணங்கப்படவன்று" என்றார். அதுவே என் கொள்கை; நான் யாருடனும் அனுவசியமாகப் பேசியது மில்லையே; என்னை ஏன் தூற்று கிறாய்? ஏனிந்தக் கோபம்.

டை: நானா தூற்றுகிறேன்? உம்! கவனமாகப் பேசு; பல்லை உடைப்பேன்."

சிவ: தம்பீ, ஏனிந்த முன்கோபம்.

டை: ஹா? எனக்கா முன் கோபம்! ஹூம் உஷாராகப் பேசு......ஹூ...... நான் யார் தெரியுமா?

சிவ: நீ முத்தையா தானே? கொஞ்சம் நிதானமாகப் பேசு தம்பி......

டை: என்னையா நிதானமாகப் பேசச் சொல்லுகிறாய்? நான் தீப் பொறி! கவனம்! நான் அருங்கலை விநோதன்.

சிவ: உன்னைப் பார்த்தால் விநோ தமாகத்தான் இருக்கிறது; தம்பி, மனிதனாகப் பிறந்தவன் அகம்பாவமில்லாமல், பெரியா ருக்கு அடங்கி நல்ல பாதையில் நடக்க வேண்டும்.

டை: உனக்குக் கண்ணிருந்தால் இப்படிச் சொல்லுவாயா? இதோ நான் முகல் தெருவில் கப்பி போட்டு கெட்டித்த நல்ல பாதையில் தலை நிமிர்ந்துதானே நடக்கிறேன். எனது நடைக் கென்ன...... பார்?

சிவ: தம்பி உனது நடத்தை உன்னை எங்கே கொண்டுபோய் விடுமோ? ஹா...... சிவனே!

டை: சிவனுக் கழுவானேன்? இதோ எனது சிங்க நடை என்னை நேராக உல்லாச மாளி கைக்கே கொண்டு செல்லு கிறதே...... அதோ பார்......

சிவ: தம்பீ, அது உல்லாச மாளிகை யன்று; பொல்லாத நரகம்; தம்பீ கெட்டுப் போ காதே; வேசையை நம்பாதே.

டை: அவளை வேசை யென்றால் தெரியுமா? கபர்தார்!

சிவ: பிறகு யாரவள்?

டை: இன்றிரவு "இன்பவனம்" என்ற ஆட்டம் நடக்கிறது; வந்து பார்; அவள் பாட்டை யும் பேச்சையும் கேட்டுப் பார்; ஜிலுஜிலுஜிலுஜீலு வென்று வைர டால் வீசும் அவள் அழ கைப் பார்த்தாலே உன் சாம்ப லும் சைவமும் ஓடிப் போகும்...

சிவ: தம்பீ, அந்த மாயாவி வாசத் திற்கு நான் வர மாட்டேன்; வீணாகக் கெட்டுப் போகாதே—

டை: நீ தான் வறட்டுச் சைசவத்தால் வாழ்வை அனுபவிக்கத் தெரியாமல் கெட்டுப் போகிறாய். உனக்கும் பணம் உண்டு; எனக்கும் பணமுண்டு. உன்னைப் பார்த்தால் என் வீட்டு டவாலி கூட மதிக்க மாட்டான். இடுப்பு வேட்டியும், துண்டும், ஜெபமாலையும், சாம்பல் பூச்சுந்தான் உன் கதி. பார் என்னை......?

சிவ: உன்னை நன்றாகப் பார்த்தே சொல்லுகிறேனப்பா! உன் மனத்தை அந்தச் சண்டாளக் குப்பையா, குப்பையாக்கி விட்டான். ஆபாசக் குப்பை.

டை: என்து நண்பனைக் குப்பை என்கிறாயா? அவன் காதில் பட்டால் விழியைத் தோண்டி விடுவான்... கவனம்.

சிவ: தம்பீ, உன்மேலுள்ள அபிமானத்தால் நல்லது சொன்னேன்; உன் விதிப்படி நடக்கட்டும்.

டை: விதியா? டாம்! யாரிடம் மூடக்கொள்கை பேசுகிறாய்? எல்லாம் நமது மதியால் நடக்கும்.

சிவ: முத்தையா, நாம் தமிழர்; மதுரையிலிருந்து அன்னிய நாட்டிற்கு வந்து தொழில் நடத்துகிறோம். ஒழுங்காயிருந்து, சிக்கனமாக வாழ்ந்து, தொழிலைக் கவனித்து, நல்ல லாபம் பெற்று வந்ததில் ஒரு பங்கு பொதுநலத்திற்குதவி சிவபுண்ணியங்கள் செய்து, பிறவிப் பயனைப் பெற வேண்டும். மனிதனாகப் பிறந்தவன் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் பெற வேண்டும். சன்மார்க்க நூல்களையும், பாடல்களையும் கேட்டு நடக்க வேண்டும். நான் வயதில் பெரியவன்; நமது முத்தையா என்ற அபிமானத்தால் சொல்லுகிறேன். பிறகு உன் இட்டம்......

டை: எனக்கு நான் இட்டதே சட்டம். எனக்கு நல்லது இன்னதென்று தெரியும்; உனக்கு நல்லதைச் சொல்லுகிறேன் கேள். பேசாமல் இந்தப் பூச்சை விடு; சிவா, முருகா என்று அழுகாதே; சிவபுண்ணியமென்று புரோகிதப் புரட்டை நம்பாதே; பாவபுண்ணியம் பயந்தவர் புரட்டு; அழகான உடுப்பணி; நாகரிகமான கனவான்கள் "குட் மார்னிங்" வைக்கும்படி எப்போதும் சட்டை தொப்பி போட்டு நட; பாழுந் தமிழை விட்டு, ஆங்கிலம் படி. பெரிய புராணப் பூச்சியாயிராதே; உலகில் எத்தனையோ நாவல்கள் உண்டு; படி ரெய்னால்டு நாவல்; வாழ்வைப் பாழாக்காதே; உல்லாசந்தேடு; கண்ணுக்கும், காதுக்கும், உடலுக்கும் இன்பமளிக்கும் உல்லாசங்களை உடனே அனுபவி: இன்றைக்கிருந்தார் நாளை எப்படியோ? இருக்குமட்டும் இந்திரபோகம்; உடல் போனால் உலகை அனுபவிக்க முடியாது. நன்றாகச் சாப்பிடு; மதிப்பாக நட; பூனைக்குட்டி வேதாந்தத்தை விட்டொழி; வா நாடகத்திற்கு; ஐம்புலன்களாலும் அழகை அனுபவி; ஆசாபாசங்களை அள்ளியணை. வா என்னுடன்: உன் முதலைத் தா; இருவரும் உல்லாச மாளிகையில் புதுப்புது நடிகைகளைக் கொண்டு ஆடல் பாடல் நடத்தி எராளமான பொருள் சேர்ப்போம், வா......

சிவ: சிவசிவ! தம்பீ, உன் மூளையை அவள் கெடுத்து விட்டாள். நீ நல்ல வழிக்கு வர இறைவனை வேண்டுகிறேன். போய்வா?

டை: வருகிறாயா, இல்லையா?

சிவ: தம்பி என் வேலை கடையில்.

டை: க டை யா ! — தொலை... உன் வாழ்வை வங்காளஞ் சாக்கில் அளந்து கொட்டிக் கொண்டிரு — உன் விதி அது தான்!

சிவ: தம்பீ, இன்னொரு தரம் சொல்லுகிறேன், பொல்லாத வரைப் புல்லாதே; அங்கே செல்லாதே.

டை: சீ என் முன்னால் நில்லாதே; உல்லாச மாளிகைக்கே செல்லு கிறேன். உனக்கு என் உபதேசம் ஏறுது. பக்குவம் போதாது. உன்னை வேறு வழியில் பக்குவப் படுத்துகிறேன் பார். நான் நாகரிக தூதன். நினைவிருக்கட்டும்.

சிவ: தம்பீ, நீ நல்ல வழியில் நடக்க இறைவன் அருளட்டும்.

டை: "இதோ பேஷான வழியில் நடக்கிறேன் பார்" என்று ஒரு சுருட்டைப் பற்ற வைத்து இரண்டு தரம் புகை விட்டான். "ஷிவம், வவுகிடேன்" என்று மிடுக்காக "டக்டக்" நடை போட்டுச் சென்றான்...

சிவநேசன் திகைத்துப் போனான். இவனை எப்படித் திருத்துவது? "சிவனே நீதான் அவனைத் தடுத்தாட் கொள்ள வேண்டும்" என்று ஒரு மூச்சு விட்டுத் தன் பேரேட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனத்தில் ஏதோ ஒரு துயரம் துடித்துக் கொண்டிருந்தது.

அதேசமயம் தன் மனைவி விசாலாட்சி சிவனடி சேர்ந்ததாகக் கடிதம் வந்தது.

இடிவிழுந்த நாகம்போலச் சிவம் துடிதுடித்தான்; பாசக் கண்ணீர் வடித்தான். "என்னை உயிர் போல நேசித்த கண்மணியே கற்பின்மணியே! நீ உடல் நான் உயிர் என்று நேசித்தோமே! ஐயோ விசாலாட்சி! விதி உன்னைக் கொண்டுபோனதே! உன் அருகேயிருந்து என் கடமையைக் கூடச்செய்யாத பாவியானேனே! சிவனே, இதுவும் உன் செயலோ! நான் ஏன் பர்மாவுக்கு வந்தேன்! இங்குள்ள பங்கையெல்லாம் விற்றுவிட்டுத் தாய் நாட்டிலேயே தொழில் செய்யலாமென்று நூறு தடவை நினைத்தேனே! பணத் தாசை என்னைத் தடுத்தது. பணம்! பணம்! பணத்தை விழைந்து உன்னை இழந்தேனே! விசாலாட்சி, உன் உயிர் துடித்தபோது என்னைப்பற்றி என்ன நினைத்தாயோ! ஹா! இனி வருந்தி யென்ன? உலகில் யாரே நிலை! உடம்பு கூலிக்குடிதானே; பூதம் பூதத்திற் கலந்தது.

நேற்றிருந்த விசாலாட்சி இன்றில்லை — இனியும் அவளைக்காண முடியாது! இந்த உடலுக்கும் இதே கதிதானே! எத்தனை நரிகளும் பருந்துகளும் இதைச்சுற்று கின்றன! சரி, இனியென்ன? ஒரு பாசம் இருந்தது; அதுவும் அறுந்தது! விசாலாட்சி, நீ பிரிந்தாய்! இனிப் பெண்ணாசை என்னைப் பிரிக! இதுகாறும் நான் உனக்காக வாழ்ந்தேன்; இனி என்னுடையானுக்கே வாழ்வேன். இதுகாறும் குறிப்பு பேரேட்டிலேயே கருத்தூன்றினேன்; இனித் திருவாசகத்தில் கருத்தூன்றுவேன்; இதுகாறும் நிரம்பப் பணம் சேர்த்துச் சிறிது தருமம் செய்தேன்; இனி அறவினையே செய்வேன் — பணம் இன்றிருக்கும், நாளைப் போகும். உள்ள போதே பொது நலத்திற்கு அள்ளித் தருவோம்......" என்று இவ்வாறு நீண்ட சிந்தனையில் ஆழ்ந்தார் சிவநேசர். அவர் முன்னே

இராமநாதனே அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தான். தனது கடையை இராமநாதனிடமே விட்டுவிட்டுத் தாம் இறுதி நாட்களைச் சிவசாதனத்திற் கழிக்க வேண்டும் என்றே நினைத்தார். இராமநாதனைத் தந்தி கொடுத்து வரவழைக்கக் காலையில் நினைப்பார். பிறகு அவன் மதுரையில் தமிழறிவை வளர்த்துத் தமிழ் மணியாயிருப்பதை நினைப்புரர்; சிறந்த வழியில் முன்னேறும் மகனைத் தடுக்க அவர் மனம் துணியவில்லை. ஏதாவது நெருக்கடி வந்தால் மகனுக்குத் தந்தி கொடுக்கலாம் என்றிருந்தார். அவர் இப்போது தேடுவது சிவசாதனத்திற்கு வழிகாட்டும் குருவை. எவரிடம் பேசினாலும் சித்தாந்தம், நாயன்மார், திருவாசகம், இவையே பொருளாகக் கொண்டு சிவநேசர் பேசி வந்தார். அவரிடம் பலர் வந்து பேசுவதுண்டு.

22. சட்டிச்சாமி

சிற்றின்ப மனம் பெண்ணைக் கண்டலைவது போலவே பேரின்பமனம் கடவுள் வெறி பிடித்தலைகிறது; யாராவது 'சிவா முருகா' என்றால் அவரை விரும்புகிறது. யாராவது காவியுஞ் சடையுமாக வந்தால் வணங்கி வரவேற்கிறது.

சிவநேசம் மனம் நாளுக்கு நாள் உலகவிவகாரத்திலிருந்து விடுபட்டது; உள்ளே எதையோ தேடியது; பணத்திற்கும், மாளிகைச் சுகத்திற்கும், பேர் புகழுக்கும் எட்டாத ஒரு சுகத்தை மனம் நாடியது. அந்தச் சுகத்தை யார் தருவார் என்று தேடியது.

முன்பெல்லாம் நெல் மண்டி லாபத்தில் கணக்குப் பார்த்து மகமை எடுத்து வைப்பார் சிவநேசம். இப்போது "இனியாருக்கு நான் பணம் சேர்க்கவேண்டும்? இருப்பது இரண்டு பையன்கள் — அவர்கள் அறிவைக் கொண்டு பிழைக்கட்டுமே — என் லாபத்தைக் கொண்டு ஆத்ம லாபத்தை நான் தேடுவேன்'' என்பார். தன் கீழ் வேலை பார்த்த கணக்குப் பிள்ளை கந்தனுக்கும், பெட்டியடி சுப்பையாவுக்கும், கடன் வசூலிக்கும் வேலனுக்கும், பிறருக்கும் இரண்டு மடங்கு சம்பளமளித்து ஆதரித்தார். முகல் தெருவிலும் மங்கமாரித் தெருவிலும் எந்தப் பரதேசி, பண்டாரம் வந்தாலும் ஒரு வேளை உண்ண ஏற்பாடு செய்தார். பக்கேவிலுள்ள தனது நிலங்களில் உழைக்கும் குடியானவர்களுக்குப் போதிய நெல்லளந்து "நன்றாகப் பிழையுங்கள்" என்றார். அவர்கள் பிள்ளைகள் படிக்க ஒரு பள்ளிக்கூடம் ஏற்பாடு செய்து, அதற்குப் பதினாயிரம் ரூபாய் மூலதனமாக வைத்தார்.

பணம் சேர்த்துப் பூட்டுவது செல்வத்தைச் சிறையிடுவதுபோல் அவருக்குத் தோன்றியது; பணத்தை பலர் வாழத் தொழிலாகவும், அறிவாகவும், உணவாகவும் மாற்றி நடமாட விடுவதே செல்வச் சுதந்தரமாகத் தோன்றியது. நாடோறும் ஈகையும் தியாகமும் வளர்ச்சி பெற்றது. பர்மாவில் அவர் செய்யும் புண்ணியங்களைப் பலர் மெச்சினர்; பசியால் வருந்தும் ஏழை பரதேசிகள் சிவநேசத்தைத் தேடி வந்தனர். சிவநேசம் காவி கட்டிவரும் சாமியார்களை வணக்கமுடன் வரவேற்று உபசரித்து ஞானோபதேசம் கேட்டு வந்தார். பல சாமியார்கள் இவ்வாறு அவரிடம் வருவதுண்டு; அவருள் போலிகள் அதிகம்; இரண்டொருவர் உண்மைத் துறவிகள்.

இச்சமயம் பர்மாவில் சட்டிப் பரதேசி என்ற ஒரு துறவியிருந்தார் — உண்மைத் துறவி. அவர்

நாகப் பட்டினக்காரர்; பிறவித் துறவி; தாயுமானவர் பாடலில் அவர் வாழ்க்கை ஊறியது; பெற்ஞேர் பல முறை முயன்றும் விவாக வலேயிற் சிக்காமல் தப்பி, நாடெல்லாம் சுற்றிக் காசியில் வந்து சிலகாலம் திருப்பனந்தாழ் மடத்தில் தங்கினர்; அங்கிருந்து ஒரு அன்பருடன் அவர் பர்மா வுக்கு வந்தார்.

அவர் காற்றைப் போலக் கட்டற்றவர்; கவலேயற்றவர்; உடலின் இடும்பைகளே வென்றவர்; அவர் யாருடனும் அதிகம் பேசுவதில்லே; பேச்சு சூத்திரம்போல் அறிவு நிரம்பியிருக்கும். ஒரு சொல்லில் ஒருவனுக்கு உய்வுண்டாகும். அவ்வளவு திட்ப நுட்பமாகப் பேசுவார். அவர் உடைமை — கோவணம் — ஒரு சட்டி — இவ்வளவே. அவர் தெருவில் சட்டியை ஏந்தி விறுவிறென்று நடப்பார்; அன்பர்கள் அதில் உணவு வைப்பர்; சட்டி நிறைந்ததும் முதலில் பிடிப்பிடியாக அள்ளிப் பசிக்கும் ஏழைகளுக்குத் தருவார். சட்டி காலியானதும் அதைச் சுத்தம் செய்து மறுபடி தெருவில் நடப்பார்; சட்டியில் மூன்று பிடியன்னம் விழுந்தாற் போதும், அப்படியே நின்ற வாக்கில் சாப்பிட்டு விட்டு, சட்டியைக் கழுவி, ஒரு கடையில் வைத்து விட்டுப் போய் விடுவார். அவர் போக்கு வரவு யாருக்குந் தெரியாது; காடு மலேகளில் தனியாகச் சென்றிருப்பார். சரியான பக்குவ நிலேயில் வரும் அன்பர்களுக்குச் சரியான உபதேசம் செய்தனுப்புவார். சும்மா வேடிக்கை பார்க்க வருவோரை வேடிக்கையாகச் சிரித்தனுப்புவார். அவர் ஒரு ஊரில் இரண்டு நாளேக்கு மேல் தங்க மாட்டார். சிலர் அவரைப் பைத்தியம் என்பர், சிலர் கல்லெடுத்தடிப்பர், சிலர் மலர் தூவி வணங்குவர், சிலர் புகழ்வர், சிலர் வைவர். அவர் எதையும் பாராட்டாமல் ஜனக் கூட்டத்தைப் பார்த்து, "நடக்கட்டும் நாடகம்," என்று சிரித்துச் செல்வார். அவரைப் பொதுவாகச் சட்டிச்சாமி என்றழைப்பர்.

அவர் தன் பெயர் ஊர் இனம் எதுவும் சொல்வதில்லே.

இந்த ஞானி ஒரு நாள் முகல் தெருவிற்கு வந்தார். சிவநேசம் அவரை ஆர்வமுடன் வரவேற்று உபசரித்தார். சட்டி நிரம்பச் சோறிட்டார். சாமியார் சட்டி சட்டியாக அள்ளிச் சுற்றியிருந்த ஏழைகளுக்குக் கொடுத்தார். வழக்கப்படி மூன்று பிடியுண்டு, "சிவநேசம், சிவநேசனுயிரு; மாட்டிக் கொள்ளாதே. தைரியமாகக் குதித்தோடு. உடம்பு போனுலும் உன்னே யிழக்காதே, சிவனே நம்பியிரு," என்று சொல்லிச் சென்ருர். இந்த வார்த்தைகளேச் சிவநேசம் எழுதி வைத்துக் கொண்டு சிந்தித்துச் சிந்தித்து ஏதேதோ பொருள் செய்து வந்தார். மாடியிலிருந்து குதித்தோடு என்பதன் பொருளே அவருக்கு விளங்க வில்லே. தீவிரமான சிவ ஜபம் செய்து வந்தார். அடியார்களிடம் அன்பு வைத்துத் தொண்டு செய்தார். பல அடியார்கள் வந்தனர், எல்லாரையும் அவர் நம்பினர். அதுதான் ஆபத்தானது.

(தொடரும்)

★

புத்தக ஆராய்ச்சி:

★

[சந்திரநாத்: சரத் சந்திர சட்டர்ஜி. மொழி பெயர்ப்பு: ஆர். ஷண்முக சுந்தரம். பிரசுரம்: புதுமலர் நிலையம், கோயமுத்தூர். விலை ரூ. 1—8—0]

தமிழ் நாட்டு ரசிகர்களின் நெஞ்சைக் கொள்ளை கொண்ட சரத் சந்திரரின் தலை சிறந்த நாவல்களில் ஒன்று சந்திரநாத்.

ஒரு இளம் பெண்ணின் உள்ளத்தில் நிகழ்கிற கோமளமான எண்ணங்கள், கணவனுக்கும் மனைவிக்கும் இடையே துல்லியமாக இருக்க வேண்டிய பரிசுத்த அன்பின் பாசம், வாழ்க்கை இன்பத்திற்குத் தடையாக ஏற்படும் சிறு சிறு தடைகள் — இவைகளைச் சுற்றி அற்புதமாக ஒரு இனிய கவிதை போல் கதை புனையப்பட்டிருக்கிறது. உன்னதமான சிருஷ்டி. என்றைக்கும் மனதை விட்டு அகலாத பாத்திரங்கள். இந்த அருமையான நாவலை சரத் சந்திரரின் முக்கியமான எல்லா நாவல்களையும் மொழி பெயர்த்துள்ள ஆர். ஷண்முக சுந்தரம் தான் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். பிறகு கேட்பானேன்?

★

[ரமா: சரத் சந்திர சட்டர்ஜி. மொழி பெயர்ப்பு: ஆர். ஷண்முக சுந்தரம். பிரசுரம்: புது மலர் நிலையம், கோயமுத்தூர். விலை ரூ. 2-0-0]

* *

மலர்கள் ஒவ்வொன்றிலும் தனியான மணம் நிறைந்திருப்பது போல், சரத் சந்திரர் சிருஷ்டித்துள்ள நாவல்களில் ஒவ்வொன்றிலும் ஒரு தனியான ரசம் மனசை வசீகரிக்கிறது. நாம் இந்த உலகை மறந்து இன்ப உலகிலே சஞ்சரிக்க வேண்டுமா? உள்ளத்துக்கு உல்லாசத்தைத் தந்து பாரதியார் சொல்லியது போல், 'மண்ணுலகிலே விண்ணுலக இன்பம் பெற வேண்டுமா' இதோ ரமா! இந்தப் பெரிய நாவல் முதலிலிருந்து கடைசி வரை தேம் பாகு போல் திகட்டாத சுவை தருகிறது. மீண்டும் மீண்டும் சலிப்பில்லாது படிக்கலாம்.

* *

[கிராம ஊழியன்: மாதம் இரு முறை. கௌரவ ஆசிரியர். கு. ப. ராஜகோபாலன். ஆசிரியர். திருலோக சீதாராம். விலை 4 அணா. துறையூர் திருச்சி.]

சிறந்த முறையில் பிரபல எழுத்தாளர்களின் கதை, கட்டுரை, அறிஞர்களின் உயர்ந்த விஷயங்களுடன் வெளி வரும் இந்தச் சஞ்சிகையை ரசிகர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம். ஆசிரியர் உற்சாகம் மிக்க இளம் எழுத்தாளர். கௌரவ ஆசிரியர் புகழ் பெற்ற மறுமலர்ச்சித் தலைவர். இந்த மாதிரி நல்ல பொருத்தம் வாய்த்திருக்கும் போது மலரின் சிறப்பைச் சொல்ல வேண்டுமா?

* *

கூளப்ப நாய்க்கன் காதல்: பதிப்பாசிரியர்: மு. அருணாசலம். பிரசுரம்: சக்தி காரியாலயம், சென்னை. விலை ரூ. 1—4—0]

சாதாரணமாகப் பதிப்பாசிரியர்கள் மூலத்தை இன்னும் கொஞ்சம் கடினமாக்கி நமக்கு அதை 'விளங்காத ரகசியமாக'ச் செய்யும் காரியத்தையே தான் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறார்கள். இந்த

முறையிலே தான் அழகிய கவிதைகள் 'அரும் பதவுரை'களின் கீழும், பதிப்பாசிரியர்களின் வசனம் என்ற நெரடான திரையின் அடியிலும் மறைந்து போய் விட்டன. ஆனால் ஸ்ரீ அருணாசலம் அவர்கள் தூய தமிழில், யாருக்கும் விளங்கும் முறையில் அழகாக குறிப்புகளும், விளக்கங்களும் தந்து, சுலப மாக்கி விட்டார். நல்ல கவிதை. அதற்கு நல்ல விளக்கம் இது. இந்த மாதிரியே சிறந்த நூல்களைப் பதிப்பித்தால் ரசனைச் சுவை வளர ஏதுவாகும்.

* * *

[புயல்: ரவீந்திரநாத் தாகூர் மொழிபெயர்ப்பு: டி. என். குமாரசாமி. பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். சென்னை.]

தாகூர் இயற்றிய இந்த நாவலின் அமைப்பே ஒரு கவித்வமாக இருக்கிறது. அபூர்வ கற்பனைச் சம்பவங்கள். சம்பாஷணையும் அதற்கேற்ற வடிவத்துடன் இலங்குகிறது. இந்த மாதிரி சிருஷ்டிகளைக் கண்டாவது சொந்த நாவல் முயற்சி பெருகி வளர்ந்தால் மிக்க நன்றாயிருக்கும். ஆனால், இதெல்லாம் நல்ல முயற்சிக்கு ஒரு அஸ்திவாரம் என்பதில் சந்தேக மில்லை.

* * *

[உயிரோவியம்: ஆசிரியர்: நாரண துரைக் கண்ணன். பிரசுரம்: ஆனந்த போதினி, பிரஸ், சென்னை. விலை அணா 12.]

உயிரோவியம் என்னும் அழகிய பெயருடன் "ஜீவா" (நாரண துரைக் கண்ணன்) சித்திரித்திருக்கிறார் இந்தப் பெரிய சிறு கதையை. இந்தப் புத்தகத்தின் பாத்திரங்களுக்கிடையே செல்லு முன் ஜீவா தந்துள்ள முன்னுரையில் என் மனம் மூழ்கி விட்டது.

ஏனென்றால் என்னை அது மிகக் கவர்ந்து விட்டது. இலக்கிய ஆசிரியருக்கு எப்படி ஓய்வு ஒழிச்சல் என்பதே கிடைப்பதில்லை என்பதைத் தம் அனுபவ வாயிலாக வெளியிட்டிருக்கின்றார். நிற்க,

கதையோ காதல் கதை. காதலைக் கையாளும் கர்த்தா சிறந்த சொற்சிற்பியாக மட்டும் இருந்தால் போதாது. மலரில் மணம் போல் இதயத்தில் நவரசமும், வாழ்வின் தன்மையை ஊடுருவும் திறமும் நிரம்பியிருக்க வேண்டும்.

இந்த அம்சங்கள் எல்லாம் ஆசிரியருக்கு நிறைந்திருக்கிறது. ஒரு இனிய கனவு போல் இருக்கிறது அவர் தந்துள்ள வர்ணனை. ஒரு நல்ல கவிதையைப் படிப்பது போல் தோன்றுகிறது அவர் பாத்திரங்கள் பேசுகையில். ஒரு இனிய கானத்தைக் கேட்டது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது படித்து முடிந்ததும்.

இந்தப் புத்தகத்தை கட்டாயம் வாங்கிப் படித்து இன்னும் அநேகம் ஜீவச் சித்திரங்கள் வெளி வரும்படி செய்ய வேண்டியது ரசிகர்களின் கடமை.

இன்னொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ரசிகர்கள் கடமையைப் பற்றியும், பொது ஜனங்கள் கடமையைப் பற்றியும் அடிக்கடி விமர்சகர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் அந்தப்படி நடக்கிறார்களா? அது விவரம் எப்படியோ நமக்குத் தெரியாது! இருந்த போதிலும் இந்த மாதிரி நல்ல விஷயங்களில் ரசிகர்கள் நம்மோடு ஒத்துழைத்தால் தான் இலக்கியம் வளர ஏதுவாகும். நல்ல இலக்கியம் வளர்ந்தால் தேசம் உருப்படும் என்பதில் அபிப்பிராய பேதம் இருக்கவே முடியாது.

ஹாஸ்ய நடிகன்

கே. பி. கணபதி

உலகத்தில் சிலர் திடீரென்று பிரபல மடைவதை நாம் காண்கிறோம். நமது கதாநாயகன் மருத நாயகம் இந்த சிலரில் ஒருவனுகி விட்டான். மருதநாயகம் குருவிக்குடி என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்து ஆடு மேய்த்துக்கொண்டு தானிருந்தான். தமிழ் நாட்டு நாடக மேடைகளில் தோன்றுவோமென்று அவன், போன ஜென்மத்தில்கூடக் கனவு கண்டிருக்கமாட்டான். ஆனல் அதிர்ஷ்டம் என்று ஒன்று இருக்கிறதே அது அவனைக் கரகரவென்று இழுத்துக் கொண்டு வந்து நாடக மேடையில் ஏற்றி விட்டுவிட்டது; அதிலிருந்து அவன் தலை சிறந்த ஹாஸ்ய நடிகனுகவும் ஆகிவிட்டான்.

இவ்வாறு திடீரென்று ஏற்பட்ட மாறுதலுக்கு சந்தர்ப்பம் ஒன்று வேண்டுமல்லவா! இதைத் தெரிவதற்கு, மருத நாயகத்தின் வாழ்க்கையில் இருபத்தேழாவது வயதுக்கு அப்பால் உள்ள சில நிகழ்ச்சிகளைப் பற்றி நாம் அறிய வேண்டியது அவசியமாயிருக்கிறது.

இருபத்தேழாவது வயதில்தான் மருதநாயகத்திற்குக் கலியாணம் நடந்தேறியது. காளியம்மாள் தான் அவன் மனைவி. கலியாணத்திற்கு முன்பு, குருவிக்குடியில் மருதநாயகத்தைப் பற்றிப் பேசவே அநேகர் பயப்படுவார்கள். கலியாணத்திற்குப் பின்போ அவன் மேய்த்து வந்த ஆடுகளை விட அவன் சாதுவாகி விட்டான். மருதநாயகத்தின் சுபாவத்தில் இத்தகைய மாறுதலைச் செய்துவிட்ட காளியம்மாளுக்கே தனது திறமையைப் பற்றி ஆச்சரியம் உண்டாயிற்று.

காளியம்மாளின் வசவுகளைக் கேட்டுக்கேட்டு மருதநாயகத்தின் மனதில் தழும்பு படிந்து விட்டது. மனத் தழும்பைப் போலவே, அவனுடைய உடம்பிலும் பல தழும்புகள் ஏற்பட்டன. ஆனல், மருதநாயகம் இவைகளைப் பற்றியெல்லாம் கவலைப் படுவதே இல்லை. 'இனிமேல், தான் எவ்வாறு நடந்து கொண்டால், தன் மனைவியிடம் அடி, திட்டுகள் வாங்காமலிருக்கலாம்' என்பதே அவனுடைய சதாகால சிந்தனை. "போடு தோப்புக்கரணம்'' என்று காளியம்மாள் சொன்னல், "எண்ணிக்கோ'' என்ற பதிலைத்தவிர வேறு பதில் சொல்ல மாட்டான் மருதநாயகம்.

ஆனல் எவ்வளவு காலம்தான் இம்மாதிரி பொறுத்துக் கொண்டிருப்பான்! பொறுமைக்கும் ஒரு எல்லைக்கல் உண்டல்லவா! ஒரு நாள் இவர்களுடைய குடும்பக் கலகம் ரொம்ப முற்றிவிட்டது. காளியம்மாள் தன் புருஷனை "உம் வெளியே போ, இங்கே வராதே!'' என்று துரத்திக் கொண்டிருந்தாள். இதே சமயத்தில் மருதநாயகத்தின் பால்ய சிநேகிதனை சோணசலம் அவனைப் பார்க்க வந்தான். வீட்டிற்குள் கலாட்டா நடப்பதைக் கண்ட சோணசலம் வெளியே நின்று விட்டான். காளியம்மாள் திட்டிய வசவுகள் வெளியில் நின்றுகொண்டிருந்த சோணசலத்தின் காதுகளில் விழுந்தன. அவனுக்கு மருத

நாயகத்தின்மீது இரக்கம் உண்டா யிற்று. மருதநாயகத்தின் குடும்ப வாழ்க்கையைப்பற்றி ஊரில் விவர மாகக் கேட்டறிந்த சோணசலத் திற்கு உள்ளூர மகிழ்ச்சி பொங்கி யது.

சோணசலம் பாலகான சோக கீத நாடகக் கம்பெனியைச் சேர்ந்த ஒரு நடிக ரத்தினம். அவன் வேலை பார்த்து வந்த நாட கக் கம்பெனிக்கு நல்ல ஹாஸ்ய நடிகன் வேண்டுமென்று கம் பெனி மானேஜர் அவனிடம் வெகு நாளாகச் சொல்லிவந்தார். குருவிக்குடியில் தனது நண்பன் மருதநாயகம், ஒரு வருஷ மண வாழ்க்கையின் மூலம் தமிழ் நாட்டு நாடக மேடைக் கேற்ற ஹாஸ்ய நடிகனைத் தயாராகியிருப்பதைக் கண்டு அவன் ஆனந்தமடைந்தான்

காளியம்மாளால் அடித்து விரட் டப்பட்ட மருதநாயகம் வீட்டுக்கு வெளியே வந்தான். அவனைக் கண்டவுடனேயே, "அப்பா மருதை, உனக்குக் கலியாணம் ஆனபிறகு நான் உன்னைப் பார்க் கவே இல்லை. ஆனல், உன்னைப் பற்றி இப்போ ஊரில் ரொம்ப கேள்விப்பட்டேன். அதுவும் தவிர, இரண்டு நிமிஷத்திற்கு முன் னல், உன் வீட்டில் நடந்த கலாட் டாவையும் பார்த்தேன். அத னலே, கவலைப்படாமல், இப்ப டியே என்னேடு மதுரைக்கு வந்து விடு" என்முன் சோணசலம்.

தன் சிநேகிதன் கூறிய இவ் வார்த்தைகள் மருதநாயகத்தின் காதுகளுக்கு, முதல்தரமான கொம்புத் தேனகவே இருந்தன. காளியம்மாளை விட்டு ஓடுவது என்று சொன்னவுடனேயே அவ னுக்குத் தலைகால் தெரியவில்லை. இடுப்பில் கட்டியிருந்த துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு சோணசலத்துடன் கிளம்பிவிட்டான். வீட்டினுள் காளியம்மாள், பத்திரகாளி சொரூ பத்தில் நின்றதை அவன் திரும் பியே பார்க்கவில்லை. "எங்கே போனலும் உன்னை வுட்டுட மாட் டேன்" என்று அவள் கர்ஜித்தது மட்டும் மருத நாயகத்தின் காதில் விழுந்தது. "உம், பார்ப்போமே!" என்று மருதநாயகம் மெதுவாகத் தனக்குள் முணகிக்கொண்டான்.

மருதநாயகமும் சோணசல மும் ரயில்வே ஸ்டேஷனை அடை ந்தபோது மணி சரியாகப் பன்னி ரண்டு அடித்தது. பன்னிரண் டரை மணி வண்டிவர இன்னும் அரை மணி நேரம்தான் இருக்கிற தென்பதை ஸ்பஷ்டமாகத் தெரி ந்த மருதநாயகம் ப்ளாட்பாரத்தி லேயே போய் நின்று கொண் டான். அவனுடைய வீட்டிற்குப் போய் வேஷ்டி துணிகளையும் படுக் கையையும் எடுத்துக் கொண்டு வரும்படி சோணசலம் பல தடவை சொல்லிப் பார்த்தான். ஆனல் மருதநாயகம் பிடிவாதமாக "சோணசலம் நான் இப்போ, வூட்டுக்குப் போன மீளமாட் டேன்" என்று மறுத்து விட் டான். உடுத்திய வேஷ்டியுட னும், போட்ட துண்டுடனும் தான் அவன் மதுரையம்பதியில் கால் வைத்தான். போகும் வழி யெல்லாம் அவன், "ஆக்கிட் பண் றதுன்ன எப்படி, சோணசலம்? எனக்கு அது ஒண்ணும் தெரி யாதே! அவங்க எனக்குப் பழக் கிக் குடுப்பாங்களா?" என்று சோணசலத்தைப் பஞ்சரித் துக் கொண்டு வந்தான். "மருதை, அதைப்பத்தி நீயி, ஒண் ணுமே கவலைப்பட வேண்டாம். நீயி உங்க வூட்டுலே பழகியிருக் கிறதை அப்படியே நாடகமேடை யிலே நடத்திக் காட்டிட்டாப் போதும், மருதை" என்று சோணசலம் அடிக்கடி அவனுக் குச் சமாதானம் சொல்லி வைத் தான்.

இருவரும் நாடகக் கம்பெனிக்குள் போனதும் சோணாசலம், மருத நாயகத்தை மானேஜரிடம் அழைத்துப் போய் அவனுடைய வாழ்க்கை வரலாறு முழுவதையும் தான் கேள்விப்பட்ட படியே வர்ணித்துக் காட்டினான். மானேஜருக்கு உற்சாகம் மிதமிஞ்சிப் போய் விட்டது. அவர் மருத நாயகத்திடம் ஒரு கேள்வி கூடக் கேட்காமல், பக்கத்தில் நின்ற ஹாஸ்ய நடிகை பார்வதாம்பாளைச் சுட்டிக்காட்டி, "மிஸ்டர் மருத நாயகம், நீங்களும் இந்த அம்மாளும்தான் நமது நாடகங்களில் ஹாஸ்யக் காட்சிகளை நடிக்க வேண்டும். இன்று முதலே, நீங்கள் நடிக்க ஆரம்பித்து விடலாம். வாழ்க்கை என்ற பயிற்சிச் சாலையிலேயே நீங்கள் ஒருவருஷம் நன்றாகப் பயிற்சி பெற்றிருப்பதனால், ஒத்திகை கூட அவசியமில்லை. நாடக மேடையை உங்கள் வீடாகவே நினைத்துக் கொண்டு விட்டீர்களானால், நடிப்பு அபாரமாக இருக்கும். மனைவிக்கு நன்றாகப் பயப்படுங்கள். இதுதான் ஹாஸ்ய நடிகருக்கு வேண்டிய மூலமந்திரம். மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று மூச்சு விடாமல் பேசிக்கொண்டே போனார்.

விழித்த கண் மூடாமல் பார்வதாம்பாளின் உருவத்தையே பார்த்து மலைத்துக் கொண்டிருந்த மருத நாயகம் ஏதோ சொப்பனத்திலிருந்து எழுந்தவன் போல, "சரி, ஆகட்டும்" என்றான். பின்பு அவன் சோணாசலத்திடம் தனியாகப் போய், "என்னப்பா சோணாசலம், அறையில் கிடந்த என்னை அம்பலத்தில் இழுத்து வுட்டுட்டியே! அந்த அம்மாளைப் பார்க்கும் போதே எனக்கு நடுக்கமா இருக்கே! இதை விட்டாலும் வேறே போக்குமில்லையே!" என்று அலறினான். "அப்பா மருதை, பார்வதாம்பாள், பார்வைக்கு ஆனைக்குட்டியாக இருந்தாலும், சுபாவத்தில் அவள் ஆட்டுக்குட்டிதான். ஆகையினால் கவலைப்படாதே. அவள் நாடகத்தில் உன்னுடைய மனைவியாக நடிப்பாள். நீ எது செய்தாலும்சரி. அவள் உன்னை திட்டு திட்டென்று திட்டி, விறகுக் கட்டை, மூங்கில் கழி, அம்மிக் குழவி, ஏதாவது ஒண்ணை எடுத்துக்கிட்டு அடிக்க வருவா. ஆனா அடிக்க மாட்டா. அடி உம் மேலே விழாவிட்டாலும் நீ அவளைக் காணும் போதெல்லாம் 'கிடு கிடு'ன்னு பயந்து நடுங்கணும். இதுதானப்பா எங்க நாடகமேடையிலே 'ஆஸ்யம்' 'ஆஸ்யம்'னு சொல்றது. இதை பார்க்கிற ஜனங்கள் எல்லாரும் கைதட்டுவாங்க. ஒரு பத்து நாளு நடிச்சா, எல்லாம் சரியாய்ப் போயிடும்" என்று சோணாசலம் அவனைத் தேற்றினான். பின்பு மருத நாயகம் நடிக்க வேண்டிய பாகத்தை அவனே சொல்லிக் கொடுத்தான். பார்வதாம்பாள், காளியம்மாளைப் போல நிஜத்துக்கும் அடிக்க மாட்டாள் என்று அவன் உறுதி கூறியதன் பேரில் தான், மருத நாயகம் வேலையை ஒப்புக் கொள்ளச் சம்மதித்தான்.

முதல் முதலாக நாடக மேடைமீதுதோன்றிய ஹாஸ்ய நடிகசிகாமணி, மருதநாயகத்தைப் பற்றி மறு நாளே ஊர் முழுதும் பேச்சாக இருந்தது. நாடகத்தில் மனைவிக்கெதிரில், மருதநாயகம் நாக்குக் குழற, கைகால் வெடவெடக்கப் பதுங்கிப் பதுங்கி வந்ததைக் கண்ட பொதுஜனங்களின் உற்சாகத்தைச் சொல்லி முடியாது. விசில், கைதட்டுதல், அவுட்டுச் சிரிப்புகள்! 'ஜோர்!' 'பேஷ்!' 'அச்சா!' என்ற கூக்குரல்கள்! இப்படியாகக் கொட்டகை முழுதும் ஒரே ஆரவாரமாக இருந்தது. மருத நாயகம் பார்வதாம்பாளிடம்

அடிபடாமல் பயந்து குதித்தோடிய போது, தரை மகாஜனங்களிலும் சிலர் உத்சாகத்தினால் குதிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அதுமுதல் ஒவ்வொரு நிமிஷமும் மருதநாயகத்தின் புகழ் கனகாம்பிரத்தின் மணம் போல தமிழ் நாடெங்கும் பரவி வந்தது. பல நாடகக் கம்பெனியார்கள் மருதநாயகத்தைத் தங்கள் கம்பெனியில் சேர்ந்துவிடும்படி ஆசை காட்டினார்கள். அதைக்கண்ட பால கான சோககீத நாடகக் கம்பெனி மானேஜர், மருதநாயகத்தின் சம்பளத்தை அடுத்தமாதமே இரண்டு மடங்கு உயர்த்திவிட்டார். மருதநாயகம், நாளொரு புகழும், பொழுதொரு கீர்த்தியும் பெற்று மகா ஜனங்களை ஹாஸ்யக் கடலில் மூழ்கடித்துத் தமிழ் நாடெங்கும் ஜயஸ்தம்பங்களை நாட்டி வந்தான்.

தன் புகழ் இவ்வாறு பரவி வருவதைக் கண்டு மருதநாயகம் ஒரு விதத்தில் மிகவும் கவலைப் பட்டுக் கொண்டிருந்தான். இவ்வளவு புகழ் பெற்ற பிறகு, தன்னுடைய இருப்பிடம் காளியம்மாளுக்குத் தெரியாமலா இருக்கப் போகிறது! தன் இருப்பிடம் அவளுக்குத் தெரிந்து விட்டால் என்ன செய்வது என்று நினைக்கும் போது அவனுக்கு ஒரே பயமாக இருந்தது. "எங்கே போனாலும் உன்னை வுட்டுட மாட்டேன்" என்று அவள் சபதம் கூறியதும் அடிக்கடி அவன் நினைவுக்கு வந்து கொண்டிருந்தது.

அவன் பயந்தது வீண் போகவில்லை. தன் புருஷன் ஒரு ஹாஸ்ய நடிகனைத் திகழ்ந்து கொண்டிருந்த செய்தி காளியம்மாளின் காதுக்கும் எட்டியது.

ஒரு நாள் இரவு பாலகானசோக கீத நாடகக்கம்பெனியின் ஹாஸ்ய நடிகை பார்வதாம்பாளுக்குத் திடீரென்று தலைவலி வந்து விட்டது. தான் அன்று மேடை மீது தோன்ற முடியாதென்று மானேஜரிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டாள். மானேஜருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அன்று ஷ்பெஷல் நாடகம் ஆனதால் அவர் ஏராளமான கூட்டத்தை எதிர் பார்த்திருந்தார். நாடகத்தின் ஹாஸ்யக் கட்டத்தில் மருதநாயகம் தனியாக நின்று கரடியாகக் கத்தினாலும், மகா ஜனங்கள் திருப்தி அடைய மாட்டார்களென்று அவருக்கு நன்றாகத் தெரியும். ஹாஸ்ய நடிகையும் சேர்ந்து நடித்தாலொழிய அவர்களுக்கு ரஸிப்பு ஏற்படாது. ஒரு வேளை எல்லோருடைய டிக்கட் பணத்தையுமே வாபீஸ் பண்ண வேண்டி வந்தாலும் வந்துவிடும். ஆகையால் மானேஜர் கூண்டில் அடைபட்ட புலி போலத் தன் பங்களாவில் எல்லோர் மீதும் எரிந்து விழுந்து கொண்டிருந்தார். அச் சமயத்தில், அவர் வீட்டிற்குப் புதிதாக வந்திருந்த வேலைக்காரி அவரிடம் வந்து, "எனக்கும் கொஞ்சம் 'ஆக்கிட்' பண்ணத் தெரியும். நானு வேணும்னா, இன்னிக்கி மட்டும், நாடவத்திலே நடிக்கிறேனுங்க" என்றாள்.

தக்க தருணத்தில், இவ்வளவு துணிகரமாகத் தனக்கு உதவி செய்ய முன் வந்த வேலைக்காரியை எப்படிப் புகழ்வதென்றே தெரியவில்லை. "ஹே, பெண் சிங்கமே, நினது பராக்கிரமத்தை மெச்சுகிறோம்" என்று கூறி, தான் பாராயணம் பண்ணி வைத்திருந்த ஒரு ஸ்தோத்திரப் பாடலையும் பாடி விட எண்ணினார். ஆனால், பெரிய ஆர்மோனியப்பெட்டி ஒன்று இல்லாமல் அவரால் பாட முடியாது. ஆகையால் அவள் மீது ஒரு பாட்டும் பாடாமலே அவளைத் தன் மோட்டாரில் ஏற்றிக்

கொண்டு கொட்டகைக்குப் போய்ச் சேர்ந்தார்.

அவர் போன சமயத்தில் நாடகம் ஆரம்பித்து அரை மணி நேரமாயிற்று. பொது ஜனங்கள் ஹாஸ்யச் சுவையை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஹாஸ்ய நடிகர் மருதநாயகம் மேடை மீது தோன்றுவதற்கு இன்னும் பத்தே நிமிஷங்கள் தானிருந்தன. மானேஜர் ஒரு நிமிஷத்தைக் கூட வீணாக்காமல், தன்னோடு அழைத்து வந்த வேலைக்காரியை நாடக உடை அணிவதற்கு அனுப்பி விட்டு வெளியே வரத் தயாராக நின்ற மருதநாயகத்திடம் ஓடி வந்தார். அவனை அவசரமாகக் கூப்பிட்டு, "மருதநாயகம், ரொம்ப நேரமாகி விட்டது. முதலில் நீ மட்டும் போ. ஒரு புது நடிகை இரண்டே நிமிஷத்தில் மேடை மீது தோன்றுவாள். அவள் நாடக மேடைக்கே புதிதாகையால் அவளுக்குப் பயம் ஏற்படாமல் நடந்து கொள்" என்று அவனிடம் எச்சரித்து மேடைக்கு அனுப்பினர். "புது நடிகை யார்? பெயர் என்ன?" என்று மருதநாயகம் கேட்பதற்குள் 'ஸீன்' உயர்ந்து விட்டது.

ஹாஸ்ய நடிக சிகாமணி மருதநாயகம் மேடையில் தோன்றி ஒரு வேடிக்கைப் பாட்டு பாடி விட்டு "ஆஹா! நானு, பணம் சம்பாறிக்காமப் போனு பூங்கொடி என்னை அடி அடின்னு அடிப்பாளே, என்ன பண்றது!... ஆ! ரோசனை வத்துடுச்சு!...... உம். வூட்டுக்குப் போகாமே, இன்னிக்கு மட்டும் தன்னுசி ஆகிக்கிட வேண்டியது தான்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, புது ஹாஸ்ய நடிகை கையில் ஒரு விறகுக் கட்டையுடன் தோன்றி "என்னது? நீயி, தன்னுசியாவா ஆவப் போறே?" என்று கத்திக் கொண்டே அவனை நோக்கி ஓடி வந்தாள்.

எதிர் பாராதபடி தன் மனைவி காளியம்மாள் இவ்வாறு விறகுக் கட்டையுடன் மேடை மீது துரத்தி வந்ததைக் கண்ட மருதநாயகம் வெலவெலத்துப்போய் விட்டான். பேயைக் கண்ட பெண் குழந்தை போல 'ஓ!' வென்று அலறிக் கொண்டு மேடையின் விளிம்பு வரை ஓடினன். காளியம்மாள் இன்னும் விரட்டிக் கொண்டு பின்னல் வந்ததைப் பார்த்தானே இல்லையோ, மேடைக்கு வெளியே எகிறிக் குதித்து நாற்காலிகளுக்கடியில் போய்ப் பதுங்கிக் கொண்டான். இதைக் கண்ட ஜனங்கள் துள்ளவே ஆரம்பித்து விட்டார்கள். "நடிப்பு அபாரம்" என்ருர்கள். கொட்டகையே தகர்ந்து விடுவது போல சிரிப்பொலிகள் முழங்கின. இதுவரை என்றுமில்லாதபடி ஏற்பட்ட ஜனங்களின் குதூகல ஆர்வாரத்தைக் கண்ட கம்பெனி மானேஜரின் உள்ளம், நாளைய நாடகத்தில் வசூலாகப் போகும் பெரும் தொகையைக் கணக்கெடுத்து மகிழ்ந்து கொண்டிருந்தது.

கொட்டகையில் ஏற்பட்ட அமளி குமளி சுமார் பத்து நிமிஷம் வரை ஓயவே இல்லை. பின்பு "ஸைலன்ஸ்!" "ஸைலன்ஸ்!" "ஒன்ஸ் மோர்!" என்ற இங்கிலீஷ் கோஷங்கள் மூலைக்கு மூலை கிளம்பிற்று. இவ்வாறு பதினைந்து நிமிஷம் கழிந்தது. பின்பு பொது ஜனங்களிடையே ஒருவாறு அமைதி நிலவியது. ஆனல் நாற்காலிக்கடியில் போய்ப் பதுங்கிய ஹாஸ்ய நடிகர் மருதநாயகம் அங்கிருந்து இன்னும் எழுந்திருக்கவே இல்லை. லைட்டுகள், மிருதங்கம், தபலா எல்லா வற்றையும் தள்ளிக் கொண்டு எகிறிக் குதித்த

தால், அவருக்கு காலில் ஏதேனும் அடி பட்டிருக்குமோ என்று அநேகர் சந்தேகப் பட்டார்கள். மானேஜரும் அவ்வாறே எண்ணி மருதநாயகம் பதுங்கியிருந்த இடத்திற்கு ஓடி வந்து "என்ன சங்கதி" என்று அவனிடம் விசாரித்தார்.

"நான் இனிமே, இந்த நாடக மேடை மேலே திரும்ப வர மாட்டேன். என்னை வுட்டுடுங்க" என்று மருதநாயகம் சொன்ன போது மானேஜருக்குத் தூக்கி வாரிப் போட்டது. என்ன காரணத்தினுல் அவன் அப்படிச் சொல்கிறுன் என்று அறிய அவர் எவ்வளவோ முயற்சி செய்தும் மருதநாயகம் பதில் சொல்ல மறுத்து விட்டான். இதோடு தான் அன்று இரவே எங்காவது ஓடிப் போய் விடுவதாகவும் அவன் அவரிடம் நிச்சயமாகக் கூறினுன்.

நாற்காலிகளுக்கடியில் இவ்வாறு விவாதம் நடந்து கொண்டிருக்கையில் பொது ஜனங்கள் ஒவ்வொருவராக அங்கு வந்து கூட ஆரம்பித்தார்கள். இன்னும் இரண்டு நிமிஷத்தில் கொட்டகையில் குழப்பம் ஏற்பட்டு விடும் போலத் தோன்றியதால், மானேஜர் சட்டென்று மேடை மீது ஏறி எல்லோருக்கும் ஒரு கும்பிடு போட்டு விட்டு, "மகா ஜனங்களே! இன்றைய தினம், நமது ஹாஸ்ய நடிக சிகாமணி ஸ்ரீமான் மருதநாயகம் அவர்கள் எதிர் பாராவிதமாக திடீரென்று தவறி விழுந்து ஹாஸ்ய மூட்ட விரும்பினுர். ஆனுல் எதிர் பாரா விதமாகவே அவருடைய காலில் சிறிது காயம் ஏற்பட்டதனுல், அவர் இன்றைய நாடகத்தில் மீதிப் பாகத்தை நடிக்க இயலாத நிலையில் இருக்கிறுர் என்பதை மிக மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாடகத்தின் மற்ற ஸீன்களைத் தாங்கள் அமைதியுடனிருந்து பார்த்து களி கூறுமாறு நான் தங்களை வணக்கமாக மன்றுடிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தார். மானேஜர் தன் பிரசங்கத்தை முடிப்பதற்குள்ளாகவே, பாதிக் கூட்டம் எழுந்து விட்டது. அடுத்த ஸீன் ஆரம்பித்த போது, 'காம்பிளி மெண்டரி' டிக்கட் வாங்கினவர்கள் தவிர மற்ற எல்லோரும் வெளியே போய் விட்டார்கள். கூட்டத்தோடு கூட்டமாக மருதநாயகமும் வெளியே தப்பிச் சென்று விட்டான்.

பால கான சோக கீத நாடகக் கம்பெனி மானேஜருக்கு அன்றைய நாடகம் ஒரு தலை சிறந்த சோகக் காக்ஷியாகவே இருந்தது. மருதநாயகம் இம்மாதிரி திடீரென்றுக் காலை வாரி விடுவானென்று அவர் எதிர் பார்க்கவே இல்லை. மறு நாள் எந்த விதத்திலும் அவனைத் தேடிப் பிடித்து விடவேண்டும் என்ற தீர்மானத்துடன் அவர் வீட்டிற்குப் புறப்பட்டார். துக்கக் கடலில் ஆழ்ந்திருந்த அவருடைய மனதில் கரு மேகத்திடையே தோன்றும் மின்னல் ஒளியை போன்று ஒரு வித சந்தோஷமும் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. புதிதாக வந்திருந்த தன் வேலைக்காரி சபைக் கூச்சம் சிறிதுமின்றி முதல் நிமிஷத்திலேயே, பொது ஜனங்கள் யாவரும் மகிழும் படியாக நடித்ததில் அவருக்கு அபாரமான திருப்தி ஏற்பட்டிருந்தது. அந்தக் காக்ஷியை நினைக்கும் தோறும் மனதில் ஆனந்தம் தவழ்ந்து விளையாடியது. எப்படியாவது அந்த இரண்டு பேரையும் தனது நாடகக் கம்பெனியின் நிரந்தர ஹாஸ்ய நடிக ஜோடிகளாக ஆக்கி விட வேண்டுமென்பது அவருடைய அந்தராத்மாவில்

முளைத்தெழுந்த ஓர் அபிலாஷை! அவர் வீட்டிற்குப் போனவுடன் அந்த வேலைக்காரி காளியம்மாளைக் கூப்பிட்டு, "காளியம்மா, நீ இன்றைய மாதிரியே தினமும் நமது ஹாஸ்ய நடிகருடன் நடித்து வந்தால் உனக்கு நிறைய சம்பளம் போட்டுத் தருகிறேன்" என்று வாக்களித்தார். காளியம்மாள் தன் வரலாறு ஒன்றையும் இது வரை அவரிடம் தெரிவிக்கவில்லை. அவர் கேட்டதற்கு மட்டிலும், "சரி, நடிக்கிறேனுங்க" என்று ஒப்புக் கொண்டாள்.

மறு நாள் காலையில், மருதநாயகத்தைத் தேடப் போவதற்காக மானேஜர் தன் ஆபீஸ் வாசலில் நின்று கொண்டிருந்த போது, அவருடைய அதிர்ஷ்டமே உருவம் எடுத்துக் கொண்டு வந்தது போல, மருதநாயகம் அவரிடம் வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் மானேஜரின் ஆனந்தம் எல்லை கடந்து போய் விட்டது. ஆனந்த மேலிட்டால் அழுகையாக மாறி விடுகிறதல்லவா! இந்த உண்மையை மானேஜர் நிதர்சனமாகவே காட்டி விட்டார். ஹரிச்சந்திர மயான காண்டத்தில், ஹரிச்சந்திரன் தான் காத்து வரும் சுடலைக்கு வந்திருப்பவள் தன் மனைவியென்று அறிந்தவுடன் அவளைக் கட்டிக் கொண்டு அழுதது போல அவர் மருதநாயகத்தைக் கட்டிக் கொண்டு பிரலாபிக்க ஆரம்பித்தார். மருதநாயகம் இம்மாதிரியான பிரலாபங்களையெல்லாம் நாடகத்தில் அடிக்கடி பார்க்க நேரிட்டிருந்ததனால், அவருடைய சாகசத்தைக் கண்டு அவன் மயங்கி விடவில்லை. வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாகவே அவரிடம் பேச ஆரம்பித்தான். "அந்த புது ஆக்கிட்டர் பொம்பளை கூட நான் நடிக்கவே முடியாது" என்று தீர்மானமாகச் சொன்னான். மானேஜர் அவனை ஆஸ்வாசப் படுத்தி, "என்? எதற்காக அவளுடன் நடிக்க மாட்டேன் என்கிறாய்?" என்று கேட்டுப் பார்த்தார். அதற்குக் காரணமே கூறமுடியாதென்று அவன் மறுத்து விட்டான்.

புதிய ஹாஸ்ய நடிகையின் நடிப்பை ஒரே நிமிஷத்தில் கண்டு கொண்ட பொது ஜனங்கள் இந்த ஹாஸ்ய ஜோடிகளையே தான் விரும்புவார்களென்பது, அனுபவம் வாய்ந்த அந்த மானேஜருக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் அவர் மருதநாயகத்தினிடம், "புது நடிகையோடு நடிக்கா விட்டால், நீ நமது கம்பெனியில் இருந்தே பயனில்லை" என்றார். மருதநாயகம் இத்தகைய பதிலை எதிர்பார்க்கவில்லை. தான் அவ்வாறு சொன்னால், காளியம்மாளைக் கம்பெனியிலிருந்து நீக்கி விடுவாரென்று அவன் நினைத்தான். மானேஜர் இவ்வாறு சொன்னவுடன், "ஐயா, உங்கள் கம்பெனியில் வேலை பார்க்க எனக்கு இஷ்டமில்லை" என்று சொல்ல யோசித்தான். ஆனால் தனக்கு இவ்வளவு பேரும் புகழும் வாங்கிக் கொடுத்த அந்தக் கம்பெனி மானேஜருடைய மனம் நோகும்படி செய்யவும் அவனுக்கு மனம் வரவில்லை. ஆகையால் சாயந்திரம் வந்து அவரைச் சந்திப்பதாகச் சொல்லி விட்டு மருதநாயகம் அங்கிருந்து போய் விட்டான்.

அங்கிருந்து புறப்பட்ட மருதநாயகம் ஒரு ஹோட்டலில் புகுந்து காப்பி சாப்பிட்டுக் கொண்டே ஒரு முடிவுக்கு வந்தான். எவ்வித காரணத்தை முன்னிட்டும் காளியம்மாளின் முகத்தில் விழிக்கவே கூடாது என்பது தான் அவன் கடைசியாகத் தீர்மானித்த முடிவு. காப்பி சாப்பிட்டானவுடன் அவன் பால கான சோக கீத நாடகக் கம்பெனிக்குப் போட்டியாக நடந்து கொண்டி

ருக்கும் கான பால கீத சோக நாடகக் கம்பெனி மானேஜரைப் போய்ப் பார்த்தான். தன்னே அவருடைய கம்பெனியில் சேர்த்துக் கொள்ள முடியுமா என்றும் கேட்டு விட்டான். அந்தப் போட்டா போட்டி நாடகக் கம்பெனி மானேஜர் மருதநாயகத்தை எப்படியாவது தன் கம்பெனிக்கு இழுத்துக் கொள்ள வேண்டுமென்று வெகு காலமாக எண்ணிக் கொண்டிருந்தார். இப்பொழுது பழம் நழுவி பாலில் விழ வருவது போல மருதநாயகமே தன்னிடம் வந்து இவ்வாறு கேட்டவுடன் அவர் ஒரு கரை காணு இன்ப சாகரத்தில் விழுந்து மூச்சுத் திணறிக் கொண்டிருந்தார். பாலில் விழுந்த வாழைப்பழம் தன் வாயிலேயே வந்து விழும்படி செய்வதற்கு, அவருடைய மூளை வெகு தீவிரமாக யோசனை பண்ணிக் கொண்டிருந்தது. சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவர் போல, "காந்தா, காந்தா" என்று இரண்டு கதறு கதறினுர். உடனே சுமார் பதினேழு வயது மதிப்பிடக் கூடியதும், பெண்ணென்று சொல்லக் கூடியதும், ஆகியதோர் பெண் உருவம் கையில் விளக்கு மாறு சாணிச் சட்டியுடன் அங்கே பிரசன்னமாயிற்று. மருதநாயகம் அந்தப் பெண்ணின் ஆகிருதியையும் கோரப் பற்களையும் கண்டு திடுக்கிட்டுச் சோர்ந்து நின்ருன்.

முன் காலத்தில் ஒரே ஒரு ராஜாவுக்குக் குதிரை முகத்தோடுள்ள ஒரு பெண் இருந்ததாக, மருதநாயகத்தின் பாட்டி, அவன் சிறு பையஞக இருந்த போது ஒரு கதை சொல்லியிருந்தாள். ஆனல் குதிரை முகப் பெண்ணைப் பற்றி அப்பொழுதெல்லாம் அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. இப்பொழுது காந்தாவைப் பார்த்தவுடன் அந்த மகா ராஜாவுக்கு குதிரை முகத்தோடு மட்டுமல்ல கழுதை முகத்தோடு கூட ஒரு பெண் இருந்திருக்கலாம் என்று அவனுக்கு நம்பிக்கை உண்டாயிற்று.

இவ்வாறு அவன் பாட்டி கதையைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கையில் அந்த போட்டாபோட்டி நாடகக் கம்பெனி மானேஜர், "மருதநாயகம், இது தான் என் மகள் காந்தாமணி. ஹாஸ்யக்கட்டங்களை அப்படியப்படியே தத்ரூபமாக நடிப்பாள். இவளை நீ கல்யாணம் செய்து கொண்டு, எங்கள் கம்பெனியிலேயே நிரந்தரமாக இருந்து விடலாம். உனக்கு மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளமும் போட்டுக் கொடுக்கிறேன்" என்று கூறினுர்.

காந்தாமணியம்மாளுக்கு அப்பொழுதுதான் தன் தந்தை தன்னை அழைத்ததன் விபரம் நன்ருகத் தெரிய வந்தது. உடனே அவள் மருதநாயகத்தை ஒரு முறை அலட்சியமாகப் பார்த்தாள். பின்பு தகப்பனுரை நோக்கி, "அப்பா இவர் என்னேடு நடிக்க முடியுமா என்று தெரிவதற்கு இப்பொழுதே ஒரு ஒத்திகை நடத்தி விடலாமே" என்று சொல்லிக் கொண்டே அருகே வந்தாள். அவள் வந்த வேகத்தைத் தாங்கமாட்டாது, அங்கிருந்து ஓட்டமெடுத்து பழைய இடத்தை அடைந்த போது தான் அவனுக்கு மூச்சு சரியாக வந்தது.

"என்ன மருதநாயகம், சாயந்திரம் வருவதாகச் சொன்னவன் மத்தியானமே வந்துவிட்டாயே! என்ன யோசனை?" என்று ராஜா தன் மந்திரியை விசாரிப்பதுபோல கம்பீரமாகக் கேட்டார் பழைய மானேஜர். "ஐயா, நான் இங்கேயே வேலை பார்க்கிறேனுங்க. ஆனல் அதுக்கு முன்னடி அந்தப் புது நடிகையம்மாளைத் தனியாகக் கண்டு ஒரு வார்த்தை சொல்லிக்கிடறேன்" என்ருன் மருதநாயகம்.

அதே சமயத்தில் காளியம்மாள் தற்செயலாக அந்தப் பக்கம் வரவே, மானேஜர் இருவரையும் அங்கேயே நிறுத்தி விட்டு சிறிது தூரத்தில் விலகிப் போய் நின்றார். மருதநாயகம் நடுநடுங்கிக் கொண்டே காளியம்மாளின் பக்கத்தில் போய், "காளி, என்னே நீயி நெசத்துக்கும் அடிக்காமே இருப்பியா?" என்று ஒரு வரம் கேட்டான். இதைக் கேட்டதும் காளியம்மாளுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. "என்ன மச்சான், நீயி இன்னுமா எனக்குப் பயந்துக்கிட்டு இருக்கே? முந்தி நீயி ஊரிலே வேலே வெட்டி ஒண்ணுமில்லாமே சுத்திக்கிட்டு இருந்தே. அதனலே உன்னைத் திட்டினேன், அடிச்சேன். இப்போதான் நீயி மாசாமாசம் நூறு ரூவா சம்பளம் வாங்கறியே. உம் பேரு தான் ஒலகமெல்லாம் அடிபடுதே. இனிமே அடிப்பனா உன்னே? என் ராசால்ல நீயி" என்று சொல்லிக் கொண்டே அவன் பக்கத்தில் போனுள். மருதநாயகம் தன் காதுகள் செரந்தமா இரவலா அல்லது சரியானபடி கேட்கும் சக்தியை இழந்து விட்டனவா என்று திகைத்துத் திண்டாடிக் கொண்டிருந்தான். அந்த அமிர்தமயமான வார்த்தைகள் காளியம்மாள் திருவாயிலிருந்துதான் புறப்பட்டன என்று தெரிந்தவுடன் மருதநாயகத்தின் உச்சியும் உள்ளங்காலும் குபீரென்று குளிர்ந்து போய் விட்டது. பக்கத்தில் வந்துகொண்டிருந்த காளியம்மாளேத் தடுத்து, "இரு இரு! இன்னெரு காரியம் சொல்றேன் காளி......... நாம முந்தியே புருசன் பொஞ்சாதி தான் என்கிறது இங்கே உள்ளவங்க ஒருத்தருக்குமே தெரியாது போலிருக்கு. அதனலே ஒண்ணு சொல்றேன் கேக்கிறியா. 'ஐயா, நாங்க ரெண்டுபேரும் கண்ணலம் பண்ணிக்கிட்டு உங்க கம்பெனியிலே வேலே பாக்கிறேம்' அப்படின்னு இந்த மானேசரு கிட்டச் சொல்லிட்டா, அவருக்கு ரொம்பரொம்பச் சந்தோசம் வந்துடும். அவரோட செலவிலே நமக்கு இன்னெரு தடவை கண்ணலத்தை நடத்தி வச்சுடுவாரு. அதுவுந்தவிர காளி, நீயி இப்படி புது மனுசியா ஆன அப்புறம் உன்னைப் புதுப்பெண் கோலத்திலே பாக்கணும்ணு எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு. என்ன சொல்றே?' என்றுன் மருதநாயகம். காளியம்மாளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. "மச்சான், நீயி என்ன சொல்றியோ அப்படியெல்லாம் நானு நடக்கிறேன்" என்று ஒரே முடிவாகச் சொல்லி விட்டாள்.

மானேஜரிடம் அவர்கள் இருவரும் தங்கள் தீர்மானத்தைச் சொன்னவுடன் அவருடைய ஒரு உடம்பு ஒன்றே கால் உடம்பாகப் பூரித்துப் போய் விட்டது.

அதற்கு அடுத்த வாரத்தில் எல்லாப் பத்திரிகைகளிலும் மருதநாயகம் – காளியம்மாள் ஆகிய ஹாஸ்ய நடிகத் தம்பதிகளின் புகைப்படமே முக்கிய ஸ்தானம் வகித்தது. இப்பொழுது இந்த ஹாஸ்ய தம்பதிகள் கால தேச வர்த்தமானத்தை முன்னிட்டு, சினிமா பட உலகத்திலும் புகுந்து அமர்க்களப்படுத்தி வருவதாகத் தெரிகிறது.

★

[பண்டிகைகள் நம்மைக் கேட்காமலே வந்து விடுகின்றன! அது விஷயத்தில் எனக்கு ரொம்ப திருப்திதான் ஆனால், பண்டிகையைத் தொடர்ந்து வரும் செலவுகள் நம்மைக் கேட்டுக் கொண்டே தான் வருகின்றன. அதாவது இன்ன பண்டிகைக்கு இத்தனைதான் செலவு பண்ணலாம் என்று நமக்குத் தோன்றினாலும், ஆசை ஏற்பட்டாலும் அந்தப் படியே செட்டாகச் செய்ய முடிகிறதா? மனைவி என்ற ரூபத்தில் செலவு என்னும் பேய்...... (அவள் காதுக்கு எட்டப் போகிறது) நம் கழுத்தைக் கௌவும் போது, என்னத்தை அனுபவிக்க முடிகிறது? இருந்தாலும் இங்கே சொல்ல வந்தசங்கதி வேறு.

கே. வி. ஆர்.]

தீபாவளி மயம்

[கே. வி. ராகவன்]

முன்பெல்லாம் லண்டனில் தீபாவளி என்று பத்திரிகையில் செய்தி வரும். அதைப் படித்து விட்டு அதிசயப் படுவேன். வெகு நாள் வரைக்கும் எனக்கு உண்மை தெரியாது. அங்கு குடியேறிய இந்தியர்தான் தீபாவளி கொண்டாடினார்கள். ஆங்கிலேயர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்று பின்னர் அறிந்த போது என் அதிசயம் நீங்கிற்று.

இன்று உலக மெல்லாம் தீபாவளி மயமாக இருக்கிறது. சர்வம் தீபாவளி மயம் ஜெகத். நாம் இங்கு ஒரு நரகாசுரன் வதை பட்டதற்காக தீபாவளி கொண்டாடுகிறோம். மேல் நாட்டிலே இன்று நரகாசுரர்களே தோன்றி தீபாவளி கொண்டாடுகிறார்கள். நம்முடைய தத்துவம் வேறு. கலை வேறு. அதனுடைய புனிதமான தன்மையை உலகம் இனி மேல்தான் அறியப் போகிறது. தங்களையே தெய்வங்களாக நினைத்து விஞ்ஞானத்தின் சிருஷ்டி கர்த்தாக்கள் என்று சொல்லும் ஜெர்மானியர்கள் கடந்த இரண்டு வருஷங்களாக ரஷ்யாவிலே மத்தாப்பு வெடிகளையும், ஆகாய வெடிகளையும் மின்னல் வெடிகளையும் கொளுத்துகிறார்கள். ஜெர்மானியர்கள் வீரத்தோடு சண்டையிடவில்லை. விஞ்ஞானம் என்ற போர்வைக்குள் நாச வேலை தான் நடைபெறுகிறது. மனுஷ சக்தியின் முன் இவை எம்மாத்திரம்!

சைனாவைப் பாருங்கள். அவர்கள் நம் குழந்தைகள் விஷயத்தில் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார்கள். எத்தனை ரகமான பட்டாசுகளும் வெடிகளும் தயாரித்து அனுப்பி வந்தார்கள். பெற்

ளோர்கள் அவ்வளவையும் குழந் தைகளுக்கு வாங்கிக் கொடுக்க முடியாமல்த் திண றிக்கொண் டிருந்தார்கள். ஆனல் இந்த இரண்டு வருஷங்களாக தீபா வளியின் மகத்துவத்தை அவர் களே உணர ஆரம்பித்து விட் டார்கள் போலிருக்கிறது. நம் முடைய குழந்தைகளுக்கு பெரிய ஏமாற்றம்தான்.

மலேயா, சிங்கப்பூர், பர்மா இத்யாதி இடங்களில் ஜப்பானி யர்கள் எவ்வளவு அட்டகாசஞ் செய்தார்கள். அங்கு எத்தனை லட்சம் வாயில்லாப் பூச்சிகளை நசுக்கினர்கள். கடல் கடந்து வியாபாரத்திற்காகவும், பொரு ளீட்டவும் சென்ற எத்தனை இந்தியர்கள் பலியானர்கள். பாவம், நினைத்தால் பயங்கர மாக இருக்கிறது. சக்தியற்ற இடங்களிலே சம்ஹார வேலை செய்த இதே ஜப்பானியப் புலி கள் இன்று ரஷ்யர் ஆனை வெடி களின் முன் நிற்க முடியாமல் திணறுகிருர்கள்.

நாமும் தீபாவளி கொண்டா டப் போகிறோம். இது நாம் ஒவ்வொரு வருஷமும் கொண் டாடுவது. பேராசை பிடித்த மேல் நாடுகளைப் போலல்ல. நம்முடைய புனிதமான மதத் தின் பேரால். நமக்குப் பேராசையில்லை. யாருக்கும் ஹிம்சையில்லை. மேல் நாடு

இரு [illegible]

கு [illegible]

வள [illegible] ஆனந்தம். கவலை யற்ற அந்தக் குழந்தையுள் ளத்திலே எப்பேர்ப் பட்ட நினைவுகள். புதிய புதிய ஆடை

கள், பட்டாசுகள், மத்தாப்பு கள், ஆனைவெடிகள், மின்சார சக்கரங்கள், சடபுட, விதவித மான பக்ஷணங்கள் இவைகள் தான் அவர்களின் மனக்கண் ணின் முன் நிற்கும். மேல் நாட்டுக் குழந்தைகளைப் பற்றி இப்போது கொஞ்சம் சிந்தித் துப் பாருங்கள். அந்தக் குழந்தைகளின் உள்ளத்தைக் கொஞ்சம் கற்பனை பண்ணிப் பாருங்கள்.

நம்முடைய குழந்தைகளுக்கு தீபாவளி அன்றைய இரவு தூக்கமே வராது. இரவில் எல்லோருக்கும் முன்னதாக குளிப்பதற்குத் தயாராகி விடுவார்கள். புதிய ஆடை களை அணிந்து கொள்வார்கள். பட்டாசுகள் சுடுவதில் முனைந்து விடுவார்கள். குழந்தைகளின் ஆனந்தமே பெற்றோர்களுக்கு இன்பம்.

தோட்டத்திலே பாதி கிணறு என்பார்கள். அது போல இந்த தீபாவளியில் அதிக பங்கை உடையவர்கள் புது மாப்பிள்ளைகள் தான். பெண்ணைப் பெற்றவர்கள் அவர்களைத் திருப்தி செய்வதில் குழந்தைகளைக் கூட மறந்து விடுவார்கள். அப்படிச் செய் தாலும் மாமாவை மெச்சும் மாப்பிள்ளை ஏது? அடடா! தீபாவளி வந்து விட்டால்

[illegible]

விட்டா[illegible] அவர்களுக்கு ரொம் பச் சந்தோஷம்தான். வெளிக்கு[illegible] காட்ட மாட்டார் கள். பெண்ணும் மாப்பிள்ளை

யும் கலியாணத்திற்குப் பின் வெவ்வேறு இடங்களில் பிரிந்து இருக்க வேண்டி ஏற்பட்டிருக்கும். சிலருக்கு சந்திக்கவோ பேசவோ இடையில் சந்தர்ப்பம் கிடைக்காமல் இருக்கலாம். இந்த தீபாவளியின் சந்தர்ப்பத்தில் அவர்கள் சந்திக்கலாமல்லவா! அந்த சந்திப்பு எப்படி இருக்கும்? இதைப் பழைய மாப்பிள்ளைகளுக்கு விட்டுவிடுகிறேன். கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பார்க்கட்டும்.

சங்கோசம் ஆண் பெண் இருவருக்கும் பொது. இது பெண்ணுக்கு இல்லாவிட்டால் மாப்பிள்ளைக்கு, மாப்பிள்ளைக்கு இல்லாவிட்டால் பெண்ணுக்கு வந்துவிடும். மற்றவர்களின் எதிரில் நேர் நின்று பேச மாட்டார்கள். வெட்கம் பாருங்கள் சிலர் வெட்கப்பட்டாலும் தந்திரசாலிகள். இதற்காக சின்ன மைத்துனர்களையாவது மைத்துனிகளையாவது, தங்கள் சகாயத்துக்கு வைத்துக் கொள்வார்கள். இதை உத்தேசித்தே அவர்களுக்கு பட்டாசுகளும் மத்தாப்புகளும் துப்பாக்கிகளும், காசுகளும் முன் யோசனையோடு கொண்டு வருவார்கள். பின் எதற்கு? மைத்துனர், மைத்துனிகளிடம் காதலா என்ன?

தங்கள் பெண்ணும் மாப்பிள்ளையும் சந்தோஷப் பட்டாலே பெண்ணைப் பெற்றவர்களுக்கு ஆனந்தம். அந்த ஆனந்தத்தில் தங்களையும் மறந்து தாங்களே பெண்ணும் மாப்பிள்ளையும் ஆகிவிடுபவர்களும் உண்டு. அனுபவஸ்தர்கள் இதை அறிவார்கள். தீபாவளியின் நோக்கம் எதுவாயிருந்தால் என்ன? குழந்தைகள் முதல் வயோதிகர் வரை எல்லோரும் ஆனந்தப்பட வேண்டும் என்பதே நமது நோக்கம்.

ஆனல் இன்று யுத்தத்தின் காரணமாக நாட்டிலெங்கும் வறுமையும், பொருளாதார நெருக்கடியும், விலையுயர்வும் தாண்டவமாடுகிறது. இந்த தீபாவளி எப்படி நல்ல தீபாவளியாக இருக்க முடியும்? இந்த நாட்டிலே நித்த நித்தம் தீபாவளி செய்பவர்களைப் பற்றிப் பேசவில்லை. இந்த தீபாவளியில் குழந்தைகளைத்தான் திருப்தி செய்ய முடியுமா? அல்லது மாப்பிள்ளைகளைத்தான் திருப்தி செய்ய முடியுமா? யாருக்கு இரங்குவது? காப்பிக்குச் சக்கரையில்லை என்று மாப்பிள்ளைகள் சீராடாமல் இருக்க வேண்டுமே!

இந்தக் கொடிய யுத்தம் ஒழிய வேண்டும். அதற்காக இதைவிடப் பெரியதொரு தீபாவளி நாம் கொண்டாட வேண்டும்.

★

சிலப்பதிகாரம்

சர்-ஆர்.கே.சண்முகம் செட்டியார்

மனையறம் படுத்த காதை

(தொடர்ச்சி)

(38—52) கண்ணகியும் கோவலனும் நிலா முற்றத்திலே இன்பத்தில் மூழ்கியிருக்கிறார்கள். கண்ணகியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே கோவலன் காதல் மொழிகளைச் சொல்லுகிறான். அவளுடைய அழகைப் புகழ்கிறான். அவளுடைய ஒளிபொருந்திய நெற்றி, வளைந்த புருவம், கொடிபோன்ற இடை, மிளிர்ந்த கண்கள் இவைகளின் பேரழகைப் பற்றிப் பேசுகிறான். "ஈசன் தன்னுடைய முடியில் சூடிய பிறையை உன் நெற்றியாகக் கொடுத்தது பொருத்தமாயிருக்கும். மன்மதன் தன்னுடைய கரும்பு வில்லை உன்னுடைய புருவங்களாகத் தந்தான். இந்திரன் தன் வச்சிராயுதத்தை உன் இடையாகக் கொடுத்திருக்க வேண்டும். முருகக் கடவுள் தனது அழகிய சுடர் வேலை உன் இரு கண்களாக வைத்தான். அந்த வேல் விழிகள் என்னைக் கொல்வது போல் வருத்துகின்றன" என்று இப்படி யெல்லாம் கண்ணகியின் அழகைப் பாராட்டுகிறான்.

குழவித் திங்கள் இமயவர் ஏத்த
அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்,
உரிதின் நின்னோடு உடன்பிறப்பு உண்மையின்
பெரியோன் தருக திருநுதல் ஆக என;
அடையார் முனை அகத்து அமர்மேம் படுநர்க்குப்
படை வழங்குவது ஓர் பண்பு உண்டு ஆகலின்
உருவிலாளன் ஒரு பெருங் கருப்பு வில்
இரு கரும் புருவமாக வீக்க;
மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலின்
தேவர் கோமான் தெய்வக் காவல்
படை நினக்கு அளிக்க, அதன் இடை நினக்கு இடை என;

50 அறுமுக ஒருவன் ஓர் பெறுமுறை இன்றியும்
52 இறுமுறை காணும் இயல்பினின் அன்றே
அம்சுடர் நெடுவேல் ஒன்று, நின் முகத்துச்
செங்கடை மழைக்கண் இரண்டா ஈத்தது ;

பதவுரை

[குழவித்திங்கள் — இளம்பிறைச் சந்திரனை ; பெரியோன் — சிவபிரான் ; இமயவர் ஏத்த — தேவர்கள் புகழ ; அழகொடு முடித்த — அழகாகத் தலையில் சூடிய ; அருமைத்து ஆயினும் — பெருமையை அச்சந்திரன் உடையவனாயிருப்பினும் ; நின்னோடு — திருமகளாகிய உன்னுடன் ; உடன் பிறப்பு உண்மையின் — பாற்கடலிலிருந்து ஒன்றாகப் பிறந்த உரிமை உடையதாதலால் ; திருநுதல் ஆக என — அந்த நிலா உன்னுடைய அழகிய நெற்றியாக அமையட்டுமென்று ; தருக — சிவபிரான் கொடுப்பானாக.

பாற்கடலைத் தேவர்கள் கடைந்த போது திருமகளுடன் நிலாவும் தோன்றியது என்பது கதை. கண்ணகியைத் திருமகளாக வைத்து, அவளுடன் பிறந்த நிலாவை அவளுடைய நெற்றியாகச் சிவபிரான் கொடுக்கவேண்டு மென்றான். அப்படிக் கேட்பதற்குக் காரணம் உடன் பிறப்பு உரிமை.

அடையார் முனை அகத்து — பகைவர்கள் எதிர்த்து நிற்கின்ற போர்க்களத்தில் ; அமர் மேம்படுநர்க்கு — போரில் வெற்றி யடைவோருக்கு ; படை வழங்குவது ஓர் பண்பு — படைக்கலங்களைக் கொடுத்து ஊக்கப்படுத்தும் தன்மை ; உண்டு ஆகலின் — உலக வழக்கமாதலால் ; உருவிலாளன் — மன்மதன் ; ஒரு பெரும் கருப்பு வில் — தன்னுடைய ஒரு பெரிய கரும்பு வில்லை ; இரு கரும் புருவமாக — இரண்டு கருநிறமான புருவங்களாக ; வீக்க — திருத்தி உனக்குக் கொடுப்பானாக ;

பெண்கள் மன்மதனுடைய படை வீரர்கள் என்று இலக்கியங்களில் சொல்வது வழக்கம். படைவீரர்களில் ஒருத்தியாகிய கண்ணகி கோவலனை வெற்றி கொண்டாள். அப்படி வெற்றி கொண்டவளுக்கு மன்மதன் தன் வில்லை இரண்டாக வளைத்து அவள் புருவங்களாகச் செய்து கொடுப்பானாக என்பது கருத்து.

மூவா மருந்தின் — அழிவு கொடுக்காத அமிர்தத்திற்கு ; முன்னர் தோன்றலின் — முன்பாகத் தோன்றியதால் ; தேவர் கோமான் — இந்திரன் ; தெய்வக்காவல் — தேவருலகத்தைக் காக்கின்ற ; படை — வச்சிராயுதத்தை ; நினக்கு அளிக்க — உனக்குக் கொடுப்பானாக ; அதன் இடை — அதனுடைய நடுப்பகுதி ; நினக்கு இடை என — உனக்கு இடையாக இருக்கட்டும் என்று ;

பாற்கடலில் அமுதம் தோன்றுவதற்கு முன் வச்சிராயுதம் தோன்றியது. வச்சிராயுதம் அடியும் நுனியும் பெருத்து, இடைப்பகுதி

சிறிதாய் இருக்குமாதலால் அதை இடையோடு சேர்த்து வைத்துச் சொன்னார்.

அறுமுக ஒருவன் — ஆறுமுகக் கடவுளாகிய முருகன்; பெறு முறை இன்றியும் — தனக்கு ஒரு பயனும் இல்லாவிடினும்; அம் சுடர் நெடு வேல் — தனது அழகிய ஒளியை வீசும் நீண்ட வேலாகிய; ஒன்று — ஒரு கருவியை; நின் முகத்து — உன் முகத்தில்; செங்கடை மழைக் கண் — சிவந்த கடைக்கண்களையுடைய குளிர்ந்த கண்களாக; இரண்டா ஈத்தது — இரண்டு வடிவமாகக் கொடுத்ததற்குக் காரணம்; இறு முறை காணும் — நான் இறந்து விடவேண்டுமென்ற; இயல்பினின் அன்றே — ஆசையினால் அல்லவா?

முருகன் தன் வேலை அவளுடைய கண்களாக அமைத்துக் கொடுத்தான். ஏன்? கோவலனைக் கொல்லுவதற்கு. அதாவது அவளுடைய கண்கள் தன்னைக் கொல்வது போல் வருத்திற்று என்பது கருத்து. வேலின் கொலைத் தொழிலைக் கண்களுக்கும் உரியதாகச் சொன்னார்.

★

(53—61) **கண்ணகியின் சாயல், நடை, குரல் — இவைகளைக் கோவலன் புகழ்கிறான். "பெரிய தோகையை விரித்தாடும் மயில் உன் சாயலைக்கண்டு தோல்வியடைந்து கானகத்துக்கு ஓடி விட்டது. உன் நடையைப் பார்த்து வெட்கப்பட்ட அன்னப்பறவை வயல்களுக்குப் போய்விட்டது. உன் கிளி உன் அமுத மொழிகளைக் கேட்டு வருந்தினாலும், உன்னை விட்டுப் பிரிந்து ஓடவில்லை. ஏன்? உன்னுடைய இனிய மொழிகளைக் கேட்டுத் தானும் கற்றுக் கொள்ளலாம் என்று கருதித்தான்."**

மா இரும் பீலி மணிநிற மஞ்ஞை, நின்
சாயற்கு இடைந்து தண்கான் அடையவும்;
அன்னம், நன்னுதல் மென் நடைக்கு அழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவும்;
அளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும், யாழும், அமிழ்தும் குழைத்த நின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியும்,
மட நடை மாது! நின் மலர்க்கையின் நீங்காது,
உடன் உறைவு மரீஇ, ஒருவா ஆயின;

பதவுரை

[மா இரும் பீலி — மிகப்பெரிய தோகையினையுடைய; மணி நிற மஞ்ஞை — நீல நிறமான மயில்; நின் சாயற்கு இடைந்து — உன் அழகான சாயலுக்கு வருந்தி; தண்கான் அடையவும் — குளிர்ந்த காட்டை நோக்கிச் செல்லவும்;

அன்னம் — அன்னப்பறவை; நன்னுதல் — அழகிய நெற்றியையுடைய கண்ணகியின்; மென் நடைக்கு அழிந்து — தளர்ந்த நடைக்கு வெட்கப்பட்டு; நன் நீர்ப்பண்ணை — நல்ல நீரையுடைய வயல்களில் உள்ள; நளி மலர் — குளிர்ந்த மலர்களில்; செறியவும் — போய் தங்கவும்;

குழலும் யாழும் அமிழ்தமும் — புல்லாங்குழலும், யாழும், அமிர்தமும்; குழைத்த — ஒன்றாகக்கலந்தது போன்ற; நின் மழலைக்கிளவிக்கு — உன் மழலை மொழிகளுக்கு; சிறு பசுங்கிளி — சின்னஞ்சிறு பசுங்கிளிகள்; வருந்தினவாகியும் —; மட நடை மாது — தளர்ந்த நடையுடைய பெண்ணே; நின் மலர்க் கையின் — உனது மலர் போன்ற கையிலிருந்து; நீங்காது — விட்டு ஓடிப்போகாமல்; உன் உறைவு மரீஇ — உன் உறைதலைப் பொருந்தி; ஒருவா ஆயின — பிரியாதன ஆயின (ஆதலால்); அளியதாமே — அவை மிகவும் இரங்கத் தக்கன.

★

(62—72) கண்ணகியின் இயற்கை அழகைப்பற்றி கோவலன் பாராட்டிப் பேசுகிறான். அழகுக்கு அழகு செய்வதில் என்ன பயன் என்ற கருத்தோடு சொல்லுகிறான். "இயற்கையழகு நிரம்பிய உனக்கு தாலி ஒன்றே போதுமே. அப்படியிருக்க உன் தோழியர் உனக்கு மற்ற ஆபரணங்களை ஏன் பூட்டினார்கள்? உன் அழகை எடுத்துக் காட்ட உனக்குச் சில மலர்கள் போதுமே; ஏன் வீணாய் உனக்கு பெரிய மாலைகளைச் சூட்டினார்கள்? உன் கூந்தலுக்கு அகிற் புகையை ஏற்றியதோடு அதன் மேல் மான் மதச் சாந்தை ஏன் பூசவேண்டும்? உன் அழகிய மார்பில் தொய்யல் எழுதியபின், முத்து மாலையையும் அணிந்ததினால் என்ன பயன்? உன் அழகிய முகத்தில் வியர்வை உண்டாகவும், உன் இடை வருந்தவும் ஏன் இவ்வளவு நகைகளையும் மாலைகளையும் உனக்கு அணிந்தார்கள்? இதனால் உன் தோழிகள் என்ன அடைந்தார்களோ தெரியவில்லையே" என்று இப்படியெல்லாம் இன்ப மொழிகளைக் கொட்டுகிறான் கோவலன்.

நறுமலர்க் கோதை! நின் நலம் பாராட்டுநர்,
மறுவின் மங்கல அணியே அன்றியும்
பிறிது அணி அணியப்பெற்றதை எவன் கொல்?
பல் இருங் கூந்தல்! சின் மலர் அன்றியும்,
மெல் அவிழ் மாலையோடு என் உற்றனர் கொல்?
நானம் நல் அகில் நறும்புகை அன்றியும்.
மான்மதச் சாந்தொடு வந்ததை எவன் கொல்!
திருமுலைத் தடத்திடைத் தொய்யில் அன்றியும்,
ஒரு காழ் முத்தமோடு உற்றதை எவன் கொல்?
திங்கள் முத்து அரும்பவும், சிறுகு இடை வருந்தவும்
இங்கு இவை அணிந்தனர்; என் உற்றனர் கொல்?

பதவுரை

[நறு மலர்க் கோதை — நல்ல மணம் வீசும் பூமாலையை அணிந்த கண்ணகி! ; நின் நலம் பாராட்டுநர் — உன் அழகைப் பாராட்டும் தோழிகள் ; மறுவில் மங்கல அணியே அன்றியும் — குற்றமில்லாத தாலியோடு ; பிறிது அணி — மற்ற ஆபரணங்களையும் ; அணியப் பெற்றனர் — உனக்கு அணிவித்திருக்கின்றனர் ; எவன் கொல் — இதனால் என்ன பயனோ!

பல் இருங் கூந்தல் — பலவாகிய பெரிய கூந்தலையுடையவளே!' சின் மலர் அன்றியும் — உனக்கு சில மலர்களைச் சூடியதல்லாமல்; மெல் அவிழ் மாலையோடு — மெல்லியதாய் மலர்கின்ற மாலையையும் அணிவதால் ; என் உற்றனர் கொல் — என்ன பயனை அவர்கள் கருதினார்களோ ;

நானம்—கஸ்தூரி ; நல் அகில் — நல்ல அகில் கட்டை (இவைகளின்) நறும் புகை அன்றியும் — நல்ல மணமுள்ள புகை அல்லாமலும் ; மான் மதச் சாந்தொடு — மான்மதம் என்ற சாந்தையும் பூசியதால் ; வந்தவை என் கொல் — வந்த பயன் என்ன ?

திருமுலைத் தடத்திடை — அழகிய முலைகளுக்கிடையில் ; தொய்யில் அன்றியும் — (சந்தனம் குங்குமம் இவைகளால்) எழுதப்பட்ட தொய்யிற் கொடியே அல்லாமலும் ; ஒரு காழ் முத்தமோடு — ஒரு முத்து மாலையையும் அணிந்தால் ; உற்றதை எவன் கொல் — வந்த பயன் என்னவோ ?

திங்கள் — நிலாவைப் போன்ற உன் முகம் ; முத்து அரும்பவும் — முத்து முத்தாக வியர்வை பூக்கவும் ; சிறுகு இடை வருந்தவும் — மெல்லிய உன் இடை வருந்தும் படியும் ; இங்கு இவை அணிந்தனர் — உனக்கு இவ்வளவு (நகைகளையும்) அணிந்தார்கள் ; என் உற்றனர் கொல் — இதனால் அவர்கள் என்ன பயனைப் பெற்றார்களோ.!

★

(73—83) அடங்காத காதலில் மூழ்கியிருக்கும் போது என்ன தான் பேசுகிறோமென்று நமக்கே தெரியாது. என்ன இனிய மொழிகளைச் சொன்னாலும் தீராது. இந்த நிலைமையில் இருக்கிறான் கோவலன். கண்ணகியின் அழகைப் பலவிதமாய்ப் பாராட்டினான். கடைசியாக அவளை என்னவென்றுதான் போற்றிப் புகழ்ந்து வியப்பது என்றே தெரியாமல், "பசும் பொன்னே, வலம்புரி முத்தே! கரும்பே! தேனே! என் உயிருக்கே மருந்தாக வந்தவளே ; நீ மணியோ! அமிழ்தமோ! இசைதானோ! என்னென்றுதான் கூறுவேன்" என்று இவ்வாறு பலவகையாலும் புகழ்ந்து பேசிப் பாராட்டுகிறான்.

73 **மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!**
காசறு விரையே! கரும்பே! தேனே!

அரும் பெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன், பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
யாழ் இடைப் பிறவா இசையே என்கோ?
தாழ் இரும் கூந்தல் தையால்! நின்னை! என்று
உலவாக் கட்டுரை பல பாராட்டி;
தயங்கு இணர்க் கோதை தன்னொடு தருக்கி,
வயங்கு இணர்த் தாரோன் மகிழ்ந்து செல்வழி நாள்;

[மாசு அறு பொன்னே — குற்றமில்லாத பசும் பொன்னே!; வலம்புரி முத்தே — வலம்புரி என்னும் சங்கில் பிறந்த முத்தே!; காசு அறு விரையே — குற்றமற்ற நறு மணமே!; கரும்பே —; தேனே —; அரும் பெறல் பாவாய் — பெறுதற்கரிய சித்திரம் போன்றவளே!; ஆருயிர் மருந்தே —; பெருங்குடி வாணிகன் — உயர்ந்த வாணிக குலத் தலைவனுடைய; பெருமட மகளே —; தாழ் இரும் கூந்தல் — தாழ்ந்து நீண்ட கூந்தலையுடைய; தையால் — பெண்ணே!; நின்னை —; மலை இடைப்பிறவா — மலையில் விளையாத; மணியே என்கோ — மணி என்று சொல்வேனோ; அலை இடைப்பிறவா — கடலில் தோன்றாத; அமிழ்தே என்கோ —; யாழ் இடைப்பிறவா இசையே என்கோ —; என்று —; உலவாக் கட்டுரை — தீராத சொற்களையெல்லாம் சொல்லி; பல பாராட்டி — பலவகையாலும் புகழ்ந்து பேசி; தயங்கு இணர்க் கோதை — விளங்குகின்ற பூக்கொத்துகளால் செய்த மாலை அணிந்த கண்ணகியுடன்; தருக்கி — காதல் களிப்பினால் மிகுந்து; வயங்கு இணர்த் தாரோன் — விளங்குகின்ற மலர் மாலையை அணிந்த கோவலன்; மகிழ்ந்து வாழுகின்ற நாட்களில்;

உலவா — முடிவு பெறாத. கோதை — பெண்கள் அணியும் மாலை. தார் — ஆண்பிள்ளைகள் அணியும் மாலை.]

★

(84—90) கலியாணம் ஆனபின் கணவனும் மனைவியும் தனி வீட்டிற்குக் குடிபோய் இல்லற வாழ்க்கையை நடத்துவது இப்போது மேல் நாட்டாருடைய வழக்கம். பண்டைக் காலத்து தமிழர்களிடமும் இந்த நல்ல வழக்கம் இருந்தது. இவ்விதம் தனியாய்க் குடித்தனம் செய்தால், அனுபவமும், பொறுப்பும் உண்டாகும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகளும் குறைவுபடும். பழைய வழக்கத்தை அனுசரித்து கண்ணகியின் தாய் கோவலனும் கண்ணகியும் இல்லற வாழ்க்கை நடத்துவதற்கு ஒரு தனியான வீட்டை ஏற்படுத்தித் தந்து வேண்டிய சாமான்களையும் பணியாட்களையும் வைத்து சகல ஏற்பாடுகளையும் செய்தாள். குணசீலர்களையும், துறவிகளையும், விருந்தினர்களையும் நல் வரவேற்று இருவரும் இல்லறத்தை நடத்தும் பொறுப்பிலும் உரிமையிலும் இன்பமாக வாழ்ந்து வந்தார்கள். இப்படிச் சில ஆண்டுகள் கழிந்தன.

இளங்கோவடிகளின் கதையில் கண்ணகியும் கோவலனும் பெருமையுடன் இல்லறவாழ்க்கை சில ஆண்டுகள் நடத்தினார்கள் என்றிருக்க தற்கால நாடக மேடையிலும், சினிமாக் கதைகளிலும் கோவலன் மணவாசலிலிருந்தே மாதவியோடு போய்விட்டான் என்று அபத்தமாகக் கதையை மாற்றிவிடுகிறார்கள். நாம் அடிகள் தந்துள்ள அழகிய கவிதையை அனுபவிப்போம்.

வார்ஒலி கூந்தலைப் பேர் இயல் கிழத்தி,
மறப்பு அரும் கேண்மையோடு அறப்பரி சாரமும்,
விருந்து புறம்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமோடு ஒரு தனி புணர்க்க;
யாண்டு சில கழிந்தன இற்பெரும் கிழமையின்
காண்தகு சிறப்பின் கண்ணகி தனக்கென்.

பதவுரை

[பேர் இயல் கிழத்தி — மிக்க பெருந்தன்மை யுடையவளாகிய கண்ணகியின் தாய்; வார் ஒலி கூந்தலை — நீண்டு தழைத்த கூந்தலையுடையவளாகிய கண்ணகியை; மறப்பரும் கேண்மையோடு — மறத்தற்கு அரிய காதலனாகிய கோவலனுடன்; அறப்பரி சாரமும் — இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் அறம் செய்து ஒழுகும் ஒழுக்கமும்; விருந்து புறம் தரூஉம் — விருந்தினரைப் பாதுகாக்கின்ற; பெரும் தண் வாழ்க்கையும் — பெரிய அன்பு நிறைந்த வாழ்க்கையும்; வேறுபடு திருவின் — பலவேறு வகையான செல்வத்தோடு; வீறு பெறக்காண் — செழித்து வளர்ந்திடுவதைக் கண்டு மகிழ; உரிமைச் சுற்றமோடு — ஏவலாளர்களோடு; ஒரு தனி புணர்க்க — தனியாக வேறோர் வீட்டில் கூட்டி வைத்தனள்; (இப்படி வைக்க) காண்தகு சிறப்பின் — அங்கனம் இனிய காட்சிக்குத்தக்க; கண்ணகி தனக்கு —; இற்பெருங் கிழமையின் — இல்லறத்தை நடத்தும் பெரிய உரிமையில்; யாண்டு சில கழிந்தன — சில ஆண்டுகள் கழிந்தன.

வார் — நீண்ட; கேண்மை — நட்பு; அறப்பரிசாரம் — அறம் செய்யும் ஒழுக்கம்; வீறு — செழித்து நிற்றல்;]

★

கிராமியக் காட்சி

"ரதி"

பிறந்தவர் இறப்பர் என்பது உண்மை. ஆனால், இறந்தவர் பிறப்பார்களா என்பது விவாதத்துக்கிடமான விஷயம். எத்தனையோ அறிஞர்கள் உலக ஆரம்பத்திலிருந்து இந்தக் கேள்விக்கு விடை தேடி அலுத்துப்போய் விட்டார்கள். மறுபிறப்பை நம்பினால், பூர்வ ஜன்மம், சொர்க்கம், நரகம், கர்மம், ஞானம், விதி முதலான எத்தனையோ காரியங்கள் கண் எதிரே வந்து விரிந்து விடுகின்றன. எல்லாவற்றையும் நம்பி ஆக வேண்டியிருக்கிறது. "கண்ணால் கண்டதே காட்சி" என்ற புதுக் கொள்கைக்கு இடம் கொடுத்தால் இதெல்லாம் அடிபட்டுப் போய் நியதியின் மர்மத்தைப் பற்றி மீண்டும் சிந்தனைக் கடலில் நாம் ஆழத்தான் வேண்டி இருக்கிறது. ஆனால், இங்கே நாம் கவனிக்க வந்த விஷயம் வேறு. சாவு என்னும் மெல்லிய திரைக்குள் எல்லாரும் எப்போதோ ஒருநாள் மறைந்தே தான் தீர வேண்டியிருக்கின்றது. அறிஞன் முதல் அறிவிலி வரை, பாமரன் முதல் பண்டிதன் வரை சக்ரவர்த்தியிலிருந்து சன்மார்க்கன் வரை யாரையும் சாவு விட்டு விடுவதில்லை.

இறப்பில் தான் எல்லோருக்கும் சமத்வம் கிடைக்கிறது. மண்ணுலகில் வேறு காரியங்களுக்காகச் செய்யப்படும் முயற்சிகளில் சமத்வம் கிடைக்காவிட்டாலும், சாவுப் படலத்தில் எல்லாரும் ஒன்றாகி விடுகிறோம். இந்த சாமான்ய உண்மை எல்லாருக்கும் தெரிந்து தான் இருக்கிறது. ஆனால் மகான்கள் கூட இவ்வளவும் தெரிந்தும் துயரக் கடலில் மூழ்காமல் இருக்க முடிவதில்லை. இதிகாச புராணங்களிலிருந்து சரித்திரம் வரை இதைப் பல இடங்களில் நாம் பார்க்கிறோம். ஏன்? நாமும் சில சமயம் இந்த விதிக்கு இலக்காகத் தான் வேண்டியிருக்கிறது.

கொஞ்ச நாளைக்குமுன் நிலவு பொழியும் இரவு நேரத்திலே என் கிராமத்து ஆற்றங்கரை ஓரமாக உலாவிக் கொண்டிருந்தேன். வெள்ளிய அலைகள் பொங்கிப் புரண்டு சென்று கொண்டிருந்தன. அந்த இன்பமான இரவிலே பக்கத்துக் குடிசையிலிருந்து ஒரு சோக கீதம் வந்தது.

அந்தப் பாட்டுக்கு அர்த்தம் ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

பழமை படிச்ச விங்க
பண்டிதத்தால் வெண்ணவிக
பழமை பலிக்கலியே—உங்க
பண்டிதங்க வெல்லலியே

எந்தக் காரியத்தில் அதெல்லாம் வெல்லவில்லை என்று பார்க்க வேண்டாமா?

அதற்கு முன் இன்னொரு சங்கதியையும் பார்ப்போம்.

சொல்லுப் படைச்ச விங்க
சோசியத்தால் வெண்ணவிங்க—
உங்க
சொல்லுப் பலிக்கலியே
சோசியமும் வெல்லலியே

சரி, இப்படி நிறை வேறாமல் போய்விட்டதால் இறப்பும் வந்தடைந்து விட்டது. மேற்கொண்டு காரியங்கள் நடக்கின்றன.

மாயனூர் ஆசாரி, மல்லிகைப்
பூச்சூடி
வாச்சி உளி தோளிலிட்டு
வன்னிச்சார் தங்க ரதம்
தங்க ரதம் ஏறி
சாமி ரதம் போறவிக
தங்காளைக் கூப்பிட்டு—நீங்க
தகுந்த மதி சொல்லலையே?

செண்பகப் பூச்சூடி
சிவலோகத் தாசாரி
வாச்சி உளி தோளிலிட்டு
வன்னிச்சார் பொன்னு ரதம்
பொன்னு ரதம் ஏறி
சாமி ரதம் போறவிக
பொன்னாளைக் கூப்பிட்டு
புத்தி மதி சொல்லலையே?

* * *

கூர்ந்து கவனித்தால் இதயத்தின் அடியிலிருந்து சோகமே பாட்டாக வெளிவந்திருப்பது தெரியும். ஆம், பெண்களுக்குத்தான் அப்படித் தங்கள் உணர்ச்சியை எடுத்துச் சொல்ல முடியும். காட்ட முடியும். இது பிரத்யட்ச உண்மை. தாலாட்டும் போது நாம் இதை அனுபவிக்கிறோம் அல்லவா? துக்கத்தில் ஒப்பாரி மூலம் தங்கள் உள்ளத்தையே கொட்டிவிடுகிறார்கள். அபூர்வ வெளியீடாக அது மலருகிறது. கிராமப் புறங்களிலே இம்மாதிரி எவ்வளவோ காட்சிகள் நம் உள்ளத்தோடு கலந்து விடுகிறது. கலப்பது மட்டுமல்ல, நம்மை அதற்கு அடிமையாக்கியும் விடுகிறது!



தாபம்

["சுகி"]

ஸ்ரீமான் ஆவுடையப்ப பிள்ளை, ஆலமரத்தடி வாய்க்கால் வழியாக இறங்கி வரப்பு ஓரமாக நடக்கவாரம்பித்தார். ஆடிப்பட்டமானதால் வயல்களில் உழவர்கள் உழுது பரம்படிப்பதும், நாத்து நடுகையுமாக, வயற்பரப்பே கோலாகலமாக இருந்தது. வயல் வரப்புகளில், வெள்ளைக்கற்களை நட்டு வைத்தாற்போல், கொக்கினங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தது. பூச்சி, புழு, நண்டு, தவளை முதலானதைக் கொத்தித் திரிய காகமும் பருந்தும் வானத்தில் வளையமிட்டு வயலில் சுற்றிச் சுற்றி வந்தன.

புதிய மண்ணைக் கிளறிய வாசமும், பச்சைப் பசேலென வளர்ந்திருந்த நாத்துக்களின் பசுமையும், ஓடையில் சலசலவென்ற நீரோட்டமும் ஆவுடையப்ப பிள்ளையின் மனதைக் கவரவில்லை.

சிந்தனை லோகத்தில் மிதப்பவர் போல, வரப்பு வழியாக தாபத்துடன் நடந்து கொண்டிருந்தார். அச்சயம் இரண்டு வரக்கடப்புக்கப்பால் நின்ற மருதி அவர் மனதில் ஊசலாடிக் கொண்டிருந்தாள். சொந்த மனைவியின் நிழல் அவருக்குப் பின்னால் தோன்றியதைக் கண்டு ஒரு கணம் திகைத்தார். இதனால் நடையின் போக்கு மாறி, வரப்பிலிருந்து வழுக்கி விழுந்தார்.

இதற்கெல்லாம் காரணம் ஆடிக்கு மனைவியை தாய் வீட்டுக்கு அனுப்பியதுதான். அவர் மனைவியை ஆடிக்கு அழைத்துச் சென்று விட்டார்கள். இவருக்கோ கல்யாணமான புதிசு. பருவத்தில் வசந்தகாலம். கண்ணோடு கண் பார்த்து பேசிக்கொளும் சுவாரஸ்யமான பருவத்தை இன்னும் தம்பதிகள் கடக்கவில்லை. சதா சர்வதா எந்நேரமும் இன்ப விளையாட்டுக்கள் விளையாடி, ஆனந்தமாக இருக்க நினைக்கிற உல்லாசமான காலம்.

இந்த சமயத்தில் ஆடிமாதம் வந்தது. பழைய சம்பிரதாயத்தை ஒட்டி, ஆடிக்கு மனைவியை ஊருக்கு அனுப்பி வைத்தார். இரண்டு மூன்று தினங்களாக, அவருக்கும் அவர் மனசிற்கும் மனஸ்தாபம். போராட்டத்தில் அவரே வெற்றி பெற்று, மனதைத் தோற்கடித்தார்! மருதியை நோக்கி நடந்தார்.

மருதி ஓர் பள்ளி; அவருடைய பண்ணையாள் கந்தனுடையமனைவி. மருதி நாட்டுப்புற அழகி. செழித்து வள்ர்ந்த கரும்புபோல் இருப்பாள். எப்போதாவது நிமிர்ந்த நடையின் மிடுக்கான போக்கில் சொருகிய கூந்தலும் ஆசைக்கண்களும் உள்ள ரூபத்தை நீங்கள் கண்டிருக்கிறீர்களா! வசந்தகாலத்தில் தன் சக்திக்கு மீறி வளர்ந்த செடியொன்று, காற்றில் துவண்டு ஆடுவதைப் பார்த்திருந்தால், நாம் அதை மறக்கமுடியுமா! அது போலவே மருதியின் நாட்டுப்புற அழகில் கருமேனியைக் கண்டு விட்டால், கரிய புருவமும், எடுப்பான நாசியும் மனதை விட்டகலாது. நம் மனதில் அவளுடைய மயக்குறும் கண்கள் சுழன்று கொண்டிருக்கும்.

வரப்பில் தள்ளாடி நடந்த எஜமான் ஆவுடையப்பபிள்ளை,

பண்ணையாள் மருதி நின்ற வயலை அடைந்தார். ஒரு தரம் நாலு வரப்புகளையும் சுற்றி வந்தார்.

மருதி தன் குல ஒழுக்கப்படி, பத்துப் பனிரண்டு முழ நீளமுள்ள ஒரு சேலையைச் சுற்றி, மூடாத முதுகுடன் சேற்றில் நின்று நாத்துப் பிடுங்கினாள். சேற்றில் மலர்ந்த செந்தாமரையாக ஆவுடையப்ப பிள்ளைக்கு அக்காட்சி இருந்தது.

2

சாயங்கால சூரியன் ஊருணிக்கு மேற்கே மோகனமாக அடிவானத்தில் இறங்கிக் கொண்டிருந்தான். சூரியவொளி வயற்பரப்பில் பட்டு திக்குத் திகந்தமெல்லாம் சந்தியாகாலத்தின் சோக நாடகத்தை நினைப்பூட்டியது. மருதியின் கருமேனியில் சூரியன் தன் கதிர்களால் மெருகு கொடுத்த போது, அக்காட்சி ஆவுடையப்பபிள்ளை மனசில், இல்லாத கோலாகலமான எண்ணங்களை பட்டை போட்டு பிரகாசிக்கச் செய்தது.

“என்ன, மருதி, நாத்து எவ்வளவு பாக்கி?” என்றார் எஜமான் பிள்ளை.

“இன்னம் ரெண்டு குறுக்கம் பாக்கி இருக்குது நயினாரே.” என்றாள் மருதி.

“ஏ மூதி” என்று ஆரம்பித்தார். இப்படி பேசுவது ஊரில் வழக்கு. “என், உம்புருசன் வரலே ரெண்டு நாளா? அவனுக்குக் காச்சல் எப்படி யிருக்குது?” என்றார் பிள்ளை.

“எசமான் புண்ணியத்திலே கொணமாகுது. ரெண்டு நாளையிலே வேலைக்கு வருவான்” என்று நிமிர்ந்தாள்.

சூரியன் சோக நாடகத்திற்குப் போட்டியாக பிள்ளையின் முகத்தில் நடந்த சோகத்தைக் கண்டு அவள் அனுதாபம் கொண்டாள். மேலும் பேச ஆரம்பித்தாள்.

“நயினாரே, ஊருக்கு நாச்சியார் போயிருந்தாரே, சுவந்தானா?” என்றதும் பிள்ளையின் மனதில் விவரிக்க இயலாத உணர்ச்சி பிறந்தது. தம்மனைவியைப் பற்றி மருதி க்ஷேமலாபம் விசாரித்ததும், அவர் திடங்குன்றி அடுத்த வயலைப் பார்த்தார்.

அப்பொழுதுதான் பிடிபட்ட தவளை யொன்றை வாயில் கௌவிக் கொண்டு சாரைப்பாம்பு ஓடிக் கொண்டிருந்தது. மற்றொரு தவளை தன் துணையை நினைத்துக் கத்தியதும் அவர் காதில் விழுந்தது.

ஒரு பெரு மூச்சு விட்டு, தன்னை தைரியப்படுத்தி, “நானும் பாத்துகிட்டு வாரேன். நாலு நாளா, வைக்கோல் எடுத்து வைக்கறது கிடையாது. கொத்துக்கு மட்டும் (வேலை செய்த கூலியை முன்னதாகக் கொடுப்பதற்கு கொத்து என்று சொல்லுவது) வந்து நிக்கறது. இன்னைய மொத வந்து வைக்கோல் எடுத்து வைக்கணும், தெரியுமா மருதி?” என்று சொல்லி முடித்தார்.

“சரி, நயினாரே” என்று மருதி சொன்னாள். பிள்ளை தன் இடுப்பில் சொருகியிருந்த எட்டணா காசை எடுத்து, “பிடி, இந்தா, பணம்... வைக்கோல் எடுத்து வைக்கணும். கொத்து நாளைக்குத்தான்” என்று சொல்லி காசைப் போட்டார். மருதி எட்டி நின்றபடியே, எட்டணாவை இரு கையாலும் ஏந்திக் கொண்டாள்.

வரப்பு ஓரமாக பிள்ளைவாள், பாலியத்தின் முறுக்குத் தளராத தன் உடம்பின் நடுக்கத்தை உணர்ந்தபடியே மெதுவாக நடந்தார். மஞ்சள் வெயில் மனோகரமாகப் பரவிக் கொண்டிருந்தது.

கள்ளங்கபடு, சூதுவாது, அறியாத மருதி மறுபடி நாத்துப்

பிடுங்க ஆரம்பித்தாள். அவள் நாத்தைப் பிடுங்குவதாக ஆவுடையப்பபிள்ளை நினைக்கவில்லை. தம் மனதையே பிடுங்கி நட்டதாக நினைத்து நடந்தார்.

அவர் நடை பரிதாபமாக இருந்தது.

3

மருதி குடிசைக்குள் நுழையும் போது கந்தன் முழங்காலைக் கட்டிக் கொண்டு இருமியபடியே திண்ணையில் உட்கார்ந்திருந்தான். வீட்டுக்குள் புகைப்படலம் மிதந்து கொண்டிருந்தது.

கந்தன், "ஏவ, நயினரு என்னைப் பத்தி ஏதாச்சும் கேட்டாரா?" என்ருன்.

மருதி, "ஆமா, வைக்கப் பிடுங்கலையின்னு சத்தம் போட்டாரு. ஆம. ஒங்கிட்ட ஒண்ணு கேக்கணுமே" என்று விழுங்கினுள்.

கந்தன் கூர்மையாக மருதியின் முகத்தைக் கவனித்தான். பிறகு இடுப்பில் கிடந்த முடிச்சையும் பார்த்தான்.

மருதி, "கூலி, ஏதாவது பாக்கி தரணுமா?" என்று கேட்டாள்.

கந்தன், "இல்லையே" என்ருன்.

மேலும் அவன் பேச வாயெடுக்கும் முன், அவள் புல்லுக் கட்டைத் தலையில் தூக்கிக் கொண்டு, "நான் போய் மாட்டைக் கட்டி, வைக்கல் வைச்சிட்டு, இதோ மின்னெட்டிலே ஓடியாரேன்" என்று புறப்பட்டாள்.

கருகரு வென்று அந்தி மயங்கும் சமயம். மந்தை மாடுகள் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தன. மாட்டுக்காரப் பையன் மாடுகளை அந்தந்த வீட்டிற்கு விரட்டிக் கொண்டே போனுன். ஆவுடையப்ப பிள்ளையின் தம்பி பசுமாட்டை வீட்டிற்குள் ஓட்டிக் கொண்டு போனுன். எருமைகளும், காளை மாடுகளும், மற்ற விருதா மாடுகளும் எருத்துப் பிறையை நோக்கி நடந்தன.

மருதி புல்கட்டை முற்றத்தில் போட்டதும், பிள்ளையின் தம்பி, "ஏமூதி, மருதி, பசுவை நான் கட்டறேன். மத்த மாடுகளை நீ போய் கட்டி, வைக்கல் போடு" என்று கட்டளையிட்டான்.

மருதி எருத்துப் பிறையை நோக்கி நடந்தாள்.

வீட்டிற்கும் எருத்துப்பிறைக்கும் பத்து கெஜ தூரம். மாடுகளைக் கட்டுவதற்காக மருதி உள்ளே நுழைந்தாள். பூவரச மரத்தில் அடைக்கலக் குருவிகள் கூவிக் கொண்டிருந்தன. மின்மினிப் பூச்சிகள் வைக்கோல் பரப்பின் பக்கமிருந்து பறக்க ஆரம்பித்தன. மாடுகளை கட்டி முடித்து, வைக்கோல் எடுக்க வந்தாள்.

ஆவுடையப்பபிள்ளை எருத்துப் பிறைக்குள் நுழைந்தார். இதற்கு முன் பல்லாயிரக்கணக்கான முறை மருதி நிற்கும் போது வந்திருக்கிருர். இன்று அவர் மனதில் தாபம் தகித்தது. எதிரே வானத்தை முட்டி நின்ற வைக்கோல் போர்களில் நெருப்பு ஜ்வாலை உண்டானல், அவர் தாப ஜ்வாலையை விட அது குறைவாகவே இருக்கும்.

மருதியின் மனதிற்குள் எட்டணு வடிவத்தில் நெருப்பு பற்றிக் கொண்டிருந்தது. "எஞ் சாமி, எட்டணு?" என்று துடுக்காக ஆரம்பித்தாள். "ஒண்ணுமில்லை, இதை ஓம்புருசன் கிட்ட சொல்லலியே?" என்று தழுதழுத்த குரலில் கேட்டார். அவர் வார்த்தைகள் அனுதாபமாக வெளி வந்தன.

"நியாயம், அநியாயம் வேணும் நயினரே. இப்பல்ல தெரியுது உங்க புத்தி, சீ ...." என்று சொன்னுள். தாபத்தில் இருப்ப

வனுக்கு இவ்வார்த்தைகள் தங்க மாகத் தோன்றும். அப்படித் தான் அவருக்கும் பட்டது.

ஆவுடையப்ப பிள்ளை, “சீ, மூதி, சின்னசாதி மூதி. வாயென்ன வாய்? சொன்னதைக் கேளு” என்று பேச்சை நாசூக்காக மாற்றினர்.

“சாமி, பாவம் பழி உண்டு. எட்டி நில்லுங்க சாமி. ஒரே ஒரு வார்த்தை .... எஞ்சாமி எம் புருசனுக்குத் தெரிஞ்சா? இல்லே, உங்க வீட்டு நாச்சியாரை ஒருத்தன் இப்படிக் கேட்டா, உங்க மனசு எப்படி இருக்கும், சாமி?” என்று சொன்னள்.

அவர் மனைவி! இதைப் பள்ளி சொன்னதும் அவர் மனம் தாள வில்லை. அவர் நெஞ்சம் வெந்து சாம்பராகியது. மனதில் கொதித்துக் கொந்தளித்த தாபம் .... பச்சாதாபமாக மாறியது. திடீரென்று அம்மி மிதித்து அருந்ததியைப் பார்த்து, தாலி கட்டிய மனைவியின் முகம், கெஞ்சும் முகம், அவர் மனக் கண்ணில் தோன்றியது. ‘மருதியின் நிலையில் தன் மனைவியைக் கண்டால்?’ என்ற சிந்தனை அவர் இதயத்தைப் பிளந்தது.

“சாமி, கோவிச்சுக்காதீங்க. உங்க மனசு தங்க மனசு ... ...” என்று பின் வாங்கிச் சிரித்தாள். அச்சிரிப்பில் வீண் தாபத்தின் எல்லையை, தம் பரிதாபத்தின் நிலைமையை, தம்மிட முண்டான பச்சாதாபத்தின் மனப் புழுக்கத்தைக் கண்டார்.

மனித வாழ்க்கையே ஒரு சோதனை. அச்சோதனையில் மயிரிழை தப்பி, மறுபடி மனிதனுக மாறினர் ஆவுடையப்பபிள்ளை. வாலிப முறுக்கில், வனப்பைச் சுமந்து நின்ற உடம்பு, வாழைத் தண்டு போல் வெலவெலத்தது. குவிந்த தலையோடு அனுதாபம் நிறைந்த குரலில், “மருதி, நான் உன்னைச் சின்னச்சாதியாக நினைத்தது தப்பு. என்னை மன்னித்துவிடு. இதையாரிடமும் சொல்லாதே,” என்று பச்சாதாபம் பொங்கக் கூறினர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 9790

மருதி, “எஞ்சாமி, உங்க உப்பைத் தின்ற நாயி, நான் சொல்லுவேனு?” என்று நகர்ந்தாள்.

எட்டணு தரையில் விழுந்தது. எடுத்து சொருகிக்கொண்டு பிள்ளை நடந்தார். இதே சமயம் வைக்கோற் போருக்கும் அப்பால், இவ்வளவு நேரம் இருமலை அடக்கிக் கொண்டு நின்ற உருவம் மறைந்து ஓடியது.

அதுதான் மருதியின் கணவன் கந்தன். வீண் தாபப்பட்ட அவன் நெஞ்சில் அமிர்தம் பொங்கியது.

பிள்ளைவாள் வீட்டுக்குள் நுழையும் போது, அவருடைய தம்பி,

தலையின் இழிந்த மயிரனையர்—மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை

என்ற குறளைப் படித்தான். அவன் தனக்குள்ளாகவே, “தலையில் ரோமம் இருக்கும் வரை, அதைப் போற்றி புகழ்கிருேம். ஆனல் அது தலையிலிருந்து விலகியதும் அவமதிக்கிருேம்” இதற்கப்புறம் வாத்தியார் என்ன சொன்னர்? என்ற சமயம் பிள்ளைவாளைப் பார்த்தான்.

“அண்ணச்சி, இந்தக் குறளுக்குப் பொருள் என்ன?” என்ருன்.

பிள்ளைவாள், “நான் தான் இதற்குப் பொருள்” என்று சொல்ல நினைத்தார்.

இந்த சமயம் தந்திச் சேவகன் வந்தான், பதற்றத்தோடு தந்தியைப் பிரித்தார். அதில் ‘அபார்ஷன்’ உடனே வரவும், என்றிருந்தது. தன்னுடைய வீண் தாபம் பொறுக்காது, கடவுளே தனக்குத் தண்டனை விதித்ததாக அனுதாபம் கொண்டார்.

★

முரசுக் கட்டில்

[கு. விசுவநாதன்.]

அம்மம்மா! என்ன பெருமை; என்ன உயர்வு; அரசனின் அங்கமாம்; அதுவும் சிறந்த அங்கமாம்; பொன்னிறத்தையுடைய வாரால் இருக்கிக் கட்டப்பட்டிருக்குமாம்; முத்துக்களினல் அலங்கரிக்கப் பட்டிருக்குமாம்; சண்டையில் வெற்றி பெற்ற எருதின் தோலால் செய்யப்பட்டிருக்குமாம்.

அந்த முரசத்திற்கு ஏன் இவ்வளவு உயர்வு? நம் பண்டைத் தமிழ் வேந்தர்க்கு வெற்றி உயிரினும் பெரிதல்லவா? அவ்வெற்றிக்கு அறிகுறியாகக் கொட்டப்படுவது இம்முரசம். ஆகையால், இம்முரசத்திற்கு இப்பெருமை உரியதுதானே?

அரசன் போர்மேற் செல்லும் பொழுதும், வெற்றியுடன் திரும்பும் பொழுதும் முரசு கொட்டப்படும். போர் கருதிச் செல்லும் மறவர்க்கு முரசொலி வீரத்தை ஊட்டி, அவர்கள் போரிலே பட்ட துன்பத்திற்கு மருந்தென விளங்கும்.

இவ்வீர முரசம் அரசனது ஆணையை ஊரார்க்கு அறிவிக்கும் கருவியாகவும் விளங்கிற்று. அப்பொழுது அம்முரசத்திற்கு அளிக்கும் மதிப்பைப் பார்ப்போர்க்கு தாமும் ஒரு முரசமாயிருக்கக் கூடாதா என்றுகூடத் தோன்றும். வீரர் பலர் சூழ்ந்திருப்ப, கண்டோர் அஞ்சும் தோற்றத்தையுடைய யானைமீது, முரசு கொட்டும் பரம் பரையினனகிய வள்ளுவ முதுமகன், உடலெங்கும் நறுமணம் வீசும் சந்தனத்தைப் பூசிக் கொண்டு, தூய வெண்மையான ஆடையை இடையில் அணிந்து கம்பீர தோற்றத்தோடும், அரசன் பணியாட்களுக்குரிய செருக்கோடும் உட்கார்ந்து கொண்டிருக்கிறன். வீரர் பலர் முரசத்தைக் கொடுக்க, அவ்வள்ளுவ முதுமகன் அதை வாங்கி யானையின் பிடரியிலே கட்டி, முரசத்தை முழங்கச் செய்து, இடையிடையே அரசனது ஆணையைக் கூறிக் கொண்டே ஊரின் தெருக்கள் தோறும் செல்லுகிறன்.

வீரர்களுக்கு வீரத்தைக் கொடுக்கும் முரசொலி ஊரில் வாழும் எல்லோருக்கும் 'அரசன் ஆணை என்னவோ' என்னும் ஆவலை உண்டு பண்ணி, அரசன் கட்டளையை அறிவிக்கிறது.

இந்த இரண்டு சிறந்த தொழிலையும் உடைய முரசம் அடையும் பெருமைக்குச் சிறிதளவும் குறைந்ததல்ல இம்முரசம் வைக்கும் கட்டில். அக்கட்டிலுக்குத் தனக்கென ஓர் இருப்பிடம். முரசை அதில் வைக்கும் பொழுதும், எடுக்கும் பொழுதும் அதற்கு பூசை. அரசன் வீரத்திற்கும், ஆணைக்கும் அடையாளமாக விளங்கும் இடமல்லவா?

இவ்வளவு பெருமையுடைய கட்டிலில் யாரும் உட்காரலாமா? உட்காருவது அரசனது வீரத்தையும், ஆணையையும் அவமதிப்பதாகாதோ? அரசனை அவமதிப்பவர்களுக்குக் கிடைப்பது தண்டனை தானே? அரசன் அங்கமென விளங்கும் முரசு வைக்கப்படும் கட்டிலில் உட்காரும் குற்றத்திற்கு தண்டனை எளியதல்ல; மரணம் தான் தண்டனை.

பாவம்; இக்குற்றத்தைப் புரிந்தார் ஓர் கிழவர். முரசுக் கட்டிலிலே படுத்து நன்றாகத் தூங்குகின்றார். அவர் தூக்கம் அவர் குற்றத்தை அறியவில்லை.

அவ்வழி வந்தான் மன்னன். முரசுக் கட்டிலில் யாரோ கிடப்பதைக் கண்டான்; சீற்றங் கொண்டான். அவன் கோபத்தை, முகம் சிவந்து காட்டிற்று, கண்கள் தீப்பொறி சிந்தின. அக்குற்றத்தைச் செய்து உயிரை இழக்கப் போகிறவன் யாரென உற்று நோக்கினான்.

மெலிந்த உலர்ந்த உடலையுடைய அப்பெருங்கிழவர் மோசிகீரனார் என்பதை அறிந்தான். அவன் சினம் எங்கே? சீற்றம் எங்கே? அருகில் சென்றான். புலவர் உடலெங்கும் வியர்வை முத்துக்கள் போல் அரும்பின. அப்புலவர் பெருமான் பக்கத்தே அமர்ந்து வியர்வை நீங்க விசிறி கொண்டு விசிறினான். அவன் செய்கை நமக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறதல்லவா?

அச்சமயம் புலவரும் விழித்தெழுந்தார். தான் படுத்துறங்கியது முரசு கட்டில் என்பதை அறிந்ததும் அவர் உள்ளம் நடுங்கிற்று. அரசன் விசிறியதைக் கண்டு, காண்பது கனவோ நினைவோ எனக் கலங்கினார். மன்னன் புன்னகை பூத்த முகத்தோடு நின்றான். அப்பெருந்தகையார் அம்மன்னனை நோக்கி, "வேந்தே! அறியாது ஏறினேன் எனினும் தண்டித்தல் உன் செயல்; அதை ஒழிந்தது உன் வாள். தமிழை முற்று முணர்ந்தாயல்லவா? ஆம்; உனக்கு இச்செயல் பொருந்தும். அதோடு நில்லாது உன் பருத்த தோள் அசைய, குளிர்ந்த மனத்தோடு விசிறினையே! அடடா! உன் செய்கை என்ன! உன் புகழ் எங்கும் பரவுவதன்றோ? வெற்றி வேந்தே! இவ்வுலகத்து புகழுடையார்க்கன்றி மேல் உலகத்தில் உயர்நிலை மற்றெவர்க்கும் இல்லை. ஒரு வேளை இவ்வுண்மையை நீ அறிந்தோர் சொல்ல "விளங்கக் கேட்டதனாலோ உன் செயல் இவ்வாறு இருந்தது" என்று புகழ்ந்து கூறினார்.

பண்டைத் தமிழ் மன்னரின் சிறந்த இயல்பு, தமிழின் பெருமை, அரசர்கள் கற்றோரிடம் கொண்ட மதிப்பு, இவ்வளவும் தோன்றக்கூறிய செய்யுள் இது:-

அறியா தேறிய என்னைத்
தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய்
யொழிந்ததை
அது உஞ் சாலுநற் றமிழ்முழு
தறிதல்
அதனொடு மமையா (து)
அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள்
ஓச்சி தண்ணென
வீசியோயே வியலிடங் கமழ;
இவணிசை யுடையோர்க்
கல்ல (து) அவண (து)
உயர்நிலை உலகத் (து) உறையு
ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குறிசில் ஈங்கிது
செயலே.

★

ஆசிரியர்
சரத்சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்.

சதீஷின் பேச்சைக் கேட்டு சாவித்திரி முகத்தை முந்தானையால் மறைத்துக் கொண்டு சிரித்தாள். பிறகு, "இந்தப் படிப்பும் அப்படித் தானா?" என்றாள்.

"எந்தப் படிப்பு?"

"டாக்டர் படிப்பு."

சதீஷ் சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "சரி, சாவித்திரி! நீயே சொல்லு. கழுதை போல பரிட்சை கொடுத்து விட்டு என்ன தான் செய்கிறார்கள்?" என்றான்.

சாவித்திரி சிரிப்பை அடக்கிக் கொண்டு, "அவர்கள் கழுதையைப் போல இருக்கிறார்கள். கழுதை அல்ல. ஆனால் கழுதைகளாகவே இருப்பவர்கள் பரிட்சை தேறுவதே இல்லை" என்றாள்.

சதீஷ் [illegible] து இருக்கிறார்களா என்று கதவுக்கு வெளியில் எட்டிப் பார்த்தான். இதற்குப் பிறகு சாந்தமாக உட்கார்ந்து கொண்டு, "யாராவது கேட்டால் கோபிப்பார்கள். என் எதிரில் நின்று கொண்டு என்னையே நீ கழுதை என்று சொல்லுகிறாய். நீ ரொம்ப தைரியசாலி" என்றான்.

அடடா! கால பேதத்தால் இன்று சாவித்திரி ஒரு சாப்பாட்டு விடுதியின் வேலைக்காரியாக இருக்கிறாள். ஆகையால் அவள் இந்த குயுக்தி வாதத்தைப் பொறுத்துக் கொண்டு, "ஆம். வாஸ்தவம் தான்" என்று கூறி விட்டு அவள் மெதுவாக அறையை விட்டு வெளியே சென்றாள்.

சதீஷ் மறுபடியும் சோம்பலாகப் படுக்கையில் படுத்துக் கொண்டான். சாவித்திரியின் நடத்தையால் அவன் மனதிலிருந்த மகிழ்ச்சி எல்லாம் மாயமாக மறைந்து விட்டது. இருந்தாலும் இன்று வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்க அவனுக்குப் பிடிக்க வில்லை. இன்னும் படுக்கையில் தான் படுத்துக் கொண்டிருந்தான். அப்போது குளிக்க வரும்படி உத்திரவு வந்தது. ஆனால் சதீஷ் எழுந்திராமல், "என்ன அவசரம்? இன்று நான் வெளியில் போகப் போவதில்லை" என்றான்.

சாவித்திரி வீட்டிற்குள் வந்து, "ஊஹூம்! அது முடியாது. பள்ளிக்கூடம் போயாக வேண்டும்; வாருங்கள், குளித்து விட்டுச் சாப்பிடலாம்" என்றாள்.

சதீஷ்: என்னைத் தோற்கடித்து விட்டுப் போய் அதை மறைக்கப் பார்க்கிறாயா? நான் போகப் போவதில்லை.

சாவித்திரி: போகாவிட்டால் போகிறது. குளித்து விட்டுச் சாப்பிடுங்கள். உங்களுடைய பிடிவாதத்தால் வேலைக்காரர்கள் எல்லாம் கஷ்டம் அடைகிறார்கள். இது உங்களுக்குத் தெரிவதில்லையா?

சதீஷ்: அடடா! அதிசயமான வேலைக்காரர்களாயிருக்கிறார்களே! மணி ஒன்பதடிப்பதற்குள் பசியால் துடித்து விடுவார்களோ! என்னால் முடியாது. நான் இந்த விடுதியை விட்டு போய் விடப் போகிறேன்.

சாவித்திரி சிரித்தாள். "ஆனால் நானும் போயாக வேண்டும்" என்றாள். இதைக் கூறியதும் அவள் இதை மறைப்பதற்காக, "நீங்கள் இங்கிருக்கும் வரையிலும் இதன் விதிகளுக்கு கட்டுப்பட்டுத்தான் தீர வேண்டும். பள்ளிக்கூடமும் போக வேண்டும். சரி, எழுந்திருங்கள். நேரமாகிறது" என்று சொல்லி, சதீஷின் வேஷ்டியை குளிக்கும் அறைக்குள் கொண்டு போய் வைப்பதற்காக அவள் அவசரமாகச் சென்று விட்டாள்.

சதீஷ் தினசரி பூஜை செய்து வந்தான். இன்று அவன் குளித்து விட்டு வந்ததும் பூஜையில் உட்கார்ந்து அதிக நேரம் செய்தான். சாவித்திரி இரண்டு மூன்று தரம் வந்து பார்த்து விட்டுக் கடைசியாக, "ஏன் இவ்வளவு நேரம் செய்கிறீர்கள்? எல்லாம் ஆறிப் போகிறது. நீங்கள் பள்ளிக்கூடம் போக வேண்டாம். தயவு செய்து வந்து சாப்பிட்டு விட்டுப் போங்கள்" என்றாள்.

சதீஷ் ஒரு ஐந்து நிமிஷம் பேசாமலிருந்து விட்டு, "பூஜை வேளையில் குறுக்கிட்டால் என்ன நேரிடும் தெரியுமா?" என்றாள்.

"கங்கா ஜலத்தை பஞ்ச பாத்திரத்தில் நிறைத்து எதிரில் வைத்துக் கொண்டு ஏமாற்றுவதால் என்ன நேரிடும் தெரியுமா?"

"நான் ஏமாற்றுகிறேனா? ஒருக்காலும் கிடையாது."

சாவித்திரி ஏதோ சொல்ல விரும்பினாள். ஆனால் அதைக் கூறாமல், "அது உங்களுக்குத் தான் தெரியும். ஆனால் தினசரி இவ்வளவு நேரம் பிடிப்பதில்லையே. சரி, வாருங்கள்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

குளிர்கால மத்தியான வேளையிலே விடுதியில் யாருமின்றி சந்தடியற்று இருந்தது. விடுதியில் இருப்பவர்களெல்லாம் வேலையிலிருப்பவர்கள். அவர்களெல்லாம் ஆபீசுக்குப் போய் விட்டார்கள். சமையல்காரன் எங்கோ வெளியில் சுற்றப் போய் விட்டான். வேலைக்காரன் பிஹாரி கடைக்குப் போய் விட்டான். சாவித்திரியையும் காணோம். சதீஷ் தனது படுக்கையில் படுத்துக் கொண்டு தூங்க முயற்சித்தான். பிறகு எழுந்து உட்கார்ந்து கொண்டு என்னவோ யோசிக்கத் தொடங்கினான். தலை மாட்டில் இருந்த சன்னல் மூடியிருந்தது. அதைத் திறந்து மேல் தளத்தைப் பார்த்து விட்டு மூடி விட்டான். மேல் தளத்தில் ஒரு மூலையில் சாவித்திரி கூந்தலை உலர்த்திக் கொண்டு

குனிந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். சன்னல் மூடிய சத்தத்தைக் கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள். தலையில் முந்தானையைப் போட்டுக் கொண்டு எழுந்து நின்று கொண்டாள். இரண்டாம் முறை பார்க்கும் போது சன்னல் மூடியிருந்தது. கொஞ்ச நேரத்துக்குள் அவள் வந்து, "என்னைக் கூப்பிட்டீர்களா?" என்றாள்.

"இல்லையே! கூப்பிடவில்லையே!"

"குடிக்கத் தண்ணீர், அல்லது வெற்றிலை பாக்கு ஏதாவது வேண்டுமா?"

சதீஷ் தலையை அசைத்து, "கொண்டு வா!" என்றான்.

சாவித்திரி தண்ணீர் கொண்டு வந்து படுக்கைக்குப் பக்கத்தில் வைத்தாள். அவள் அறையிலுள்ள சன்னல்களையும் கதவுகளையும் நன்கு திறந்து வைத்தாள். அதற்கப்புறம் கதவருகில் உட்கார்ந்து கொண்டு, "போய், சிலும்பியை நிறைத்துக் கொண்டு வரட்டுமா?" என்றாள்.

"பிஹாரி எங்கே போய் விட்டான்?"

"கடைக்கு போயிருக்கிறான்" என்று கூறி விட்டு சாவித்திரி சென்று விட்டாள். கொஞ்ச நேரத்திற்குள் புகையிலையைப் போட்டு சிலும்பிக்குள் நிறைத்துக் கொண்டு வந்து எதிரில் வைத்தாள். பிறகு கதவோரத்தில் போய் உட்கார்ந்து கொண்டு, "இன்று நீங்கள் சும்மா வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டீர்கள்?" என்றாள்.

"ஆமாம்? இன்று ஏனோ ஒரு மாதிரியாக இருந்தது. ஓய்வு எடுத்துக் கொள்ளா விட்டால் உடம்பு கெட்டு விடும். இதைத் தவிர நான் 'முழு டாக்டராக' விரும்ப வில்லை. ஏதோ கொஞ்சம் படித்துக் கொண்டால் போதும். ஊருக்குப் போய் ஒரு இலவச வைத்தியசாலை ஏற்படுத்தப் போகிறேன். வைத்திய உதவியில்லாமல் எத்தனை ஏழைகள் சாகிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டு மென்பது தான் என் நோக்கம்."

"இலவச வைத்தியம் செய்வதற்கு நன்கு படித்து தேர்ச்சி அடைய வேண்டியதில்லைப் போலிருக்கிறது! நல்ல டாக்டர் பெரிய மனிதர்களுக்குத்தானா? ஏழை எளியவர்களுக்கு வேண்டியதில்லையா? ஆனால் நீங்கள் இங்கிருந்து எப்படிப் போவீர்கள்? நீங்கள் போய் விட்டால் விபின் பாபு ரொம்பக் கஷ்டப்படுவாரே?"

விபின்பாபு பெயரைக் கேட்டு சதீஷ் வெட்கமடைந்தான். "அவர், ஏன் கஷ்டப் படுகிறார்? என்னைப் போன்ற சிநேகிதர்கள் அவருக்குப் பலர் கிடைப்பார்கள். இரண்டாவது, இப்போது நான் அங்கு போவது கூடக் கிடையாதே" என்றான்.

சாவித்திரி, ஆச்சரியத்துடன், "போவதில்லையா? பின் விபின் பாபுவின் 'அவளுக்கு' யார் பாட்டு சொல்லிக் கொடுக்கிறார்கள்?" என்றாள்.

சதீஷ் கோபத்துடன், "நான் அவளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்து வருகிறேனா?" என்றான்.

"எனக் கென்ன தெரியும்? சனங்கள் அப்படித்தான் சொல்கிறார்கள்,"

"யாரும் அப்படிச் சொல்ல மாட்டார்கள். எல்லாம் நீ எண்ணிக் கொள்வது."

"நீங்கள் விபின் பாபுவை வீண் டம்பக்காரன் என்று சொல்கிறீர்கள். இதுவும் நான் எண்ணிக் கொள்வதா?"

இதைக் கேட்டு சதீஷ் அதிக கோப மடைந்தான். இதற்குக் காரணமு மிருந்தது. விபின்பாபுவின் சிநேகிதன் என்று தெரிந்தாலே சனங்கள் ஏளனம் செய்வார்கள் என்பது அவனுக்குத் தெரியும். சதீஷ் மனதிற்குள்ளாகவே மறைந்திருந்த இந்த சந்தேகம் சாவித்திரியால் வெளிப்பட்டது. "என்னை, யார் அவன் சிநேகிதன் என்று சொல்வது? எங்கே, அவன் பெயரைச் சொல்லு" என்ருன்.

சாவித்திரி மனதிற்குள்ளாகவே சிரித்துக் கொண்டாள். "யாருடைய பெயரைச் சொல்லட்டும்? ராகால் பாபுவின் படுக்கையை வெளியில் போட வேண்டும்" என்ருள்.

"படுக்கை இருக்கட்டும். முதலில் பெயரைச் சொல்லு."

சாவித்திரி சிரித்துக் கொண்டு, "குமுதினி" என்ருள்.

சதீஷ் ஆச்சரியத்துடன், "அவளை உனக்கு எப்படித் தெரியும்?" என்ருன்.

"அவள் என்னை வேலைக்கு வரும்படி சொன்னுள்."

"உன்னையா? இது சுத்த முட்டாள்தனம்! நீ என்ன சொன்னுய்?"

"நான் இன்னும் ஒன்றும் சொல்லவில்லை. யோசித்துக் கொண்டிருக்கிறேன். சம்பளம் அதிகம்; வேலையும் குறைவு; ஆசையாகவும் இருக்கிறது."

சதீஷின் கண்கள் சிவந்து விட்டன. "தெரிந்து கொண்டாயா? இது வெல்லாம் விபினுடைய தந்திரம். உன்னைப் பற்றி அடிக்கடி பேசுகிருன்" என்ருன்.

"ஆம், பேசுவார். என் மேல் மனது வைத்திருக்கிருர் என்று தெரிகிறது."

சதீஷ் சாவித்திரியை உற்றுப் பார்த்து விட்டு, "இருக்கட்டும். மனது வைத்ததற்குப் பாடம் கற்பிக்கிறேன். நூறு ரூபாய் கடனையும் கொடுத்த பிறகு பார்க்கிறேன். சரி, நீ போ" என்ருன்.

சாவித்திரி போய் விட்டாள். ராகாலுடைய படுக்கையை வெளியில் போட்டு விட்டு அவசரமாக சன்னல் வழியாகப் பார்த்தாள். சதீஷ் ஆடை அணிந்து கொண்டிருந்தான். அவன் பெட்டியைத் திறந்து ஒரு கட்டு நோட்டுக்களை எடுத்து ஜேபியில் வைத்துக் கொண்டான். சாவித்திரி கதவருகில் வந்து நின்று கொண்டு இரு கைகளையும் வைத்து வழியைத் தடுத்துக் கொண்டு, "எங்கே போகிறீர்கள்?" என்ருள்.

"வேலை யிருக்கிறது."

"என்ன வேலை, சொல்லுங்கள்?"

சதீஷ் கோபத்துடன், "விலகிக் கொள்!" என்ருன்.

சாவித்திரி விலகவில்லை. அவள் சிரித்துக் கொண்டு, "கடவுள், உங்களுக்கு ஒரு குறைச்சலும் வைக்க வில்லை. இதற்கு முன்பே கடனைக் கொடுத்தாகி விட்டது" என்ருள்.

சதீஷ் புருவத்தை நெறித்தான். ஒன்றுமே பேச வில்லை.

"ரொம்ப இருட்டாகி விட்டது. நான் வேலை செய்வதும் செய்யாததும் என் இஷ்டம். நீங்கள் இதில் தலையிட்டு யாரிடமும் சண்டைக்குப் போகாதீர்கள்."

" சண்டையிடுவதும் இடாததும் என் இஷ்டம். நீ என் வழியைத் தடுத்துக் கொண்டிருக்கிருய் ?"

சாவித்திரி கரங் குவித்துக் கொண்டு, "கொஞ்சம் பொறுங்கள். நானும் வருகிறேன், போவோம்" என்ருள்.

சதீஷ் கட்டிலில் வந்து உட்கார்ந்ததும் சாவித்திரி வெளியில் கதவுச் சங்கிலியைப் போட்டு விட்டாள். சன்னல் ஓரத்தில் வந்து நின்று கொண்டு, "உங்கள் கோபம் தணியுமுன் நான் கதவை திறக்க மாட்டேன். நான் கீழே போகிறேன்" என்று கூறி விட்டு கீழே போய் விட்டாள். களைப்புடன் சிறிது நேரம் உட்கார்ந்து கொண்டிருந்தான். பிறகு சொக்காயைக் கழற்றி தரையில் எறிந்து விட்டுப் படுத்துக் கொண்டான்.

பிரயாகையிலேயே விபினை சதீஷிற்குத் தெரியும். அந்தப் பழக்கம் கல்கத்தா வந்த பிறகு அதிகமாயிற்று. இங்கு அவன் அடிக்கடி வரப் போக இருந்தான். அவன் எதற்காக வருகிருன் என்பதும் சதீஷிற்கு நன்கு தெரியும். சாவித்திரியின் பேச்சால் அது இன்று நன்கு வெளிப்பட்டது. சதீஷின் நண்பன் பெரிய மனிதன் என்று கருதி இந்த விடுதியில் அனைவரும் விபினை நன்கு மதித்தார்கள். சதீஷும் அவனை நன்கு உபசரிப்பான். இது எல்லாம் சாவித்திரியைச் சேர்ந்தது. அந்த உபசாரத்தை விபின் வேறு விதமாக நினைத்துக் கொண்டான். தனது உதார குணத்தைப் புரிந்து கொள்ளாமல் அந்தச் சின்ன மனசு படைத்தவன் அயோக்கியத்தனமாக நடக்கத் தலைப்பட்டான் என்று தெரிந்ததும் அந்த உபசரிப்புகளுக்கெல்லாம் ஒரு முடிவு ஏற்பட்டது. வெளித் தோற்றத்துக்கு அவன் மௌனமாகப் படுத்துக் கொண்டிருப்பது போல் தோன்றினுலும் அவன் உள்ளூற மகா வேதனைப் பட்டுக் கொண்டு தானிருந்தான்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு சாவித்திரி சன்னலருகே வந்து, "கோபம் தணிந்ததா ?" என்ருள்.

சதீஷ் ஒன்றும் பதிலளிக்கவில்லை. கதவைத் திறந்து சாவித்திரி எதிரில் வந்து நின்று கொண்டு, "சரி, இதென்ன பெரிய குற்றம்?" என்ருள்.

"என்ன குற்றமா ?"

"எல்லோரும் தங்கள் மேன்மையைத் தானே நாடுவார்கள் ? எனக்கும் எங்காவது நல்ல வேலை கிடைத்தால் நீங்கள் ஏன் தடை செய்கிறீர்கள் ?"

"நான் ஏன் தடை செய்கிறேன்? உனக்கு இஷ்டமிருந்தால் போயிருக்க மாட்டாயா ?"

"பின் எதற்காக என் புதிய எஜமானரை அடித்துத் துவம்சம் செய்து விடுகிறேன் என்று கிளம்புகிறீர்கள் ?"

"உன்னுடைய பொருளை யாராவது எடுத்துக் கொண்டு போக விரும்பினல், அந்தச் சமயத்தில் நீ என்ன செய்வாய் சாவித்திரி ?"

"நான் உங்களுடைய பொருளா ?" என்று கேட்டதும் அவள் புன்னகை பூத்தாள்.

சதீஷ் வெட்கத்துடன், "தத் ! இல்லை, அர்த்தம் அதுவல்ல ; ஆனல்........."

"இனி ஆனல்...... ஒன்றும் வேண்டியதில்லை. நான் போகப் போவதில்லை" என்ருள்.

சதீஷின் சொக்காய் கீழே கிடந்தது. அதற்குள்ளிருந்த நோட்டுக்களை எடுத்து பெட்டியைத் திறந்து

உள்ளே வைத்து விட்டு பெட்டிச் சாவியை தன்னிடமே வைத்துக் கொண்டாள். பிறகு, "இதை என்னிடமே வைத்துக் கொள்கிறேன். பணம் வேண்டியிருந்தால் கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள்" என்றாள்.

"திருடிவிட்டாயானால்?"

சாவித்திரி சிரித்துக் கொண்டு, "என் திருட்டு உங்களைக் கெடுத்து விடாது" என்றாள்.

சதீஷ் கண நேரம் சாவித்திரியின் முகத்தை உற்றுப் பார்த்தான். அந்தக் கண நேரத்தில் அவன் உள்ளத்தில் என்ன தோன்றியதோ! அவன் திடுக்கிட்டு, "சாவித்திரி, உன் ஊர் எது" என்றான்.

"வங்காளத்தி லிருக்கிறது."

"இதற்கு மேல் சொல்ல மாட்டாயா?"

"சொல்ல மாட்டேன்."

"சரி ஊரைச் சொல்ல வேண்டாம். சாதி என்ன?"

"அதைத் தெரிந்து என்ன செய்யப் போகிறீர்கள்? நான் சமைத்தால் நீங்கள் சாப்பிட மாட்டீர்களா?"

சதீஷ் சிறிது நேரம் யோசித்து விட்டு, "முடியாதுதான். ஆனால் வேண்டாமென்று சொல்வதற்கும் துணிவு வராது" என்றான்.

சாவித்திரி தன் இருவிசாலமான விழிகளால் சதீஷுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். கணநேரத்திற்குள் அவள் சிரித்தாள். குழந்தையைப் போல் தலையை ஆட்டிக் கொண்டு மிகுந்த அன்புடன், "வேண்டாம் என்று என் சொல்ல முடியாது?" என்றாள். அவன் தேகத்திலே இரத்தம் வேகமாக ஓடத் தொடங்கியது. அவன் ரொம்ப மெதுவாக, "சாவித்திரி, அது ஏன் என்று தெரியவில்லை. ஆனால் நீ சமைத்ததை சாப்பிட மாட்டேன் என்று சொல்வது கடினம்" என்றான்.

"கடினமா? சரி, சந்தர்ப்பம் வரும்போது பார்த்துக் கொள்ளலாம். அடேடே! ராகால்பாபுவின் தலையணையை வெயிலில் போட மறந்து விட்டேனே!" என்று கூறிவிட்டு அவள் அறையை விட்டு வெளியே செல்லத் தொடங்கினாள்.

"ஒரு வார்த்தையைக் கேட்டு விட்டுப் போ!" என்று சதீஷ் கூறிக் கொண்டு எட்டி அவளுடைய முந்தானையைப் பிடித்துக் கொண்டான். சாவித்திரி மிகுந்த கோபத்துடன், "இதென்ன நீங்கள் செய்வது? நான் இதோ வருகிறேன்" என்று சொல்லி விட்டு முந்தானையை விடுவித்துக் கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டாள்.

இது ஒரு விசித்திர சம்பவம் போலிருந்தது. சாவித்திரி திடீரெனப் பயந்து கொண்டு ஓடியது, அவள் நடுங்குங் குரலில் 'இதோ வருகிறேன்' என்று கூறியது, அவள் கண்களில் பளீரென ஒளி வீசியது இவைகளெல்லாம் சேர்ந்து சதீஷின் கெட்ட எண்ணத்தைப் பாழாக்கி விட்டது. வெட்கத்தால் அவன் தேகம் குன்றியது. இனி சாவித்திரிக்கு எதிரில் முகம் காட்ட முடியாது என்று தோன்றியது. எங்கு வந்து விடுவாளோ என்று பயந்து கொண்டு உடனே அங்கிருந்து வேகமாக வெளிக் கிளம்பினான். நாலைந்து படி மீதி இருக்கவே சாவித்திரி மேலிருந்து கூப்பிடுவது கேட்டது. "சாப்பிட்டு விட்டுப் போய்விடுங்கள். திரும்புவதற்கு நேரமானால் எல்லாம் வீணாகிவிடும்" என்று சொன்னாள். ஆனால் சதீஷ்

கேட்டும் கேட்காதவன் போல வெளியே சென்று விட்டான்.

மறு நாள் சாப்பாட்டிற்குப் பிறகு சதீஷ், "சாவித்திரி, ஒன்றும் மனதில் வைத்துக் கொள்ளாதே" என்றான்.

சாவித்திரி ஆச்சரியத்துடன், "எதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டாம்?" என்றாள். சதீஷ் மௌனமானான், சாவித்திரி புன்சிரிப்புடன், "அப்பப்பா! நீங்கள் பேச மாட்டீர்களா? எனக்கு நேரமில்லை. சொல்லுங்கள்" என்றாள்.

"எனக்குத் தெரியாது. உன் இஷ்டம் போல் செய்" என்றான். சாவித்திரி, 'சரி' என்று சொல்லி விட்டுபோய் விட்டாள். வேறு ஒன்றும் கேட்கவில்லை,

இரண்டு மணிக்குப் பிறகு திரும்பி வந்து, "என்ன விஷயம் சொல்லுங்கள்? இன்றும் பள்ளிக்கூடம் போகப் போவதில்லையா?" என்றாள். சதீஷ் பேசாமலிருந்தான்.

"ஏதாவது விஷயம் உண்டா, மணி ஒன்பது அடிக்கிறது?"

"அடித்து விட்டுப் போகட்டும் எனக்கு இப்போது ஒன்றும் பிடிக்க வில்லை."

"என்ன பிடிக்க வில்லை — படிக்கப் போவதா?"

சதீஷ் மனதிற்குள்ளாகவே சஞ்சல மடைந்தான். ஒன்றும் வெளியில் சொல்லவில்லை. அவள் அதைத் தெரிந்து கொண்டு, "படிப்பது பிடிக்கவில்லை. ஆனால் பெண்கள் முந்தானையைப் பிடித்து இழுப்பது பிடிக்கிறதா? போங்கள், பள்ளிக்கூடம் போங்கள். வீணாக வீட்டிலுட்கார்ந்து கொண்டு தொந்தரவு செய்யாதீர்கள்" என்றாள்.

அவளுடைய பேச்சில் அந்தரங்கமான அன்பு நிறைந்திருந்தாலும் பேசிய தோரணையால் சதீஷ் அதிக கோபமடைந்தான். அவன் கண்கள் சிவந்து விட்டன. "வாயில் வந்ததெல்லாம் பேசுகிறாயா! இருக்க இருக்க தலைக்கு ஏறுகிறாயே?" என்றான்.

அடே! இதென்ன திட்ட ஆரம்பித்து விட்டான்! சாவித்திரி ஒரு கணம் மௌனமாக இருந்துவிட்டு, "ஆம் பெரிய மனிதர்கள் விஷயமெல்லாம் இப்படித்தான் இருக்கும். சில கோபிகளுடன் லீலைகளும், ரசக்ரீடைகளும் செய்ததால் தானே பிருந்தாவனம் பெயர் பெற்றது" என்று கூறி விட்டு வெளியே சென்று விட்டாள். சதீஷ் திடுக்கிட்டு விட்டான். சாவித்திரி இவ்விதம் பேசுவாள் என்று அவன் எண்ணியதே கிடையாது. சிறிது நேரம் அசையாது உட்கார்ந்து விட்டு எழுந்தான். பிறகு சாப்பிடாமல் பள்ளிக்கூடம் செல்பவன் போல் வெளிக் கிளம்பி விட்டான்.

அன்று முழுதும் அவன் மனம் அவமானத்தால் துடித்தது. இடைவிடாது அவன் மனதை என்னென்னவோ துன்புறுத்திக் கொண்டே யிருந்தது. அவன் அவளுடைய முந்தானையை எதற்காகப் பிடித்திழுத்தான்? அவன் என்ன சொல்ல விரும்பினான்? சாவித்திரி ஓடியிரா விட்டால் அவன் என்ன சொல்லியிருப்பான்? என்ன செய்திருப்பான்? இவ்விதக் கேள்விகள் அவன் மனதில் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. இவ்விதம் அவன் தன்னைத்தானே நொந்து கொண்டு கங்கைக் கரையில் தனியாக ஒரு கல்லின் மேல் போய் உட்கார்ந்து கொண்டான்.

நேற்று சாவித்திரி யிடமிருந்து வெட்கப்பட்டு வெளியே ஓடி வந்தபோது, அதில் சிறிது இனிமை

கலந்திருந்தது. அதில் வேறொருவர் இவனோடு கலந்து கொண்டதுபோலிருந்தது. ஆனால் இன்று சாவித்திரியின் வார்த்தைகளில் அந்த இனிமை இல்லை. வெட்கத்தால் அவன் உள்ளம் சுருங்கியது. அன்று தலை குனிய வேண்டியிருந்தது; இன்றோ தலையே போய் விட்டது. இந்தப் பெண்ணிடம் இத்தனை நாளும் வேடிக்கையாகப் பரிகாசம் செய்ததெல்லாம் இம்மாதிரி கெட்ட நோக்கத்துடன் தான் என்று நினைப்பாளே என அதிகக் கவலை அடைந்தான். நேற்று காலை வரையிலும் அவனது நடத்தையில் வெறும் வேடிக்கையைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. ஆனால் மத்தியான சம்பவத்திற்குப் பிறகு அதை என்னவென்று சொல்வது? இந்தத் தாபம் ரொம்ப நாளாக மறைந்து கொண்டிருக்கவில்லை என்பதை சாவித்திரி ஒரு போதும் நம்ப மாட்டாள். அவன் மனதில் நெடு நாளாகவே இருந்தது என்று அவள் சொல்லுவாள். ஆனால் அவன் மனதில் ஒன்றும் இருக்கவில்லை. இந்த உண்மையை எப்போது அவள் அறியப் போகிறாள். அவள் நல்ல நடத்தை உடையவள் அல்ல! இது அவளுக்குப் பெரிய மானக்கேடும் அல்லதான்.

ஆனால் இந்தக் கெட்ட பெயரை அவள் எப்படிச் சகிப்பாள்? 'அவள் திருடியாக இருந்தால், கன்னம் வைக்கும் போதே அவள் ஏன் பிடிபடவில்லை?' என்று அவன் மனதிற்குள் நினைத்தான். சாவித்திரி சிரித்துக் கொண்டு, "இந்த சாது ஜடாகமண்டலத்தைத் தோளில் போட்டுக் கொண்டு திரிசூலத்தால் கன்னம் போடும்போது பிடிபட்டுப் போனார்" என்று சொல்லுவாள். இவ்வித எண்ணங்கள் அவன் இதயத்தைத் துளைத்தன. இந்நிலையில் நேரம் போனதே தெரியவில்லை. அலைத்துளிகள் எப்போது காலை நனைத்தன, முனிசிபல் விளக்குகள் எப்போது கொளுத்தப் பட்டன, ஆகாயம் கருமையாகி நட்சத்திரங்கள் எப்போது வெளிக் கிளம்பின என்பதொன்றும் அவனுக்குத் தெரியாது. குளிரால் அவன் தேகம் நடுங்கியதும், தெருக் கடிகாரத்தில் மணி பனிரண்டடிக்கவே அவன் எழுந்து வீடு நோக்கி செல்ல ஆரம்பித்தான். சிறிது நேரம் அவன் தனது கற்பனைச் சந்தேகங்களை மறந்திருந்தான். ஆனால் வீடு நெருங்க நெருங்க மனம் அடித்துக் கொண்டது. தெரு முனைக்கு வரவே அவன் கால்கள் நகர மறுத்தன. மெள்ள மெள்ள விடுதிக்கு எதிரில் வந்து பேசாமல் நின்று கொண்டான். உள்ளே சந்தடியற்று இருந்தது. எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். இந்நேரத்திற்கு எப்படியும் சாவித்திரி வீட்டிற்குப் போயிருப்பாள் என்று நினைத்தான். இருந்தாலும் கதவைத் தட்டுவதற்கு அவனுக்குத் துணிவு உண்டாகவில்லை. அவள் எங்கேயாவது வந்து கதவைத் திறந்து விடுவாளோ என்று பயந்தான். அதே சமயத்தில் கதவும் தானே திறந்து கொண்டது. சிறிது நேரம் சதீஷ் ஒன்றும் பேசவில்லை. பிறகு, "யார் பிஹாரியா?" என்றான்.

"ஆம் பாபுஜி!"

"எல்லோரும் சாப்பிட்டு விட்டார்களா?"

"ஆம். எல்லோரும் சாப்பிட்டு விட்டார்கள்."

'சாவித்திரி போய்விட்டாளா?'

"என்னை உட்கார வைத்து விட்டு இப்போதுதான் போகிறாள்."

இதைக் கேட்கத்தான் சதீஷிற்கு உயிர் வந்தது. மகிழ்ச்சியுடன் கதவை மூடிக்கொள்ளச்

சொல்லிவிட்டு மேலே போனன் "உங்களுக்குச் சாப்பாடு" என்று பிஹாரி வந்து கேட்டான்.

"நான் சாப்பிட்டு விட்டு வந்து விட்டேன் பிஹாரி?"

"குடி தண்ணீர் மேசை மீது வைத்திருக்கிறேன்."

"சரி, நீ போய் படுத்துக் கொள்." என்ருன். பிஹாரி போய்விட்டான். சதீஷும் படுக்கையில் படுத்ததும் தூங்கிவிட்டான்.

இந்தச் சச்சரவு உண்டான பிறகு சாவித்திரி மனதும் நிம்மதியாயில்லை. சதீஷின் கடுமையான பேச்சு மத்தியான வரையிலும் அவளைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது. அவனைத் தனியாகச் சந்தித்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம் என்று தீர்மானித்தாள். இந்த எண்ணத்தோடு அவள் அவனை பகல் பூராவும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். கல்கத்தாவில் விபினிடம் தவிர அவன் வேறு எங்கும் போக மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். அவசியம் அவனிடம் தான் போயிருப்பான் என்று கவலைப்பட்டாள். மெதுவாக இரவும் வந்தது. ஆனல் சதீஷ் வரவில்லை. விபினிடம் போகாமல் வேறு எங்காவது போயிருக்கக் கூடுமென்று அவள் நினைக்கக்கூட இல்லை. சந்தேகம் பலப்பட்டு உறுதியாகவே அவள் எதிர்பார்ப்பது வீண் என நினைத்தாள். மன்னிப்பு வேண்டுவதற்காக எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனல் உண்மையில் அவள் வெறுப்படையத் தொடங்கினுள். ஆகையால் பிஹாரியை உட்கார வைத்து விட்டு இரவு நெடு நேரத்திற்குப் பிறகு அவள் வீடு சென்று விட்டாள். வீடு சென்று படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டாள். ஆனல் நித்திரை வரவில்லை. தேக முழுதும் ஏதோ ஒரு அறிய முடியாத அசதியால் சோர்வடைந்தாள். அறைக்குள்ளிருந்த சிறிய கடிகாரம் மணிக் கொரு தரம் அடித்துக் கொண்டிருந்தது. சாவித்திரி இரவு முழுதும் அது அடிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். விடிய சிறிது நேரம் இருக்கும் போதே அவள் படுக்கையை விட்டு எழுந்து கொண்டாள். கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு வெளிக்கிளம்பினுள். வழியில் மார்வாடிப் பெண்கள் கூட்டமாகப் பாடிக் கொண்டு கங்கைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து இவள் மனதிற்குள்ளாகவே, "தாயே! கங்கா தேவி! இவர்களைக் காப்பாற்று!" என்று சொல்லிக் கொண்டாள். அவளுடைய உதடுகள் நடுங்கின. ஏனே அவளுடைய கண்களிலும் நீர் நிறைந்தது. அவள் அதோடு சதீஷும் க்ஷேமமாக இருக்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள். விடுதிக்கு வந்து பலமாகக் கதவைத் தட்டிய பிறகு பிஹாரி கதவைத் திறந்து விட்டான். அவன் கதவைத் திறந்ததும், "சதீஷ்பாபு ரொம்ப நேரம் கழித்து வந்தார். வரும்போதே சாப்பிட்டு விட்டு வந்து விட்டார்" என்று கூறினுன். இந்தச் சமாச்சாரத்தை முதல் முதலில் சொல்லியாக வேண்டுமா? என்னமோ வயோதிக பிஹாரிக்கு சொல்ல வேண்டுமென்று தோன்றியது. மேலே போய்க் கொண்டிருந்த சாவித்திரி சடக்கென நின்று, "ஆனல், பாபு சாப்பிட்டிருக்க மாட்டார்?" என்ருள்.

"அவருடைய சாப்பாட்டை அப்படியே மூடி வைத்திருக்கிறேன்."

சாவித்திரி மேலே சென்று விட்டாள்.

(தொடரும்)

படித்த பெண்கள்

பி. கோதண்டராமன் எம். ஏ; பி. எல்.

காட்சி 1

பூந்தமல்லி ஐரோட்டில் உள்ள 'ஆனந்த விலாச'த்தில் விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் விசாலமான கூடம். மேலைநாட்டுப் பிரமுகர்கள், இயற்கை காட்சிகளின் படங்கள் சுவர்களை அலங்கரிக்கின்றன. மசூலிப்பட்டணத்து அச்சடிக்கப்பட்ட திரைச்சீலைகள் கதவுகளிலும் சன்னல்களிலும் தொங்குகின்றன. கூடத்தின் நடுவே, அபூர்வமான சிற்ப வேலைப்பாடுகளமைந்த முக்காலியொன்றின் மீது வெண்கலக் கிண்ணத்தில் சில ரோஜாக்கள். மாலை நேரம். கமலா, வெள்ளைக்காரப் பெண்கள் மாதிரி கூந்தலை வெட்டிக்கொண்டும், கையில்லா ரவிக்கை, பம்பாய்ப் புடவை, காதில் நீண்டு தொங்கும் லோலக்கு, கையில் பல ரகமான மங்களூர் வளையல்கள்—இவை அணிந்தும் ஒரு சோபாவில் ஒய்யாரமாக உட்கார்ந்து வாயிற் கதவை நோக்கிக் கொண்டிருக்கிறாள்.

கமலா: (கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு தனக்குள்) மணி மூன்றாய் விட்டது. இனி ஒவ்வொருவராக வந்துவிடுவார்கள். (கமலாவைப்போலவே கூந்தலை வெட்டிக்கொண்டும், காதில் லோலக்கு, கையில் மங்களூர் வளையல், கையில்லா ரவிக்கை, கண்ணைப் பறிக்கும் பல நிறச்சேலை இவையணிந்திருந்த நங்கை யொருத்தி திரையை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைகிறாள்) அல்லோ நீலா! வா, வா, இப்படி உட்கார். (நீலா, கமலாவுக்கு எதிரேயுள்ள சோபாவில் உட்காருகிறாள்) குட்டியம்மா! குட்டியம்மா! (பணிப்பெண் வருகிறாள்) அம்மாவுக்குத் தேனீரும் கேக்கும் கொண்டுவா. (பணிப்பெண் உள்ளே விரைந்தோடுகிறாள்) நீலா, உன்னைப்பார்த்து வெகு நாட்களாய் விட்டன. ஒரு மாதத்திற்குமுன், நளினா தேவியின் 'அட்ஹோ'மில் பார்த்தது தான். அதற்கப்புறம் நாம் சந்திக்கவேயில்லை. என் நீலா, அந்த 'அட்ஹோம்' ஜோராக இருந்தது, இல்லையா?

நீலா: அதற்கென்ன சந்தேகம்? நளினாதேவி வங்காளத்திலிருந்து இங்கே வந்து குடியேறி ஆறு மாதந்தானிருக்கும். இதற்குள் படித்தத் தமிழ்ப் பெண்களிடையே ஒரு புதிய உணர்ச்சியையும் சீவனையும் உண்டாக்கி விட்டார். அவருடைய 'அட்ஹோ' மில், இளம்பெண்களும் இளைஞர்களும் ஒருவரோடொருவர் சிநேகபாவத்துடன் நெருங்கிப் பழகுவதும், ஒருவரையொருவர் அறிந்து கொள்வதும் சகசமாய் விட்டன. பாரிஸ்டர் எஸ். கே. அய்யரின் நவநாகரிகப் பேச்சும், டாக்டர் மணியின் அடக்கமான பேச்சும்............(குட்டியம்மா நுழைந்து ஒரு சிறு மேஜையின் மீது ஒரு கோப்பைத் தேனீரும், ஒரு தட்டில் ஆரிசன் கம்பனி கேக்குகளும் வைத்து விட்டுப் போகிறாள். நீலா அருந்துகிறாள்)

கமலா: நீலா, அந்த 'அட்ஹோ' மில், லீலா, வண்ணாத்திப் பூச்சியைப்போலப் பல வித வர்ண ஆடைகளணிந்திருந்த பகட்டையும், கூந்தலை இரட்டைப் பின்

னல்களாகப் பின்னி முன்னல் தள்ளி மார்பில் விழுந்து புரளும் படி விட்டிருந்த சொகுசையும் குலுங்கிக் குலுங்கி அங்கு மிங் கும் நடந்த ஒய்யாரத்தையும், டாக்டர் மணியையே இமை கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்ததையும் நன்ருகக் கவ னித்தாயா?

நீலா: (அருந்திக் கொண்டே) அவளுடைய சொகுசையும், ஒய்யாரத்தையும், டாக்டர் மணியின் மீதே கண்ணுயிருந்த தையும் பார்க்காமலிருக்க முடி யுமா? அது போகட்டும், கமலா, லயோலா காலேஜ் சரித் திர ஆசிரியரான மிஸ்டர் மூர்த்தி லீலாவையே பார்த்துக் கொண் டிருந்ததைக் கவனித்தாயா?

(லீலா பளபளப்பான தர்மா வரம் சேலையை உடுத்திக்கொண்டு நிதானமாக அடிமேலடி எடுத்து வைத்து ஒய்யாரமாக உள்ளே நுழைகிருள்.)

கமலா: அல்லோ லீலா! வா, வா. உனக்கு நூறுயசு. உன்னைப் பற்றித்தான் பேசிக் கொண்டி ருந்தோம். (லீலா, நீலாவின் பக்கத்தில் உட்காருகிருள்.) குட்டியம்மா! தேனீரும் கேக் கும் கொண்டுவா.

லீலா: என்னைப் பற்றி என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்?

கமலா: நளினுதேவி வைத்த 'அட் ஹோ' மில், உன் அழகு, ஒய்யா ரம், பளபளப்பான ஆடை, மார் பில் விளையாடின இரட்டைப் பின்னல், கலகலப்பு இவைகளி னல் அங்கே வந்திருந்த அத்தனை இளைஞர்களின் (விசேஷமாக மிஸ்டர் மூர்த்தியின்) உள்ளத் தையும் கொள்ளை கொண்டு விட்டாயாம். ஆனல், நீ மட் டும் டாக்டர் மணியையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாயாம்.

லீலா: ஆமாம், உங்களுக் கென்ன? எப்போதும் கேலி தான்.

நீலா: இல்லை லீலா, லயோலா காலேஜ் மிஸ்டர் மூர்த்தி உன்னை விழுங்கி விடுவதைப் போல அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் என் கண்ணுலேயே பார்த்தேன்.

லீலா: அது யாரம்மா, அந்த மூர்த்தி? நான் அவரை ஒரு தடவை கூடக் கண்ணெடுத்துப் பார்க்க வில்லையே?

கமலா: உன் கவனமெல்லாம் டாக்டர் மணியின் மீதே இருந் திருக்க, மிஸ்டர் மூர்த்தியை நீ எங்கே பார்த்திருக்கப் போ கிருய்? அவர் தஞ்சாவூர்க் காரர். தலை மயிர் நீளமாக வைத்துக் கொண்டும், பஞ்ச கவச வேட்டி உடுத்தியும் கர் நாடகம் மாதிரி வந்திருந்தாரே அவர் தாண்டி.

(குட்டியம்மா லீலாவுக்காகத் தேனீரும் கேக்கும் வைத்து விட்டுப் போகிருள்.)

லீலா: (அருந்திக் கொண்டே) ஒகோ, அவர் தாமா? அசல் கர்நாடக மாயிருந்தாரே. அவரை நளினு எப்படி அழைத் தார்? நவநாகரிகப் பெண்கள் கூடுமிடத்தில் அவருக்குத்தான் என்ன வேலை?

நீலா: நளினு தேவியோடு கொஞ்ச காலம் பழகினல் அவருடைய கர்நாடக மெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விடாதா? ஆறு மாதத் திற்குள் எஸ். கே. அய்யரையும் தோற்கடித்து விடப்போகிருர்; பார்த்துக் கொண்டே இரு.

லீலா: அவர் கிடக்கட்டும். டாக்டர் மணியைப் பார்த்தீர்களா? அவர் மெடிகல் காலேஜில் பேராசிரியர். சம்பளம் 300 ரூபாய். பிரைவேட் பிராக்டிஸ் வேறு. ஷெவ்ரெலெட் கார் வைத்துக் கொண்டிருக்கிறார்.

நீலா: ஏது, அவரைப்பற்றி அவ்வளவு தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாயே? 'அட்ஹோ'மில் அவர் மிகவும் அடக்கமாயும் கம்பீரமாயும் இருந்தார். ஆனால், இடையிடையே அவருடைய நகைச்சுவை பொருந்திய பேச்சுக்கள் கூட்டத்திலிருந்த அனைவரையும் கொல்லெனச் சிரிக்கும்படி செய்தன.

கமலா: அது போகட்டும். எம். கே. சுந்தரம் என்றொருவர் வந்திருந்தாரே, அவரைப் பார்த்தீர்களோ? நவீன நடையுடை பாவனைகளில் அவர் எஸ். கே. அய்யரையும் 'பீட்' செய்து விடுவார் போலிருக்கிறது. நளினாதேவி அவருக்கு என்னை அறிமுகஞ் செய்து வைத்தார். நான் அவர் பக்கத்தில் உட்கார்ந்து அரை மணி நேரம் பேசினேன். அவர் தலையில் தடவியிருந்த காமினியா ஆயில் வாசனை என் மூக்கைத் துளைத்து விட்டது.

லீலா: எம். கே. சுந்தரம் எனக்குத் தெரியுமே. அவர் பணக்காரர். ஷோக்குப் பேர்வழி. முகத்தில் தெளிவோ, பிரகாசமோ கிடையாது. பணமிருந்தால் புத்திசாலித்தனமோ, பரந்த அறிவோ வேண்டாமா? 'அட்ஹோ'மில் சம்பாஷணைகள் யாதொன்றிலும் கலந்து கொள்ளாமல் உம்மணாமூஞ்சியைப் போல உட்கார்ந்திருந்தார்.

கமலா: அதெல்லாம் எனக்குத் தெரியாது. பார்வைக்கு அழகாயிருக்கிறார். சொத்து உண்டு. அப்பாவுக்கு ஒரே பிள்ளை. ஒரு தொழிலும் செய்ய வேண்டிய அவசியமில்லை, சுகமாகச் சாப்பிட்டு உல்லாசமாகப் பொழுது போக்கலாம். இந்தக் காலத்தில் ஒரு மனிதனுக்கு அதைவிட வேறென்ன வேண்டும்?

நீலா: கமலா, கிராமபோனை வையேன்.

கமலா: என்ன தட்டு வைக்கிறது? எம். எஸ். சுப்புலட்சுமியின் பெயர் பிரமாதமாக அடிபடுகிறதே. அவளுடைய தட்டுகளில் ஒன்றை வைக்கட்டுமா?

நீலா: எனக்குத் தமிழ்ப் பாட்டென்றால் கட்டோடு பிடிக்காது. தமிழ்ப் பாட்டும் கர்நாடக சங்கீதமும் யாருக்கு வேண்டும்? அமெரிக்க 'ஜாஸ்' சங்கீதந்தான் நவநாகரிக சமூகத்திலே பாஷன்.

கமலா: என்ன லீலா, என்னவோ யோசனையில் ஆழ்ந்து விட்டாயே? டாக்டர் மணியின் மீது தியானமா? நீலாவுக்கு 'ஜாஸ்' சங்கீதமே பிடிக்குமாம். உனக்கென்ன பிடிக்கும்?

லீலா: எனக்கு இப்போது மனம் சங்கீதத்தில் இல்லை. ஏதாவது வையேன்.

நீலா: அவளுடைய மனம் டாக்டர் மணியின் மீது பூரணமாய் லயித்திருக்கிறது.

லீலா: போடி, நீலா, உனக்கு எப்போதும் கேலிதான்.

நீலா: உள்ளதைச் சொன்னால் கேலியாம்மா? பாரு இந்தப் பாசாங்கை.

லீலா: நீலா, நீதான் சொல்லேன், அவருக்கென்ன குறைவு? நல்ல அறிவாளி. பகட்டு, டாம்பீகம் என்பதே கிடையாது. அடக்கமும் காம்பீரியமும் உடையவர். நல்ல வருமானம். ஆனல் ஏழைகளிடம் மட்டும் 'பீஸ்' வாங்குவதில்லை. வருமானத்தில் பாதி ஹரிஜன சேவைக்கென்றும், அவ்வை விடுதிக்கென்றும் அள்ளிக் கொடுத்து விடுகிருர். கலியாணஞ் செய்து கொண்டு குடும்பம் என்று ஏற்பட்டு விட்டால், இப்படியெல்லாம் இருந்தால் முடியுமா? என்பதுதான் யோசனை.

நீலா: அடி லீலா, இதற்குள்ளேயே டாக்டர் மணியைப் பற்றி இவ்வளவு கவலை ஏற்பட்டு விட்டதே. பிற்பாடு கலியாணமாகி குடும்பம் என்று ஏற்பட்டு விட்டால், நீ எப்படித்தான் இருப்பாயோ அம்மா!

(கமலா 'ஜாஸ்' தட்டு ஒன்றை வைத்துக் கிராமபோனுக்குச் சாவி கொடுக்கிருள். அதற்குள், நெற்றியில் அகலமான குங்குமப் பொட்டு, காதில் பழைய மோஸ்தர் கம்மல், வெண்மையான கதர் சேலை — இந்த கோலத்துடன் நங்கை யொருத்தி நுழைகிருள்.)

கமலா: அல்லோ, சீதா. வா! வா!

(சீதா கமலாவின் பக்கத்தில் உட்காருகிருள்.)

சீதா: என்ன கமலா, கிராமபோன் ஏன் இப்படி ஒரே இரைச்ச விடுகிறது?

கமலா: அது தானம்மா 'ஜாஸ்' சங்கீதம். நீலாவுக்கு அது தான் பிடிக்குமாம்.

சீதா: நாசமாய்ப் போச்சு. அவளுக்கு இசையல்ல இரைச்சல்தான் பிடிக்கும் போலும்!

நீலா: அது போகட்டும் சீதா, நீ என்ன இப்படி நாளுக்கு நாள் சுத்த கர்நாடகமாகிக் கொண்டு வருகிருயே? நீ எப்போதுதான் எங்களைப் போல இருக்கப் போகிருய்?

கமலா: சீதா, நாங்களெல்லாம் தேனீர் சாப்பிட்டாய் விட்டது. உனக்குக் கொஞ்சம் கொண்டு வரச் சொல்லுகிறேன்.

சீதா: வேண்டாம் கமலா, நான் தேனீர், காப்பி அருந்துவதை அடியோடு விட்டுவிட்டேன்.

லீலா: சரி, சரி, ஒரே படியாகத் திரேதாயுக மனுஷியாக ஆக விரும்புகிருய் போலிருக்கிறது!

நீலா: சீதா, உன் கர்நாடகத்தால், வாழ்க்கையின் இன்பங்களை அடியோடு துறக்கிருய்.

சீதா: முகத்தில் பௌடரும் வர்ணமும் பூசியும், தலைமயிரை வெட்டியும், வெள்ளைக்காரி மோஸ்தரில் இருப்பதுதான் வாழ்க்கையின்பம் என்ருல், அவ்வாழ்க்கையை நான் துறக்கிறேன். ஆனல், நான் உண்மையான வாழ்க்கை யின்பத்தைத் துறக்கவில்லை. என் வாழ்கையை இன்பமாகத்தான் கழித்து வருகிறேன். ஒரு முக்கியமான விஷயமாக இங்கே வந்திருக்கிறேன். அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஆறு மணிக்கு, எழுத்தறிவுச் சங்கத்தின் சார்பில் நடைபெறும் வகுப்பில் நீங்களும் வந்து, எழுத்தறியாப் பெண்களுக்கு நல்ல வார்த்தைகள் சொல்லி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

நீலா: ஐயோடி! இது என்ன பித்து? அப்புறம்?

லீலா: இங்கிலீஷிலா? தமிழிலா?

சீதா: எழுத்தறிவு பெறப் போகிறவர்களுக்கு இங்கிலீஷ் தெரியாது. தாய் பாஷையாகிய தமிழில்தான் கற்றுக் கொடுக்க வேண்டும்.

நீலா: தமிழில் யாரால் பேச முடியும்?

சீதா: என்னடியம்மா அதிசயம்? நீ தமிழ் மகள் இல்லையா? வீட்டிலும் தமிழ் பேசுவதில்லையா?

நீலா: என் வீட்டு வேலைக் காரியிடம் மட்டுமே தமிழில் பேசுவேன். அதுவும் இங்கிலீஷூம் தமிழும் கலந்தே பேசுவேன். அவள் எப்படியோ புரிந்து கொள்வாள். மற்றவர்களுடன் இங்கிலீஷிலேயே பேசுவேன். என் வீட்டில் எல்லோருக்கும் இங்கிலீஷ் தெரியும்.

சீதா: தமிழர்களாகிய நாம் இப்படித் தமிழைப் புறக்கணிக்கலாமா? நம்முடைய வீட்டிலிருந்தும் தமிழைத் துரத்திவிட்டால், தமிழ்நாட்டினுடையவும் தமிழ் மக்களுடையவும் கதி என்னவாகும்?

நீலா: தமிழ் ஒரு நாகரிக பாஷையா என்ன? பல விஷயங்களுக்குத் தமிழ் அகராதியில் தேடிப்பார்த்தாலும் சரியான தமிழ்ச் சொல் அகப்படுவதில்லை. இங்கிலீஷில் பேசுவதுதான் இப்போது மேல் மக்களின் பாஷன். நாளடைவில் பொது மக்களும் இங்கிலீஷிலேயே பேச ஆரம்பித்து விடுவர். இப்பொழுதுதான் ரிக்ஷா வண்டிக்காரனும் இங்கிலீஷில் ஜமாய்க்கிறானே.

சீதா: அடி நீலா, நீ சொல்வது விந்தையிலும் விந்தை. இங்கிலாந்திலிருந்து ஓட்டைக் கப்பலில் வந்திறங்கிய துரைசாணியைப் போலல்லவா பேசுகிறாய்? மிகப் பழைய நாகரிக இனமாகிய தமிழரிடையே பிறந்து, இனிய மொழியும் இலக்கியச் செறிவும் ஒருங்கே படைத்த தமிழ் மொழியைத் தூற்றுவது என்ன பேதைமை? இக்காலத் தேவைகளுக்கு ஆங்கில மொழியை ஒரு சிறிதளவேனும் பயில்வது இன்றியமையாததாயினும், சிறுபான்மையோராகிய படித்த வகுப்பினரைத் தவிர்த்து, தமிழ் ஒன்றையே பேசும் தமிழ் மக்களுக்குத் தமிழ் மொழியின் மூலமாகவே அறிவு புகட்டுவது இன்றியமையாதது அன்றோ? தமிழில் சில கலைச் சொற்கள் இல்லையென்பது உண்மையே. ஆனால் அவற்றை நாம் படைத்துக் கொண்டால் போகிறது.

நீலா: என்னைப் பொறுத்த மட்டில், தமிழ், நாகரிக வளமற்ற மொழிதான். அதில் என்னால் நன்றாகப் பேச முடியாது. இதரர்களைப் பற்றிய கவலை எனக்கேன்?

சீதா: நீலா, ஆனாலும் உனக்குத் தமிழைப் பற்றி இந்த இழிவான எண்ணமும், தமிழிலும், தமிழ் மக்களிடத்திலும் அசிரத்தையும், இவ்வளவு தன்னலப் பற்றும் ஆகாது. இதனால் தான் நாம் அன்னியர்களுக்கு அடிமைப் பட்டிருக்கிறோம்.

கமலா: அது போகட்டும், சீதா; நீ ஏன் நம்முடைய லேடீஸ் கிளப்பில் சேராமலிருக்கிறாய்?

சீதா: லேடீஸ் கிளப்பா? போதும்! அது எனக்கு வேண்டாம்.

கமலா: ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

சீதா : நீங்கள் அதில் என்ன செய்கிறீர்கள்? பகட்டான ஆடைகளும் அணிகளும் அணிந்து மினுக்கிக் கொள்ளுகிறீர்கள். ஊர் வம்பு பேசுகிறீர்கள். சீட்டு, செஸ், டென்னிஸ், பாட்மிண்டன் முதலிய மேலே நாட்டு ஆட்டங்களை ஆடுகிறீர்கள். உங்கள் தோற்றத்திலும், பேச்சிலும், நடத்தையிலும் இயற்கை என்பது துளி கூடக் கிடையாது. எல்லாம் செயற்கை வாழ்வு! போலி வாழ்வு! பிணியாலும், பஞ்சத்தாலும் அவதிப்பட்டு, அறியாமையில் மூழ்கித் தத்தளிக்கும் லட்சக் கணக்கான மக்களுக்கு நீங்கள் என்னசெய்தீர்கள்? சுகவாசிகளாகவும் உல்லாசப்பிரியர்களாகவும் வாழும் உங்களுக்கும் உங்களுடன் பிறந்த சகோதரர் சகோதரிகளுக்கும் இடையே தாண்ட முடியாத தொரு பள்ளம் இருக்கிறது. நீங்கள் அவர்களை அசட்டை செய்கிறீர்கள். அவர்களுடன் உறவு கொண்டாடுவது உங்களுக்கு வெட்க மாயிருக்கிறது.

(பணிப் பெண்ணொருத்தி திடுமென்று நுழைந்து கமலாவிடம் ஒரு கடிதம் தருகிறாள். கமலா அதைப் பிரித்துப் பார்த்து அதைத் தன் கைப் பைக்குள் போடுகிறாள். பின்னர் கைக் கடிகாரத்தைப் பார்க்கிறாள்,)

நீலா : என்ன விசேஷம், கமலா?

லீலா : எவ்வளவோ இருக்கும். எம். கே. சுந்தரம் எழுதியிருப்பார்.

கமலா : நீலா, லீலா, சீதா, நான் உடனே ஸ்டேஷனுக்குப் போய் எம். கே சுந்தரத்தைப் பார்த்து விட்டு வர வேண்டும். நீங்கள் இங்கேயே இருங்கள். செஸ், பாட்மிண்டன், சீட்டு, எது வேண்டுமானாலும் விளையாடலாம். நான் இன்னும் முக்கால் மணி நேரத்திற்குள் திரும்பி வந்து விடுவேன். லீலா, என் தலை மயிர் சரியாக இருக்கிறதா? (தலை மயிரைச் சரிப்படுத்திக் கொள்ளுகிறாள். பையிலிருந்து முகப் பௌடர் எடுத்துக் கொஞ்சம் அப்பிக் கொள்கிறாள்.) இதோ பார், லீலா, இப்போ எல்லாம் சரிதானே?

லீலா : ஆகா! பூலோக ரம்பை தான்! போய்வா. (கமலா அவசரமாகப் போகிறாள்.)

சீதா : நானும் போக வேண்டும். போய் வருகிறேன். நீங்கள் அனைவரும் அவசியம் அடுத்த ஞாயிற்றுக்கிழமை என் வீட்டிற்கு வர வேண்டும். சிறிது நேரம் பேசி விட்டு, அங்கிருந்து அனைவரும் எழுத்தறிவு வகுப்பிற்குச் செல்வோம். கமலா வந்தால், நான் அவசரமாகப் போக வேண்டி யிருந்ததாகச் சொல்லுங்கள். நீங்கள் அடுத்த ஞாயிற்றுக்கிழமை மறக்க மாட்டீர்களே?

நீலா, லீலா : மறக்க மாட்டோம். அவசியம் வருகிறோம். (சீதா போகிறாள்.)

நீலா : இந்த சீதா, இவ்வளவு படித்திருந்தும், நவ நாகரிகம் அறிந்திருந்தும், கர்நாடகத் தன்மையை விடாமல் பிடித்திருப்பது தான் விநோதமாயிருக்கிறது.

லீலா : எனக்கும் அவளுடைய போக்கு அதிசயமாகத் தான் இருக்கிறது.

[திரை விழுகிறது.]

காட்சி 2

புரசைவாக்கம் கங்காதரேசு வரர் கோயிலுக் கருகேயுள்ள அழகான சிறு மெத்தை வீடு. கீழே தெருப்பக்கமாக நான்கு சன்னல்களையுடைய ஒரு விசால மான அறை. தரையிலே ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு மூலையில் தஞ்சாவூர் வீணை. சுவரெங்கும் அஜந்தா, சித்தன்ன வாசல், தஞ்சாவூர் பெருவுடை யான் கோயில் இவைகளில் காணும் அபூர்வ ஓவியங்களின் படங்கள். கீழண்டைச் சுவரி லுள்ள புரை யொன்றில், குழலூ தும் கண்ணன் வெண்கலச் சிலை யும், மற்றொன்றில் தில்லை நடரா சன் செப்புச் சிலையும் உள்ளன. சீதா விசிறியால் விசிறிக் கொண் டே ரத்தினக் கம்பளத்தின் மீது உட்கார்ந்திருக்கிறாள். மாலை மூன்று மணி. நவநாகரிகப் பெண் ணொருத்தி உள்ளே நுழைகிறாள்.

சீதா: (விசிறியைக் கீழே போட்டு விட்டு எழுந்து சுதேச மரபின் படி கை கூப்பி வணங்கி) வா, நீலா, இப்படி உட்காரு. இங்கே நாற்காலிகள், சோபாக்கள் கிடையா. பாதகமில்லையே? என் அழைப்பிற் கிணங்கி வந் ததற்காக நான் மிகவும் மகிழ் கிறேன். (நீலா உட்காரு கிறாள்.)

நீலா: என்ன அப்படிச் சொல்லு கிறாயே, சீதா? நீ அழைத்தும் வராமலிருப்பேனா?

(கமலா நுழைகிறாள்.)

கமலா: ஹல்லோ, சீதா!

சீதா: (திரும்பிப் பார்த்து) வா, வா, கமலா. இப்படி உட்காரு. (கமலா உட்காருகிறாள். உட னே லீலாவும் நுழைகிறாள்) லீலா, வா, நீ வந்ததைப் பற்றித்தான் எனக்கு மிகவும் சந்தோஷம்.

லீலா: என்ன சீதா, நீ சாதாரண உடையிலிருக்கிறாய்? முகம் வேறு கறுத்திருக்கிறது.

சீதா: நீ நிரம்பக் கெட்டிக்காரி, லீலா. இவர்களில் எவரும் கண்டு பிடிக்காத விஷயத்தை நீ எப்படியோ கண்டு பிடித்து விட்டாயே? சமையலறையில் கொஞ்சம் வேலையாயிருந்தேன். உங்களுடைய வரவை எதிர் பார்த்து அறையில் வந்து உட் கார்ந்தேனா யில்லையோ, முத லில் நீலாவும், பின்னாடையே கமலாவும், பிறகு நீயும் வந்து விட்டீர்கள்.

கமலா, லீலா: என்ன? சமைய லறையிலா வேலையாயிருந்தாய்? என்ன வேலை அது?

சீதா: அம்மா ஊரிலில்லை. இரவு சாப்பாட்டுக்கு எங்கள் குடும் பத்திலுள்ள அனைவருக்கும் இப் போதே சமைத்து வைத்து விட் டேன். இன்று எழுத்தறிவு வகுப்பை முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பி வர 8 அல் லது 8-30 மணி ஆய் விடுமோ இல்லையோ, அதற்காகத்தான்.

லீலா: வெட்கம்! வெட்கம்! எம். ஏ., எம். எஸ்ஸி பட்டம் பெற்றவளா சமைப்பது?

கமலா: இதென்னடி இது? உன் படிப்பென்ன? நாகரிகமென்ன? சமையல் கட்டில் உழைக்க உனக்கென்ன கேடு வந்து விட் டது? சமையல்காரி ஒருத்தியை வைத்துக் கொள்ளக் கூடா தோ?

சீதா: (சிரித்துக் கொண்டே) எம். எஸ்ஸி படித்து விட்டால் சமையல் கூட செய்யக் கூடாதென்று எந்த சாஸ்திரத் தில் சொல்லியிருக்கிறது? அம்மா என்னைச் சிறு வயதிலே

குடும்ப காரியங்களில் பழக்கி விட்டாள். காலேஜில் படித்து வந்த போதும் வீட்டு வேலையை விடாமல் செய்து வந்தேன். நான் நன்ருகச் சமைப்பேன் என்று வீட்டில் பெயருண்டு. அப்பாவுக்கு என் சமையல் என்ருல் ஆனந்தம்.

நீலா: படித்த பெண்கள் செய்ய வேண்டிய நாகரிகமான வேலைகள் பல விருக்க, இந்தக் கீழ்த்தரமான வேலைகளில் நேரத்தைச் செலவு செய்வதை நான் ஒப்புக்கொள்ள முடியாது.

சீதா: நீலா, வேலையில் கீழ்த்தரமான வேலை யென்றும், உயர்தரமான வேலை யென்றும், உண்டா என்ன? ஒரு வேலையை எந் நோக்கத்துடன், எவ்விதமாகச் செய்கிருேமோ, அவையே கருதுதற்கு உரியன. நான் சந்தோஷமாகச் செய்யக் கூடிய வேலையைப்பிறர் செய்யும் படி விட்டு விட்டு நாசூக்கான நங்கைகளைப் போலச் சோம்பியிருப்பது எனக்குத் திருப்தியளிக்காது. எங்கள் வீட்டுச் சமையலறையைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுகிறேன். அங்கே யுள்ள பாத்திரங்களை பளபளவென்று துலக்கி வைக்கிறேன். சமையலறையில் நுழைந்து அவற்றைக் கையாளும் போது ஒரு வித இன்பமேற்படுகிறது. சுவையுள்ள உணவு செய்யும் போது ஒரு மகிழ்ச்சி யேற்படுகிறது. இவ் வேலையில் ஈடுபடும்போது சிரமம் என்பதையே நான் உணருவதில்லை. சமையல் செய்வதை ஒரு அழகிய கலை யென்றே மதிக்கிறேன். இத்தகைய அழகிய, இன்பமளிக்கும் வேலையை நான் செய்வது என் அந்தஸ்துக்கும் படிப்புக்கும் உகந்ததாகாது எனக் கூறுவது சற்றும் பொருந்தாது.

நீலா: சீதா! சமையல் செய்வது ஒரு கலை யென்றும், அது உனக்கு இன்பமளிக்கிறதென்றும் கூறுகிருய். இதெல்லாம் மதிமயக்கம்; வெறும் அசட்டுணர்ச்சி.

லீலா: ஆமாம், சுத்தப் பைத்தியக்காரத்தனமுங் கூட. பெண்களாய்ப் பிறந்தால், சமையல் வேலை செய்ய வேண்டுமெனப் பிரம்மா எழுதி வைத்திருக்கிருரு என்ன? கல்வியறிவற்ற ஒரு சமையல்காரியைச் சமைக்கச் சொல்லி விட்டு, நாம் உயர்ந்த வேலைகளில் ஈடுபட்டுப் பொருள் சம்பாதிப்பதும், ஒழிந்த நேரங்களை உல்லாசமாகக் கழிப்பதும் தவரு என்ன?

சீதா: நாமெல்லோரும் கல்வி வைத்தியம் முதலிய உயர்தரத் தொழில்களில் ஈடுபட்டுப் பொருளீட்டுகிருேம் என்பது உண்மைதான். ஆனல், நீ ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும், லீலா. பெண்ணினத்திற்கு இரு வேலைகள் உண்டு. இயற்கையாக அமைந்த வேலை யொன்று; நாமாக ஈடுபடும் வேலை மற்ருென்று. நமது நாட்டில் வீட்டை அழகு பெற வைத்துக் கொள்வதும், சுவையுள்ள உணவைச் சமைத்து உற்ருர் உறவினருக்கு இன்பமளிப்பதும் பெண்களுக்கு நீண்ட கால வழக்கமாக அமைந்த வேலையாகும். அவ்விதமிருக்க, நாம் ஏதோ படித்து விட்டு, அதனல் ஏற்ற மடைந்து, அதைப் பயன் படுத்தி நாகரிகமாக வாழ்ந்து வருவதன் காரணமாக நமக்கு இயற்கையா யமைந்துள்ள வேலையைப் புறக்கணிக்க வேண்டியதில்லை. குடும்ப வாழ்க்கையை அழகும், வசீகரமும், இன்பமும் பொருந்திய

தாக விளங்கச் செய்வது நமது உரிமையாயிருக்க, அதைக் கூலி வேலை செய்வோரிடம் அடியோடு விட்டு விடுவது, நாசூக்கு, நாகரிகம் என்னும் பெயரால் பிறர் கையை எதிர் பார்த்து நிற்கும் சுத்த சோம்பேறி வாழ்வாகும்.

லீலா: வெறும் படிப்போடு நின்று வீட்டில் சோம்பேறிகளாகக் காலங் கழிப்பதாக இருந்தால், நீ சொல்வது சரியே. நாம் தான் சம்பாதிக்கிறோமே? நாம் சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு வீட்டு வேலையைப் பார்க்க வேலைக்காரர்களை அமர்த்துகிறோம். இதெப்படிப் பிறர் கையை எதிர் பார்த்துச் சீவிக்கும் சோம்பேறி வாழ்க்கையாகும்.

சீதா: உன் கேள்வி நியாயமானதே. ஆனால், இரண்டு விஷயங்களை நீ மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். முதலாவது, நாம் என்னதான் படித்து விட்டுச் சம்பாதித்தாலும், நம்முடைய ஆன்ம திருப்திக்கான வேலைகளில் ஈடுபட வேண்டியது இன்றியமையாததாகும். வீட்டு வாழ்க்கையை அழகும் சுவையும் பொருந்தியதாகச் செய்வது இவ்வேலைகளுள் ஒன்றாகும். இரண்டாவது, நாம் தன்னலமொன்றிலேயே கவனம் முழுவதையும் செலுத்தி விடாது, சுற்றியுள்ள மக்களின் தேவைகளின் மீதும் சிறிது கவனஞ் செலுத்தி நம்மாலியன்ற பணி செய்ய வேண்டும். இவ்விதஞ் செய்வதாலேயே நமக்கு இயற்கையாயமைந்துள்ள வசீகரத்தையும், தியாக உணர்ச்சியையும் பயன் படுத்தியவர்களாவோம், இல்லாவிடில், நம்முடைய வசீகரத்தை மட்டுமின்றி நம்முடைய பெண்ணியல்பையும் இழந்து விடுவோம்.

நீலா: சீதா, இதெல்லாம் வாய் வேதாந்தம்! முட்டாள்தனம்!

லீலா: இத்தகைய அசட்டுணர்ச்சிகளால் பெண் வசீகரம் பொருந்தியவளாகிறாள் என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

கமலா: இதெல்லாம் பொய் அடக்கம்!

சீதா: இது வாய் வேதாந்தமோ அசட்டுணர்ச்சியோ, பொய் அடக்கமோ சிறிதுமில்லை. பெண் நவீனக் கல்வியும் நாகரிகமும் பெற்றிருந்தபோதிலும், நம்முடைய பண்டை மரபில் அழகு பொருந்தியனவாக உள்ளனவற்றைக் கைவிடாமல் ஒழுக வேண்டுமென்பது பொய்யடக்கமா! தன்னலமொன்றே யாவும் என்றிராமல், தம்மைச் சுற்றியுள்ள மக்களின் நலத்தையும் கவனித்து நம்மாலியன்ற சேவை செய்ய வேண்டுமென்பது வாய் வேதாந்தமா? மக்கட் குலத்திற்கு மதிப்பும் வசீகரமும் அளிப்பது அதன் மானிடத்தன்மையேயன்றோ? கல்வியறிவிலும், செல்வ நிலையிலும், வாழ்க்கை நிலையிலும் நம்மைவிடத் தாழ்ந்திருப்பவர்கள்பால் அன்பும் இரக்கமுங் காட்டி அவர்களைக் கைதூக்கிவிட வேண்டுமென்பது அசட்டுணர்ச்சியாகுமோ?

லீலா: அன்பென்றும் இரக்கமென்றும் பேசுகிறாய். நான் என் டாக்டர் தொழிலில் நோயாளிகளின் மீது இரக்கங் காட்டவில்லையா? அவர்களுக்கு இதமான வார்த்தைகள் கூறி அவர்களின் துயரத்தைக் குறைக்கவில்லையா?

சீதா: தொழிலில் இவ்வண்ணம் இரக்கங்காட்டுவது நல்லது

தான். ஆனால், இதோடு நின்று விடலாகாது. இந்த இரக்கம் விரிந்து எல்லோரையும் தழுவ வேண்டும். ஒருவன் முனிசிபல் சபையில் உறுப்பினனாக நிலைத்திருப்பதின் பொருட்டு, பொது சனங்களுக்குச் சில சௌகரியங்களைச் செய்து தருகிறான். பாதிரிமார்கள் தங்கள் சமயத்தில் தாழ்ந்த மக்களைப் பெருவாரியாகச் சேர்ப்பதன் பொருட்டு அவர்களுக்குச் சில நன்மைகள் செய்கின்றனர். இவையாவும் தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட இரக்கமே.

லீலா: நீ சொல்லுகிறதைப் பார்த்தால், டாக்டர் மணியைப் போல 'பீஸ்' வாங்காமல் தருமத்திற்கு வைத்தியஞ் செய்ய வேண்டும் என்கிறாயாக்கும்?

(மத்திய வயதுள்ள, சாமான்னிய உடையணிந்த பெண்ணொருத்தி அடக்கமாக மெல்ல நடந்து உள்ளே வருகிறாள்.)

சீதா: மீனா வா? வாருங்கள் வாருங்கள்! (அவள் நெருங்குகிறாள்.)

மீனா: நீங்கள் எதோ பேசிக் கொண்டிருக்கையில் நடுவே வந்ததற்காக மன்னிக்க வேண்டும்.

சீதா: பாதகமில்லை. உட்காருங்கள். (மீனா உட்காருகிறாள்) இவர்கள் அனைவரும் என் தோழிகள். (கையால் காட்டிக்கொண்டே) இவர் கமலா; இவர் நீலா; இவர் லீலா. (தோழிகளைப் பார்த்து) இவர்தாம் மீனா; என் சமூகப் பணிக்கு வலது கை போன்றிருப்பவர். (மீனா எல்லோருக்கும் வணக்கஞ் செய்கிறாள். அவர்களும் அவளுக்கு வணக்கம் செய்கின்றனர்.)

மீனா: நான் ஒரு நல்ல சேதி கொண்டு வந்திருக்கிறேன். நேற்று வரையில் எழுத்தறிவு வகுப்பில் நூறு பேர்களல்லவா சேர்ந்திருந்தனர். இன்று பாட்டாளி மக்கள் 50 பேர்கள் தாங்களும் சேர விரும்புவதாக அறிவிக்கின்றனர்.

சீதா: அப்படியானால், மற்றொரு உபாத்தியாயரை நியமிக்க வேண்டுமே?

மீனா: வேண்டியதில்லை. இன்னுங் கொஞ்சகாலம் கௌரவ உபாத்தியாயர்களைக் கொண்டே காரியம் நடத்தலாம். சங்கத்தின் நிதி பெருகும்போது புது உபாத்தியாயர்களை நியமிப்பது பற்றி ஆலோசனை செய்யலாம்.

நீலா: (மீனாவைப் பார்த்து) இந்த எழுத்தறிவு சங்கத்தின் பண நிருவாகத்தை யார் நடத்துகிறார்?

மீனா: சீதாதாம். இதோடு ஹரிஜன சேரியில் ஒரு இலவச வைத்தியசாலையையும் நடத்துகிறார்.

நீலாவும் லீலாவும்: ஆ! அப்படியா?

கமலா: இவையெல்லாம் என்ன பைத்தியக்காரத்தனம், சீதா?

லீலா: வைத்தியசாலையில் யார் வைத்தியம் செய்கிறார்?

சீதா: டாக்டர் மணி தினந்தோறும் வந்து நோயாளிகளைப் பார்த்து மருந்து கொடுத்து விட்டுப் போகிறார்.

லீலா: இலவசமாக வைதியஞ் செய்வதென்றால் டாக்டர் மணிக்குக் கொண்டாட்டமாயிற்றே. அவரால் மற்ற டாக்டர்கள் வாயில் மண்தான்.

மீனு: (எழுந்து) நான் போக வேண்டும். செல்கிறேன்.

சீதா: மீனு, நான் கௌரவ வாத்தியாயர்களுக்கு ஏற்பாடு செய்கிறேன். இங்கேயுள்ள தோழிகளும் எனக்கு உதவி செய்வார்களென்றே நம்புகிறேன். (மீனு எல்லோரையும் வணங்கிவிட்டுச் செல்கிறார். சீதா மற்றவர்களைப் பார்த்து) இவர் அருங்குணங்கள் பல வாய்ந்தவர். எட்டாவது வகுப்பு வரையில் படித்திருக்கிறார். இவருடைய கணவர் இவரைத் தள்ளி வைத்து விட்டு இரண்டாந்தாரம் மணந்துகொண்டிருக்கிறார். இவர் தம் நகை நட்டுக்களை விற்றும் உயர்ந்த குடும்பங்களில் ஊழியஞ்செய்தும் காலட்சேபஞ் செய்துவந்தார். எழுத்தறிவு வகுப்புக்காக ஒரு நல்ல உபாத்தியாயரைத் தேடுகையில் இவரது பரிச்சயம் ஏற்பட்டது. உடனே இவர் உதவியைப் பெற்றேன். மிகத்திறமையும் பொறுப்புமுடையவர்.

நீலா: சீதா, உன் எழுத்தறிவு வகுப்பு எங்கே நடக்கிறது? நானும் உனக்கு இவ்வேலையில் உதவி செய்யப் போகிறேன். என் மனம் மாறிவிட்டது.

சீதா: உண்மையாகவா நீலா? நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். வகுப்பு பூந்தமல்லி ஐரோட்டில் 'இஸ்லாமிய கிளப்' புக்கு அடுத்த சிறு பங்களாவில் நடக்கிறது. தற்சமயம் வாரம் மூன்று நாட்கள் நடத்துகிறோம்.

நீலா: நான் இன்றைய தினமே என் வேலையை ஆரம்பித்து விடுகிறேன்.

லீலா: ஏது நீலா, திடுமென்று மாறி, ஒரேயடியாக சீதாவின் சிஷ்யை யாகிவிட்டாயே?

நீலா: நான் சீதாவின் சிஷ்யையோ, இல்லையோ, எனக்குத் தெரியாது. சீதா நல்ல காரியத்தில் ஈடுபட்டிருக்கிறாள் என்றே என் புத்திக்குப் படுகிறது. நானும் என்னாலியன்றதைச் செய்ய விரும்புகிறேன்.

லீலா: சீதா, உன் அசட்டுத்தனம் உன்னை என்றைக்கோ ஒரு நாள் அடியோடு கவிழ்த்து விடப்போகிறது. நீலாவின் வாழ்க்கையையும் பாழ்படுத்தாதே. எச்சரிக்கை செய்கிறேன். நீங்கள் சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டே இந்த வகுப்பையும் வைத்தியசாலையையும் நடத்த முடியுமா? இந்தக் காலத்தில் பணந்தானே எதற்கும் தேவையாயிருக்கிறது?

சீதா: மேலைநாட்டு நடையுடைபாவனைகளை உயர்ந்தவையென்று எண்ணி அவற்றின் மினுமினுக்கில் மயங்கி விடுவதும், தன்னலம் ஒன்றே பெரிதெனக் கொண்டு, தன் சொந்த விருப்பு வெறுப்புக்கள் போகும் போக்கிலேயே செல்வதும், டாம்பீகமும் செருக்குங் கொண்ட வாழ்க்கை எனக்கு வேண்டாம். என்னைச் சுற்றியுள்ள மக்களின் இன்ப துன்பங்களில் அக்கரை காட்டுவதும், அவர்கள் பால் இரக்கங்கொண்டு கூடிய நன்மைகள் செய்வதும், துரதிர்ஷ்டத்தின் காரணமாக அஞ்ஞானத்தில் மூழ்கியுள்ள மக்களுக்கு எழுத்தறிவு புகட்டுவதும் அசட்டுத்தனமென்றால், அந்த அசட்டுத்தனத்தையே விரும்புவேன். தமிழ் மக்களிடையே பிறந்த நான், தமிழ் மக்களின் இன்ப துன்பங்களை நேருக்கு நேராகக் கண்டு, உணர்ந்து, அவைகளில் பங்கெடுத்துக் கொள்வதும், அறியாமை என்னும் படுகுழியில் வீழ்ந்தவர்களுக்கு அறிவுச்சுடர் கொளுத்தி அவர்களின் வாழ்க்கையில் ஓரளவு

ஒளியும் இன்பமும் ஏற்படுமாறு உழைப்பதும் என் லட்சியமாகும். இந்த லட்சியத்திற்காக, இவ்வாழ்க்கையில் எனக்கு எக்கேடு விளைந்தாலும் அதை அனுபவிக்கத்தயாராக இருக்கிறேன். என் முயற்சியில் தோல்வியடைந்தாலும், உலகினர் "ஐயோ பாவம்! சீதா ஓர் உன்னத லட்சியத்திற்காக வாழ்ந்தாள்" என்ருவது சொல்வார்களல்லவா? நீ பணம், பணமென்கிருய். இக்காலத்தில் பணத்தின் சக்தியை நான் குறைத்துக் கூறவில்லை. பணமே உலகை ஆளுகின்றது என்பதை அறிவேன். ஆனல், பணத்தைக் கொண்டு அன்பு, சீலம், இன்பம் என்னும் மூன்று விஷயங்களை வாங்க முடியாது. இவையே வாழ்க்கைக்கு விழுப்பம் தருவன. இவை இருப்பின், பணம் தானகை வரும்; பொது மக்கள் கண்விழித்து என் பணியை ஆதரிக்க முற்படுவர். இந்த நம்பிக்கை எனக்கு உண்டு.

லீலா: சீதா, நீ பெரிய பேச்சுக்காரி. நீலாவைப் போல உன் பேச்சால் நான் மயங்கி விட்டேன். வாழ்க்கையைச் சுகமாகக் கழிக்க வேண்டுமென்பதே என் லட்சியம். உன் வழியைப் பின்பற்றினல், என் சீவிய கால முழுதும் உழைத்துக் கொண்டிருக்க வேண்டியதே. அது எனக்கு வேண்டாம்.

சீதா; லீலா, உன் குறி வேறு; என் குறி வேறு. நீ குறுகிய வாழ்வைத் தேடுகிருய்; நான் பெரு வாழ்வைத் தேடுகிறேன். தன்னலத்தைத் தியாகஞ் செய்தால் தான் பெருவாழ்வு கை கூடும். இது நம் பண்டைப் பெரியோர்கள் கண்ட நிரந்தரமான உண்மை.

நீலா: சீதா சொல்வதே நேரான வழியென எனக்கும் படுகிறது. நான் சீதாவைப் பின்பற்றத் தீர்மானித்துவிட்டேன்.

சீதா: (எழுந்து) எழுத்தறிவு வகுப்புக்குச் செல்ல நேரமாகிவிட்டது; போவோம். (இது காறும் பேச்சில் கலந்து கொள்ளாமலிருந்த கமலா தூங்கியெழுந்தவள் போலக் கொட்டாவி விடுகிருள்.)

லீலா: என்ன கமலா? நீயொன்றும் பேசவில்லையே. கனவு லோகத்தில் எம். கே. சுந்தரத்துடன் சஞ்சரித்துக் கொண்டிருந்தாயோ?.

கமலா: நீங்கள் என்னென்னவோ பேசிக் கொண்டிருந்தீர்கள். என் புத்தி வேருெரு விஷயத்தில் லயித்திருந்தது. அது போகட்டும், சீதா, ஹரிஜனச் சேரியில் உனக்கு உதவியாக வைத்தியஞ் செய்யும் டாக்டர் மணிக்கும் உனக்கும் ஏதாவது நெருங்கிய தொடர்பு உண்டா? உண்மையை ஒளிக்காமல் சொல்.

சீதா: அவர் தாம் எனக்குக் கணவராகப் போகிருர். திருமணம் அடுத்த மாதம் நடக்கப் போகிறது.

(கமலாவும் நீலாவும் லீலாவை நோக்குகின்றனர். லீலா முகஞ் சுளித்தாள்,)

லீலா: என்ன! டாக்டர் மணியா!

சீதா: ஆம்.

லீலா: (முகம் வெளிற, உடல் நடுங்க) எனக்கு உடம்பு ஒரு மாதிரியாக இருக்கிறது. நான் போகிறேன். (திடுமென்று போகிருள்).

கமலா: ஐயோ பாவம்! லீலா ஆசையோடு கட்டின கோட்டை இடிந்து விட்டது!.

[திரைவிழுகிறது.]

வீணா கானம்

[ஆர். திருஞானசம்பந்தம்]

என் உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சிகளைப் போலவே கடல் அலைகளும் பொங்கிப் புரண்டு கொண்டிருந்தன. கீழ்-வானிலே மலர் விரிவது போன்று மேலெழுந்து வரும் நிலவின் ஒளி செய்யும் அற்புதக் கோலங்களும், தூரத்திலே வீடு திரும்பிக் கொண்டிருக்கும் படகோட்டிகளின் பரவசப் பாட்டும், அந்தியின் மோகன மயக்கும் என் நெஞ்சைக் கவரவில்லை. கவராதது மட்டுமா? அழகின் காந்தி அதிகரிக்க அதிகரிக்க அனல் கொழுந்து எனக்குள்ளே சுடர் விட்டுப் பிரகாசிப்பது போன்றிருந்தது. ஏனிந்தத் தாகம்?

முந்திய நாள் சாயங்காலத்திலிருந்தே என் மனசு ஒரு நிலையிலில்லை. அன்று இரவு வீட்டிலுள்ள எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு என்னைப் பேசிப் பேசி வதைத்ததானது சகிக்கக் கூடியதாக இல்லை. என்னைப் போன்ற வைராக்கிய சித்தம் கொண்டிருந்தாலொழிய வேறு யாராலும் அதைப் பொறுத்துக் கொள்ளவே முடியாது.

இந்த உலகத்தின் அக்கிரமத்தை என்னவென்று சொல்வது? அருணோதயத்திலே அற்புதமாக மலருகிறதே புஷ்பம், அது யாரையாவது கேட்டுக் கொண்டு தான் மலருகிறதா? இதே அந்தி வானம் வித வித வர்ணச் சேர்க்கைகளை நவ நவமாக அள்ளி வீசிக் கொண்டிருக்கிறதே, யாருடைய அனுமதியின் பேரில் இதெல்லாம் நடைபெறுகிறது? அலைகளுக்கிடையே என்னென்னவோ வடிவங்கள் கணந்தோறும் மின்னி மின்னி மறைகிறதே, இதற்கெல்லாம் யாருடைய உத்திரவாவது வேண்டியிருக்கிறதா? எந்தக் கட்டளையையும் கேட்காமலே இப்படி இயற்கை தன்னிச்சையாய் நடந்து கொண்டிருக்கையில் நான் மட்டும், என் வேறொருவர் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்? அப்பப்பா! என்னென்ன விசித்திரக் கட்டளைகள்! வேண்டுகோள்கள்! வீடு பூராவுமே என்னை உற்று நோக்குகிறது! இந்த இம்சையிலிருந்து மீள ஒரு வழியில்லையா?

போகட்டும், என்னுடைய இன்பத்திலும் — சுகத்திலும் நாட்டம் கொண்டு உபதேசிக்கிறார்களே, இவர்களில் யாராவது ஒருவராவது என் விருப்பத்தை, இச்சையைக் கவனித்தார்களா? வேடிக்கையிலும் வேடிக்கை அது தான் பெரிய வேடிக்கை! ஆனால் பார்க்கப் போனால், "உன் நல் வாழ்வுக்கே இத்தனையும் சொல்கிறோம்" என்ற பெரிய சித்தாந்தம் — சித்தாந்தமா? அபத்தக் கூச்சல் வேறு! சரி, போடுகிற வரை போடட்டும். அவர்களுடைய சத்தத்தால் வீடு இடிந்து விழுந்தாலும் விழலாம். ஆனால் நான் மட்டும் துளிக்கூட மாறப் போவதில்லை. விடிய விடிய — விடிந்து இன்னேரம் வரையோ சித்தும் அம்மா சொன்ன வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரிய மாட்டேன் என்கிறது. அப்பா சொல்கிறார். "அடே, நீ எனக்கு ஒரே பிள்ளை. வீணாக என் பெயரைக் கெடுக்காதே. என் காலத்துக்குப் பிறகு நீ எக்கேடோ கெட்டு நாசமாகப் போ! ஆனால் என் கண் எதிரே — இனி மறுபடியும்

என் காது கேட்க, அவளைக் கட்டிக் கொள்கிறதாகச் சொல்லாதே'' என்கிருர்.

ஆனால் அவளுக் கென்னவோ? அது தான் எனக்கு விளங்கவில்லை.

தங்கைகள் சொல்லுகிருர்கள், "அண்ணு, ஊரிலே எத்தனையோ அழகான பெண்கள் இருக்கிருர்களே. இந்தப் பெண் மட்டும் வேண்டவே வேண்டாம் அண்ணு; இனி இந்தப் பெண்ணை மறந்து விடு அண்ணு.''

இந்தப் பெண்ணுக்கு என்ன என்பது தான் என் கேள்வி. இதெல்லாம் ஒரு மாதிரியாகத் தள்ளி விடலாம். ஆனால் அம்மா சொல்வதற்குத்தான் நேரடியாகப் பதில் சொல்ல எனக்குத் தெரியவில்லை. அவள் கேட்கிருள், "அப்பா, சொல்வதைக் கேளு. அவளுடைய அம்மா சங்கதி தெரியுமோ இல்லையோ? அவளுக்குப் பிறந்த அந்தப் பெண்ணை என்ன வென்று சொல்வார்கள்? வேறுயாராவதாயிருந்தாலும் பரவாயில்லை, ஐயோ அவள்'' என்று சொல்லி கண்ணீர் சிந்த ஆரம்பிக்கிருள். அம்மாவின் வாயைக் கிளறினல் தட்டுத் தடுமாறி தயங்கிக் கொண்டே, "ஐயோ அப்பா, தலை நாளிலே தாசி வீட்டிலா கட்டுவது? நீ வேறு எங்காவது சொல்லு. இது அடுக்குமா?'' என்று கண்ணீர் வடிக்கிருள்.

இந்த, 'தர்ம சங்கடம்' என்னும் வார்த்தைக்கு இத்தனை நாளும் எனக்கு அர்த்தம் தெரியாமல் இருந்தது. இப்போது தான் அதற்குப் பூரணமாகப் பொருள் விளங்குகிறது! அம்மாவிடம் நான் எவ்வளவு விஷயங்களை எந்த முறையில் விளக்கிச் சொல்வது? அந்த வீட்டில் சம்பந்தம் வேண்டாமாம். ஆனல், சும்மா போகலாம், வரலாம், பேசலாம் — ஏன் — சாப்பிடவும் சாப்பிடலாம் — ஆனல் சம்பந்தம் மட்டும் கூடாதாம். இதென்ன நியாயமோ? முதன் முதலில் பத்து வருஷங்களுக்கு முன்பு அந்தப் பெண் இருக்கும் திக்கே எனக்குத் தெரியாது. கொஞ்சம் கொஞ்சமாக இவர்களால் தான் அறிமுகமாயிற்று. பிறகு வளர்பிறை போல் அன்பு வளர்ந்தோங்கியது. மலர் மணம் போல் இதயத்தை அது நிறைத்து விட்டது

அதன் பிறகு வீணையும் கையுமாக அவள் கான வெள்ளத்திலே மெய்மறந்திருந்த போதெல்லாம் ஏதோ இசையின் பெருக்கிலே மூழ்கித் தான் பரவசப் பட்டேனே யல்லாது, மற்றெதிலும் அல்ல. நாளாக ஆக, அந்த கானத்திற்கு அப்பால் இன்னம் ஏதோ ஒரு மந்திர சக்தி கலந்திருப்பது போலிருந்தது. வீணையின் இடையே அவளுடைய இளம் விரல்கள் திரிகையில், என் இதயத்தையே நெருடி மீட்டுவது போலிருந்தது. குங்குமம் அணிந்து, குனிந்து தலை நிமிராமல், சடை இடையோடு சுற்றி வளைந்திருக்கும் கோலம் கொஞ்சம் கொஞ்சமாக நெஞ்சில் இடம் பெற்று விட்டது. இன்று துளியிடம் பாக்கியில்லாமல் எல்லாமாகக் கலந்து அது நிறைந்து விட்டது. ஆரம்பத்திலே எந்தத் திக்கில் படகு போயிற்று என்று தெரியாது. கடைசியாக கரையை அடைந்த பிறகு, அதைச் சின்னு பின்னமாக்கி, தண்ணீருக்குள் தூக்கி எறிய யோசனை சொன்னல் அது எப்படி இருக்கும்? நாலு பேர் கேட்டவர்கள் தான் என்ன சொல்வார்கள்?

"அம்மா, நீ காரணமில்லாமல் கவலைப் படுகிருய்'' என்ருல் அம்மாவின் துக்கம் பொங்குகிறதே தவிரத் தணிவதாயில்லை. இதற்கு நான் என்ன செய்வது?

நிலாக் கிளம்பி அரைப்பனை உயரத்துக்கு வந்து விட்டது. கடற்கரையோரமாக சற்று தூரத்தில் தான் இருக்கிறது காந்திமதியின் வீடு. அன்று மாலை சீக்கிரமாகவே வருவதாகச் சொல்லி விட்டு வந்தேன்.

ஆனால் முந்திய இரவு வீட்டில் எழுந்த கொந்தளிப்பு காரணமாக "போகலாமா வேண்டாமா" என்னும் சந்தேகம் வந்து விட்டது இப்போது! என்ன யோசனை! பெற்ற தகப்பன் சொல்வது என்ன? சீராட்டித் தாலாட்டி வளர்த்த அன்னை வேண்டிக் கொள்வது என்ன? அருமைத் தங்கைகள் கேட்டுக் கொள்வது என்ன? இவ்வளவையும் பொருட்படுத்தாமல் கேவலம் ஒரு இளம் பெண்ணின் கை அசைப்புக்கு அடிமையாகி விடுவதா? என்னைப் போன்ற மனிதன் நியாயம், உண்மை, என்றெல்லாம் உபதேசம் செய்கிற ஆசாமியே இப்பேர்ப் பட்ட காரியத்தில் முனைந்து நின்ருல் மற்றவர்களைப் பற்றி என்ன சொல்வது? ஆனல் என் நேர்மையில் யாருக்கும் துளியும் சந்தேகம் தோன்ருது. தோன்றியதும் இல்லை.

அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்கிறேன் என்று பிடிவாதமாயிருக்கிறேன் நான். தாசி என்று ஒதுக்கித் தள்ளுகிருர்கள் என் வீட்டார். இதற்கிடையில் தான் பல இதயப் போராட்டங்கள்! நல்லது, இந்த மாதிரியே ஆனந்தகரமான ஒரு இரவிலே அவள் என்ன சொன்னுள்? "நான் தாசி குலத்தில் பிறந்தேன். நீங்களோ சம்சாரி மகன். உங்களுக்கு சொத்துச் சுகம் இருக்கிறது. என்னைப் போல வேறு யாராவது ஒருத்தியைப் பார்த்து கலியாணம் பண்ணிக் கொள்ளுங்கள். உங்கள் பெற்ருேருக்கும் பிரியம் ஏற்பட்டு விடும். குலமும் கெட்டுப் போகாது," என்ருள்.

"காந்திமதி, ஒரு தரம் உன்னை நெஞ்சில் வரித்தாயிற்று: நீயா இப்படி பேசுகிருய்?" என்றேன். அவள் வீணையைக் கீழே வைத்து விட்டு, "இதோ இதிலிருந்து வரும் கானம் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்தத் 'தள தள' ப்பான தேகத்தின் காந்தி எக்காரணத்தாலோ குறைந்து போய் விட்டது என வைத்துக் கொள்ளுங்கள். அப்போதும், இந்தக் கானமும், காந்தியும் உங்கள் மனதிலே நிற்குமா? அப்படியே இருக்கும் என நீங்கள் நம்புவதானல் இஷ்டம் போல் செய்யுங்கள்" என்ருள்.

ஆகா! இன்றல்லவா அவள் சொன்ன பேச்சின் அர்த்தம் நன்ருகத் தெரிகிறது? ஒரு கணத்தில் புத்தி என் இப்படி மாறப் பார்க்கிறது?

நிலா, கடல் அலைகளோடு கைகோத்துக் கொண்டிருக்கிறது. இனிய சொப்பனம் போல் அவ்விரவிலே வீணு கானம் எழுந்தது. ஆம், காந்திமதி தான் வீணை வாசிக்கிருள். என் வருகையை எதிர் பார்த்து சலித்துப் போன அவள் வீணையை எடுத்து மீட்டத் தொடங்கி விட்டாள். அடடா! இந்த நாதத்தில் தான் என்ன மந்திர சக்தி! என் இதயத்தையே கட்டி இழுக்கிறதே?

ஆனல் .... தந்தை என்ன சொன்னுர்?

"என் கண் எதிரே இப்படியொன்றும் செய்யாதே. என் காலத்திற்குப் பிறகு எப்படி வேண்டுமானலும் கெட்டுக் குட்டிச் சுவராகப் போ!"

இப்படிச் சொல்லிய தந்தையின் பேச்சை இப்போதே எப்படித் தட்டுவது?

சரி, அவருடைய மனதின் அடியிலே இருப்பது தான் எனக்குத் தெரியுமே. பிறகு நான் ஏன் அனுவஸ்யமாகக் கவலைப்பட வேண்டும்?

தவிர நான் சாமி பூதங்களை நம்பாதவன். இகலோக பரலோக இன்பங்களைக் காட்டி என்னை யாரும் மயக்கி விட முடியாது. தெய்வம் என்கிற அழகிய கற்பனையின் மூலமாக எழுந்த பூச்சாண்டிகளைக் கண்டு நான் அஞ்சுகிறவன் அல்ல. என் தந்தையாகத் தான் இருக்கட்டுமே மறு ஜென்மத்தைப் பற்றி அவர் அப்படி உறுதியுடன் இருக்கையில், "பூர்வ ஜன்மத்திலே இந்த பந்தம் ஏற்பட்டு விட்டது" என்று நான் அவரிடம் ஏன் சொல்லக் கூடாது? நான் நீச சாதி மகளோடு சம்பந்தம் வைத்துக் கொள்வதனுல் அவருடைய கருணை வடிவமான எம்பெருமான் சினம் கொண்டு சுவர்க்கத்தில் எனக்கு இடமளிக்கா விட்டால் பரவாயில்லை. இந்த பெண்ணேடு நரகத்திலும் கேடு கெட்ட வேறு எந்த லோகத்திற்கு வேண்டுமானுலும் நான் போகத் தயார். இந்த நம்பிக்கையை மட்டும் ஒரு நாளும் மாற்றவே முடியாது. இது முரட்டு தைரியத்தில், தன்னை யறியாது எழுந்த ஆவேசம் அல்ல. நான் சாந்தமாக மிகவும் பொறுமையாகவே இருக்கிறேன். என் மனதை நானே சந்தேகத்திற்குத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன். ஆத்திரபுத்தியில் அவசரப்பட்டு நான் ஒரு முடிவுக்கு வரவில்லை. எந்தச் சமயத்திலும் சொல்லத் தயார்.

சரி, முடிவு செய்தான பிறகு இனிக் காரியத்தில் நடத்திக் காட்ட வேண்டியது தான்.

நான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து நடந்தேன். மணல் காலுக்கு மெதுவாக இருந்தது. கரையோரமாகவே காந்திமதியின் வீட்டை நோக்கி நடக்கலானேன்.

குளிர்ந்த அலைத் திவலைகள் லேசாக பாதத்தை நனைத்துக் கொண்டிருந்தன. மாலையிலிருந்து கலகலப்பாக இருந்த கடற்கரை கொஞ்சம் கொஞ்சமாக சாந்தியின் மடியிலே தலைசாய்க்க ஆரம்பித்தது.. தூரத்திலே புரளும் அலையின் கோஷம் மட்டும் சற்றைக்கொரு தரம் 'திடும் திடும்' எனக் கேட்டுக் கொண்டிருந்தது. அவ்வினிய இரவிலே வீணு கானத்தை நோக்கி நான் நடந்து கொண்டிருந்தேன். அப்போது, "பழம் வேணுமா பழம்" என்று கேட்டுக் கொண்டே ஒரு பையன் ஓடி வந்தான் பொழுதெல்லாம் தூங்கி விட்டு, இப்போது தான் விழித்துக் கொண்டான் போலிருக்கிறது. ஒருவரும் அவன் கண்ணுக்குத் தட்டுப் படவில்லை போலும்! போனுப் போகிறது என்று கைக்கு வந்த சில்லறையைக் கொடுத்து ஒரு நல்ல பழமாகப் பார்த்து எடுத்து அதை உரித்துத் தின்று கொண்டே மேலே நடந்தேன். கொஞ்ச நேரத்தில் காந்திமதியின் வீட்டுக்கு வந்து விட்டேன். ஆனுல் உள்ளே போகாமல் வாயிற்படியிலேயே நின்று கொண்டேன். வெகு நேரத்திற்குப் பிறகுதான், சந்திரன் மெல்லிய மேகத்திரைக்குள் புகுந்து கொண்டான் என்பதும், இனிய நாதம் அடங்கி, காந்திமதியும் வெளியே வந்து என்னையே உற்றுப் பார்த்து நிற்கிருள் என்பதும் என் அறிவில் உறைக்கத் தொடங்கியது. பிறகு போனேம்.

காந்திமதி அன்றுதான் மனசிலிருந்ததை எல்லாம் கொட்டித் தீர்த்தாள் என்று நினைக்கிறேன். கடைசியாக, "இன்று உங்கள் வீட்டுக்கு அனுப்பியிருக்கும் தக

வலில் இன்னேரம் மூலைக்கு ஒரு வராகத் தேடுவார்கள்" என்றாள்.

"அது என்ன என்றேன்?" அப்போதுதான் மீண்டும் வீட்டு ஞாபகம் வந்தது,

காந்திமதி கலங்கிய கண்களோடு, "இன்னேரம் என் கதையைச் சொல்லிக் கொண்டு வந்தேன். இந்த வாழ்க்கை வழியில் இன்னும் என்னென்ன இடர்களைச் சமாளித்தாக வேண்டுமோ? அதோ பாருங்கள்—எல்லையில்லாக் கடல் வெளியிலே திசை தப்பி

பறந்து செல்லுகிறதே இரண்டு பட்சிகள். அந்த மாதிரி நாமும் ஜென்மமெடுத்திருக்கலாகாதா?" என்றாள்.

"காந்திமதி, நீ வருந்தக் காரணமே யில்லை. என்னை இந்த எதிர்ப்பு என்ன செய்துவிடும்?" என்று தேற்றினேன். ஆனால், அவள் என் ஆறுதலை எதிர்பார்க்க வில்லை.

"நந்திக் கலம்பகத்திலே 'கணவர் உறவு கதையாய் முடிந்ததே' என்று ஒரு அடி வருகிறதே, ஞாபகம் இருக்கிறதா? அப்படித் தான் என் கதையும் ஆகிவிடுமோ என்று இருந்தேன். ஆனால் வேறுவிதமாக அல்லவா முடிந்திருக்கிறது. இந்தத் துக்கத்திலும் சிரிப்பு வருகிறது. உங்கள் வீட்டுக்கு என்ன செய்தி அனுப்பினேன் தெரியுமா? இனி நீங்கள் இங்கேயே இருந்துவிடப் போவதாக தகவல் சொல்லி அனுப்பி விட்டேன்..."

"அட ராமா" வேறு வார்த்தை ஒன்றும் வரவில்லை....

"ராமனையும் கிருஷ்ணனையும் ஏன் கூப்பிடுகிறீர்கள்?

"அவர்கள் வீணை என் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள்? நேரில் வந்து நாம் ஆனந்தமாக, உல்லாசமாகப் பொழுதைப் போக்குவதைக் கண்டால் ஒருவேளை மனசு மாறுதா என்ற யோசனை தான்" என்றாள்,

"நல்ல விபரீத யோசனை!" என்றேன்.

அவள் பேசவில்லை,

"காந்திமதி, அப்படியானால் ஒருவேளை இப்போது யாராவது வந்தாலும் வருவார்கள்?" என்றேன்.

"உங்கள் வீட்டுச் சனங்கள் போக்கு உங்களுக்குத் தானே தெரியும்?" என்று சொல்லிவிட்டு அவள் வீணையை எடுத்து மீட்டத் தொடங்கினாள்,

ஆனால் வீணையிலே என்மனம் செல்ல வில்லை.

"இந்தா காந்திமதி. நான் என்ன சொன்னாலும் கேட்பாயல்லவா?" என்றேன். எதையோ எண்ணிக் கொண்டு "ஆம்" என்றாள்.

"இதோ என் கையில் என்ன இருக்கிறது தெரியுமா?"

மூடியிருந்த கையைப் பார்த்துக் கொண்டே, எனக்கென்ன தெரியும்?'' என்ருள்.

“பாஷாணம்!''

காந்திமதி திடுக்கிட்டாள். “என்ன என்ன? விஷமா?''

“ஆமாம் விஷம் தான்!''

கொஞ்ச நேரம் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

சந்திர வெளிச்சம் அரையும் குறையுமாக அந்த முகத்தில் பட்டுக் கொண்டிருந்தது. துவண்ட மலர் போல் இருந்த வதனத்தில் திடீரென பழைய களை வந்து விட்டது.

“இந்த விஷத்தை இப்போது என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?''

அவள் பேச்சற்று இருந்தாள்.

“காந்திமதி, என் கையாலே தருகிறேன்; இந்தா.''

அவள் கை நீட்டி வாங்க முயற்சித்தாள்.

“இல்லை, எனக்கு மட்டிலும் இல்லை.''

“இரண்டு பேருக்கும் தான்''

“ஆகட்டும்'' என்பதற்கு தலையை அசைத்தாள்.

ஆனல்......ஆனல்...... நான் சிரிக்க ஆரம்பிப்பதற்குள் 'ஐயோ' என்னும் பெரிய அலறல் சத்தம் கேட்டது! வீடே இடிந்து விழும் போல் என் தந்தை உரக்கப் பேசினர். அம்மாவின் ஓலத்தையும் மீறிக் கொண்டு, “நீ சுகமாய் இருந்தால் போதுமப்பா'' என்னும் வார்த்தை தான் கேட்டது.

“அடே, விஷத்தைத் தொடாதப்பா. இந்த உத்தமியைக் கட்டிக் கொள்ளப்பா'' என்று அவர் சொன்னர்.

எனக்குத்தான் ஒரு விதத்தில் ஆச்சரியமாக இருந்தது. ஆனல் காந்திமதி எந்தச் சமயத்திலும் அன்றிரவு என் பெற்ருேர் வருகையை எதிர் பார்த்திருந்ததால் அவள் ஆச்சரியப்பட வில்லை.

அவர்கள் எல்லோருடைய பிடிவாதமான வேண்டுகோளின் பேரில், கடற்கரை மணலைக் கையால் கிளறிக் கொண்டிருக்கையில் எடுத்து மூடி வைத்திருந்த சிறு கூழாங்கல்லை தூரத்துக் கடல் அலைகளோடு போய்க் கலக்கட்டுமென வீசி யெறிந்தேன். கடலைச் சேர்ந்த பொருள் கடலுடனே ஐக்கியமாகி விட்டது. என்னைச் சேர்ந்த பொருளும் ....!

★

மலர் மணம்

★

முகப்புப் படம் :

இந்தியாவின் உயிர் நாடியாய் விளங்குபவை இந்தியக் கிராமங்கள். இந்தக் கிராமங்களுக்குத் திலகம் போல் விளங்குகிறவர்கள் கிராமங்களில் வாழும் நாரீமணிகள். அவர்களுடைய இனிய சாயல்களேயும், அபூர்வத் தோற்றங்களேயும் சுவைபட எடுத்துக் காட்டினுல் அதை 'அருமையான கலே' என்று யார்தான் போற்ற மாட்டார்கள்? ஆம், அப்பேர்ப்பட்ட அற்புதக் காட்சி ஒன்று இந்த இதழ் முகப்பை சோபிக்கச் செய்கிறது. இதற்கு ஒரு சிறந்த விளக்கமாக 'கதிரவன்' ஒரு கவிதை புனேந்திருக்கிருர். இதயத்தை அப்படியே அந்தக் கவிதை கவர்ந்து விடுகிறது. கண்ணும் மனமும் களிப்படையும் இம்மாதிரி இயற்கைச் சித்திரங்கள் மேலும் 'வசந்த'த்தை வளப்படுத்தும்.

சென்ற இதழில் சர். ஆர். கே. எஸ் எடுத்துக் காட்டிய குறிஞ்சிப் பாட்டின் அற்புதத்தை வியந்து அநேக ரசிகர்களும் அறிஞர்களும் பாராட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிருர்கள். நன்ருய் அனுபவித்த பரவசத்தைக் கேட்டுப் பூரிப்படைகிருேம். ஆர். கே. எஸ் அவர்கள் இன்னும் இப்படி அரிய விஷயங்கள் தருவார்கள் என்பது சந்தோஷத்துக்குரிய சங்கதியாகும்.

இந்த இதழில் சிறப்பான எத்தனேயோ அம்சங்கள் வெளி வந்திருக்கின்றன. கிராமியக் காட்சி இனிய பாடலோடு வெளி வந்திருக்கிறது. தொடர்கதை ரசமான கட்டங்களுக்கு நம்மை அழைத்துச் செல்லுகிறது.

ரா. நாவின் "அமைதியும் ஆவலும்" நம்முடைய இதயப் பாங்கை மட்டும் காட்டுவதோடு நிற்கவில்லே. உயரிய சிந்தனேக்கும் உவந்ததா யிருக்கின்றது.

கே. பி. கணபதி தீட்டியுள்ள ஹாஸ்ய நடிகனே ஒரே ஒரு தரமாவது காண வேண்டுமென்று ஆவல் எழுவது இயற்கையே யாகும்!

தமிழ் இலக்கியத்தில் நாடகங்கள் இல்லாக் குறையை பூர்த்தி செய்யும் நல் நோக்கத்துடன் திரு. கோதண்டராமன் அவர்கள் மிகுந்த சுவையுடன் நாடகம் இயற்றியிருக்கிருர். திரு. விஜயராகவன் சிறு கதைகளேப் புகழ்ந்து எழுதிய ஒரு எழுத்தாள சகோதரி, "அவர் எங்கள் கிராமத்தை அல்லவா வர்ணித்திருக்கிருர்!" என்று வேடிக்கையாக எழுதியிருக்கிருர். ஆனுல் ஹாஸ்யத்திற்குள்ளிருக்கும் உண்மையை மறுக்க முடியாது. என்னவோ பொழுது போக்கிற்காக என்ருே அல்லது தத்துவத்திற்கே இலக்கியம் சிருஷ்டி செய்வதாகவே வைத்துக் கொண்டாலும், அதிலும் ஓரளவு வாழ்வின் ஒளியும், உண்மையின் தோற்றமும் அவசியம் இருக்க வேண்டும். இந்த இரண்டும் அவர் சிருஷ்டியில் நிறைந்திருக்கிறது. இந்த இதழில் பெரிய — சின்ன விஷயங்களேப் பற்றி வரைந்திருக்கிருர். இன்னும் மற்ற விஷயங்களேயும் பூரணமாக அனுபவிக்கலாம்.

— ஆசிரியர்

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

AVI

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: பம்பாய் சென்னை கிளை: 4 & 5, முதல் லைன் பீச்

தீ விபத்து, ஆயுள், கப்பல், மோட்டார்கார், தொழிலாளர்கள் நஷ்டஈடு முதலிய இன்ஸ்யூரன்ஸ் திட்டங்களும் அடங்கி யிருக்கின்றன.

"நியூ இந்தியா"வின் பொருளாதார நிலை

வசூலான மூலதனம்

ரூ. 3,50,05,275

1942வருஷத்திய பிரிமிய வருமானம்

தீ	ரூ.	57,46,706
கப்பல்	ரூ.	45,00,706
விபத்துக்கள் முதலியன	ரூ,	14,86,288

ஆயுள் :

முதல் வருஷத்திய பிரிமியம்	ரூ.	9,85,372
புதுப்பிக்கப்பட்ட பிரிமியம்	ரூ.	47,87,033
ஒற்றைப் பிரிமியம்	ரூ.	5,12,887
கூட்டுப் பிரிமியம்	ரூ.	9,996
உத்தேசிக்கப்பட்ட வருஷ வருமானம்	ரூ.	3,54,091

1942வருஷத்திய புதிய தொழில்கள்

ஆயுள்	ரூ.	2,33,86,850
அவசர வருஷ வருமான பாண்டுகள்	ரூ.	2,88,059
நீண்ட கால வருஷ வருமான பாண்டுகள்	ரூ.	53,825
கூட்டு இன்ஷ்யூரன்ஸ்	ரூ.	14,30,000
மொத்த சாதாரண ஆயுள் பாலிசிகள்		12,07,80,150

செலுத்தப்பட்ட மூலதனம்

ரூ. 71,21,055

31-12-1942ல் இருந்த நிதிகள்

செலுத்தப் பட்ட மூலதனம்	ரூ.	71,21,055
தீ நிதி	ரூ.	54,48,683
கப்பல் நிதி	ரூ.	69,41,776
விபத்துக்கள் நிதி	ரூ.	15,19,516
ஆயுள் சகாய நிதி	ரூ.	2,53,24,543
வாடகை, செலவு நிதி	ரூ.	17,715
பொது சேமிப்பு நிதி	ரூ.	3,50,000
கொள்முதல் சேமிப்பு நிதி	ரூ.	6,99,433
மாற்று சேமிப்பு நிதி	ரூ.	50,679
லாப நஷ்டம்போக மீதம்	ரூ.	11,02,023
மொத்த நிதி	ரூ.	4,85,75,423

உரிமைத் தொகை எட்டுக் கோடி ரூபாய்க்கு அதிகமாக இது வரையிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது

சென்னை மாகாணத்தில் சமஸ்தானங்கள் உள்பட ஏஜண்டுகள் தேவை.

கே. கணபதி

பிராஞ்சு மானேஜர்



T.V.S. முன்னிற்கிறது!



T. V. S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷகாலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 4,000-க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன- இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T. V. S இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூடர்களிடம் கேளுங்கள்.

பிரதான அம்சங்கள்

ஸ்டார்டிங் அதிசுலபம்:—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.

சமகனம்:—டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.

மும்முறை வடிகட்டும் வசதி:—சுத்தமான கியாஸ். மேற்பார்வை செலவு குறைவு.

மிகவும் நம்பிக்கையானது:—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.

நேர்த்தியான தோற்றம்:—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்ததோற்றம்.

வாங்கு முன் மாதிரிகளைப் பாருங்கள்.

T·V·S

கியாஸ் பிளாண்ட்

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)

T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் லிமிடெட்

மதுரை & சென்னை.

TVS.K – 7 TM.

PSG

மோட்டார்களை

ஸ்தாபனம் செய்து



செலவை

சிக்கனம் செய்யுங்கள்

PSG அண்டு சன்ஸ், தர்ம ஸ்தாபன இண்டஸ்டிரியல்
இன்ஸ்டிடியூட், பூளமேடு, கோயமுத்தூர்.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் மதருஸ்

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ் : நார்த் பீச் ரோடு, மதருஸ்.

மதருஸ் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், மவுன்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

அதிகார மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (28—5—'43)	...	ரூ.	27,55,229
ரிசர்வும் மற்ற நிதிகளும் (25—5—'43)	...	ரூ.	29,44,259

மொத்த ஆஸ்தி 7 கோடிக்கு மேல்.

எல்லாவித பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

வேண்டிய விவரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது எழுதி தெரிந்துகொள்ளலாம்.

சேக்ரடரி: N. கோபால அய்யர்.

கோவை

லிங்கம் கம்பெனி யாரின்

"ரோஜா" மார்க் நெய் மேன்மை யானதென நிரூபிப்பதற்கு பல அத்தாக்ஷி களுடன் கீழ் கொடுக்கப் பட்டதும் ஒன்று:

பல லக்ஷக்கணக்கான ஜனங்களால் மெச்சப் பட்ட கோட்டையூர் பாரிஸ்டர் அளகப்ப செட்டியார் மகள் கலியாணத்திற்கு சப்ளை செய்யப்பட்டு போற்றப் பெற்றதும் ஒன்று.

3 வீசை டின்களில் எந்த இடங்களுக்கும் பார்சலில் கிடைக்கும்.

பரிபூரண யுத்தம் என்பது பரிபூரண சேவை.

பாதுகாப்புச் சேமிப்புப் பத்தி ரங்களை வாங்குங்கள்.

இப்படிப் பணத்தைச் சேர்த்து வைக்கிறவர்களும் யுத்தசேவை செய்கிறார்கள்.

இதோ வருகிறது!

காமதேனு வனஸ்பதி

பங்கீடு நாட்களில் அதிக போஷாக்கு அளிக்கக் கூடிய உணவுப் பொருள்.

ஒரு சுத்தமான உணவுப் பொருள்.

தயாரிப்பவர்கள்

தி மேட்டூர் கெமிக்கல் & இன்டஸ்டிரியல் கார்பொரேஷன் லிமிடெட்.

மேட்டூர் டாம், சேலம் ஜில்லா, தென் இந்தியா.

மானேஜிங் ஏஜண்டுகள் :
சேஷசாயி பிரதர்ஸ்
திருச்சினப்பள்ளி.

மதராஸ் ஆபீஸ் :
120. அரமனைக்காரத் தெரு
சென்னை.

The Fashionable
Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's
Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"
COIMBATORE.

THE VASANTHA DYING WORKS.

181. Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dying border yarn and tie yarn etc., undertakes any variety of colour dying at reasonably cheap rates for dying all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colourguaranteed.

சுத்த தனி வசிகரம்

மைசூர் சந்தன சோப்
உனக்கு உறுதியாக
அளிப்பது அதுதான்.

அது குளிர்ச்சியுள்ளது.
மிருதுவானது. கூச்சம்
மிகுந்த சருமங்களிலும்
உபயோகிக்கத்தக்கது.

மைசூர்

சந்தன சோப்

கவர்மெண்ட் சோப்பாக்டரி,
பெங்களூர்.

பார்க்கப் பரமானந்தம் தரும் படம்

காரைக்கால் அம்மையாரில் ஒரு கண் கவரும் கட்டம்.

ஆயிரக்கணக்கான மக்கள் அனுதினமும் கண்டு களிப்படைகிறார்கள்!

மங்கள கரமான தீபாவளியின்
மகோன்னத வெளியீடு
காணத்தவறாதீர்கள்

திவான் பஹதூர்
டைரெக்ஷன்:- T. R. SUNDARAM,
B. A. B. Sc. (Leeds.)

விவரங்களுக்கு:—
மாடர்ன் தியேட்டர்ஸ்
சேலம் மதுரை

199790

வசந்தம்

சந்தா

வருஷத்திற்கு ரூ. 6-0-0

தனிப் பிரதி 0-8-0

ஏஜண்டுகள் இல்லாத
ஊர்களில் ஏஜண்டுகள்
தேவை.

★

அஜாக்ஸ்

உங்கள் தற்காப்புக்காக

உங்கள் விலையுயர்ந்த பொருள்களைக் காக்க **அஜாக்ஸ்** இரும்பு அலமாரிகளையே தேர்ந்தெடுங்கள். திருடர்கள் முயற்சியை வீணாக்குவதிலும் நெருப்பு, கரையான் முதலிய நாசம் உண்டுபண்ணும் பூச்சிகள் இவைகளால் சேதமடைவதை தடுப்பதிலும் தலை சிறந்தவை



வீட்டிலாகட்டும், ஆபீசிலாகட்டும் அஜாக்ஸ் இரும்புச் சாமான்கள் பாதுகாப்புடன், சோபையுமளிக்கின்றன. உறுதியான அமைப்பும், அழகான தோற்றமு முள்ளவை.

பெரும் தீயையும், பக்காத் திருடர்களையும் எதிர்த்து நிற்க, மிகச்சிறந்த பொருள்களைக் கொண்டு ஏற்ற வகையில் செய்யப்பட்டவை இந்த இரும்புப் பெட்டிகள்.



Ajax

PRODUCTS LTD.

106, ARMENIAN STREET, MADRAS.

AS-K-6

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: முருகப்பா & சன்ஸ்.

கிளை ஆபீஸ்: நெ. 5, வெரைட்டி ஹால் ரோடு, கோயமுத்தூர்.

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

(லிமிடெட்.)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ல் கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

மல் சர்டிங்

லாங்கிளாத் சதர்

வேஷ்டிகள் டவல்

தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

A. N. Marudachalam Chettiar

AND

A. Krishnaswami Chettiar

AGENTS

Messrs. Burmah Shell Oil Storage & Distributing Co., of India Ltd.

COIMBATORE

BOC

BOC

Grades

DEPENDABLE

FIRM

FOR

Shell

Grades

THE PRODUCTS OF BURMAH SHELL

MOTOR SPIRITS : MOTOR OILS

GREASES : INDUSTRIAL

LUBRICANTS OF EVERY

DESCRIPTION

★

Fuel Oils : Candles : Shelltox

Etc., Etc., Etc.

REGD. No. M. 4519 VASANTHAM OCTOBER-1943.

Printed at the Vasanta Mills Ltd., Press, and Published by A. Krishnaswamy at 4/12. A. Trichy Road, Coimbatore. Editor : R. Thirugnanasambandam.